கல்கி



பாக்யராஜின்
'பணம்'!

KALKI 20.6.99 ரூ. 4.50





ஜெயிப்பாரா?



• எரியும் சன்விஸ்தா!



• அசோகன் முத்துசாமி, சந்தானசெல்வி- மகன் அனீஸுடன்...

உயிரை உறையச் செய்த 'டைடானிக்' அனுபவம்!

'டைடானிக்' பயணிகள் பற்றித் தெரியும். அந்தப் பயணிகள் போலவே நிஜ வாழ்க்கையிலும் அப்படியொரு அனுபவத்திலிருந்து மீண்டிருக்கின்றனர், 'சன்விஸ்தா' கப்பலின் பயணிகள் 1104 பேர். கடந்த மே 21-ந் தேதி வங்காள விரிகுடாக் கடல் மலாக்கா நீரிணையில் தீப்பிடித்து மூழ்கிய கப்பல்தான் 'சன்விஸ்தா'. பயணிகளில் 126 பேர் இந்தியர்கள். அதில் 40 பேர் மாருதி கார் நிறுவனத்தால் உல்லாசப் பயணம் அனுப்பப்பட்ட முக்கிய டீலர்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐவரில் மூவர் கோவையைச் சேர்ந்தவர்கள். அசோகன் முத்துசாமி-சந்தான செல்வி தம்பதியர் தங்கள் ஒரே மகன் அனீஸுடன் தப்பிய அந்த த்ரில்லான அனுபவத்தை நம்மிடம் விவரித்தார்கள்....

'சன்விஸ்தா', சிங்கப்பூர் 'சன்ஸ்விஸ்தா' நிறுவனத்தின் ஐந்து நட்சத்திர அந்தஸ்துள்ள மிகப் பெரிய கப்பல். 11 மாடிகள் கொண்டது. அதற்குள்ளேயே சினிமா தியேட்டர், கான்ஃபரன்ஸ் ஹால், பார் வசதி, நீச்சல்குளம், லைப்ரரி, விளையாட்டு


கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

அரங்கம். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு மலாக்கா நீரிணை வழியாக இரண்டு நாடுகளை சுற்றிக் காண்பித்து விட்டு, அடுத்த ஞாயிற்றுக் கிழமை திரும்பவும் சிங்கப்பூர் வந்து விடும். மாருதி நிறுவனம் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த உல்லாசப் பயணத்தின் படி மே-19ந் தேதி இரவு 11.00 மணிக்கு தென் தாய்லாந்திலிருந்து புறப்பட்டோம். உள்ளே அவரவர் வயசுக்கேற்றபடி பாட்டு, டான்ஸ், நீச்சல், விளையாட்டு என்று ஒரே அமர்க்களம். தூங்கவே நீண்ட நேரமாகி விட்டது. விடிந்து வெகு நேரமாகித்தான் எழுந்தோம். அன்று வரப்போகும் மிகப் பெரும் ஆபத்து தெரியாமலே திரும்பவும் ஆட்டம், பாட்டம், கேளிக்கை...

சரியாக மதியம் ஒரு மணியிருக்கும். கப்பலின் புகை போக்கிப் பக்கம் கூடுதலாய்க் கொஞ்சம் புகை மண்டலம். கேப்டனின் எச்சரிக்கை ஒலிப்பான் வேறு அலறியது. "எஞ்ஜின் அறையில் ஒரு சின்ன தீ விபத்து ஏற்பட்டுள்ளது. எப்படியும் அதை அணைத்து விடுவோம். பயணிகள் தைரியமாக இருக்கவும். எதற்கும் பாதுகாப்புக்காக எல்லோரும் பத்தாவது அடுக்கில் 'அசம்பிள்' ஆகுங்கள்!'' என குளிர்ச்சியாக ஓர் உத்தரவு வந்தது. முதலாவதாகப் பயந்தது அப்போதுதான். என்றாலும் நிறைய நம்பிக்கை இருந்தது. 'சிறு தீ. எப்படியும் அணைத்து விடுவர்...' என்று எல்லாம் போட்டது போட்டபடி பத்தாவது அடுக்குக்கு ஓடினோம்.

ஒன்றரை மணியிலிருந்து ஆறு மணி வரை எல்லோரும் பத்தாவது மாடியிலேயே கிடந்தோம். அங்கேதான் அவசரத்திற்கு உதவும் படகுகள் பொருத்தப்பட்டிருந்தன. அனைவர் கைகளிலும் கடலில் படகுப் பயணம் செய்வதற்கு ஏற்ற 'லைஃப் ஜாக்கெட்' தரப்பட்டது. உச்சியில் சின்னதாக இருந்த புகை, பெரும் புகையாக மாறியது. கீழே போகவே முடியவில்லை. ஒரே புகை மண்டலம். அங்கே போனால் திரும்பி வர முடியாது. மூச்சுத் திணறி உயிரை விட வேண்டி வரும். கேப்டன் அடிக்கடி வந்து நம்பிக்கையூட்டியபடியே எச்சரிக்கையும் செய்து கொண்டிருந்தார். கடைசியாக ஆறு மணிக்கு மேல் அனைவரையும் லைப் ஜாக்கெட் போடச் சொல்லி உத்தரவு வந்ததும்தான் அப்படியே உறைந்து போனோம். 'இங்கேயே முடிந்தோம்' என்றே முடிவுக்கு வந்து விட்டோம்.

என் மனைவி சந்தானசெல்வி மயக்கமாகிவிட்டாள். மகன் அனீஸுக்கு கொடுக்கப்பட்ட 'லைஃப் ஜாக்கெட்'டோ பெரியவர்கள் அணிய வேண்டியது. அதை எப்படி அணிவது? பயன்படுத்துவது? என்பது பற்றி விளக்கப்பட்டபோது நாங்கள் போகத் தவறி விட்டோம். கைக் கடிகாரத்தை சிங்கப்பூர் நேரத்திற்கு மாற்றியமைக்காததனால் வந்த வினை!



• படகுகளில் பயணிகள்: தூரத்தில் புகையும் சன்விஸ்தா!

அனீஸ் அழ ஆரம்பித்து விட்டான். நிறைய பேர் ஆளாளுக்குக் கட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணீர் உகுத்தனர். நிறைய நேரம் புரியாத குழப்பம். ஒரு மூலையில் ஒரு பெரியவர் சிறுவர்களுக்கான 'லைஃப் ஜாக்கெட்'டை வைத்துத் திணறிக் கொண்டிருந்தார். அவரிடமிருந்ததை இவனுக்கு மாற்றி, இதை அவருக்குமாக மாற்றி கேப்டன் தந்த வரிசைப்படி படகுக்கு வந்த போதும் அனீஸின் அழுகை நிற்கவில்லை.

அப்போது மிகுந்த நம்பிக்கையுடன் என் மகனிடம் பேசினார் அந்த ஆஸ்திரேலியப் பெரியவர்: "கவலைப்படாதே மை பாய். நீ இதில் எரிய மாட்டாய். இந்தக் கப்பல் எரிந்து முழுகுவதைத்தான் அதோ... அந்தப் படகிலிருந்தபடி பார்த்து அதிசயப்படப் போகிறாய். வாழ் நாள் முழுக்க உன்



• லைஃப் ஜாக்கெட் அணிந்து படகுக்குப் போகத் தயாராய்...



உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இந்த அனுபவத்தைச் சொல்லி சொல்லி குதூகலப் படப் போகிறாய்...''

கப்பலில் இருந்த படகுகளின் எண்ணிக்கை பதினைந்து மட்டுமே. நான்கு படகுகள் மட்டும்தான் மோட்டார் பொருத்தியவை. மீதியை ஒவ்வொரு மோட்டார் 'படகும் மூன்று, நான்கு வீதம் பிணைத்து இழுத்துச் செல்ல வேண்டும். எங்கள் படகு மோட்டார் படகு. ஏற்றப்பட்டவர்கள் முப்பதியெட்டுப் பேர். பயணிகள் தவிர்த்துக் கப்பல் ஊழியர்கள் பத்துப் பேர். அதில் இரண்டு பேருக்கு மட்டும்தான் மோட்டார் படகு விடத் தெரியும்.

கப்பலில் பத்தாவது அடுக்கிலிருந்து கடலுக்குள் படகை இறக்கிய போது ஆடின ஆட்டம்; முகத்தில் அறைந்த கடல் காற்று; அலைகள் அடித்த அடியில் ஏற்பட்ட தள்ளாட்டம்... இவற்றிலிருந்து ஆசுவாசப் படுத்திக் கொண்டு எழுந்தபோது, எங்கள் படகில் இரண்டு துவாரங்கள்! அதில் கடல் நீர் பொத்துக் கொண்டு நிறையும் காட்சி. "படகில் ஓட்டை.. மேலே ஏற்றுங்கள்... ஏற்றுங்கள்...!'' என நாங்கள் கத்திய கத்தல் அலைகடல் ஓசையில்- படகு இறக்கினவர்கள் காதுகளில் விழவேயில்லை. அடுத்த படகை இறக்கவிட அவர்கள் போய்விட, கப்பலை விட்டு அரை கிலோ மீட்டருக்கு மேல் நகர்ந்து வந்து விட்டது எங்கள் படகு.

எங்கள் படகுடன் பிணைக்கப்பட்டிருந்தவை நான்கு படகுகள். அவை இதனுடன் மோதி மோதி விலகிய போது எங்களுக்கு உயிரே போய் வந்தது. கடும் இருட்டில், கடலலைகளின் இரைச்சலில் நாங்கள் போட்ட சப்தமும், அடுத்த படகில் உள்ளவர்களுக்குத் தெரியவே வாய்ப்பில்லை. படகு கவிழ்ந்து விடுமோ என்கிற அச்சம். துவாரம் வழியே வரும் நீர் நிரம்பி முழுகி விடுமோ என்கிற பயம். தூரத்தில் எரிந்து புகை கக்கும் கப்பல் வெடித்துச் சிதறி, இப்பகுதி முழுவதும் நெருப்பு வெள்ளமாகி, எல்லோருமே சாம்பலாகி விடுவோமோ என்று ஏகப்பட்ட சந்தேகங்கள். இத்தனைக்கும் இடையில் உயிர் பிழைக்கத்தானே எல்லோருக்கும் ஆசை. அதனால் உள்ளே நிரம்பிய நீரை இருந்த பக்கெட்டில் 'மொண்டு' வெளியே ஊற்ற ஆரம்பித்தோம். இருந்த மோட்டார் 'பம்ப்' மூலமாகவும் வெளியேற்றினோம்.

இரண்டு நாட்களாக அப் பகுதியில் நல்ல மழை. அப்போதும் மழை வருவதற்கான அறிகுறி. திரும்பிய பக்கமெல்லாம் வெட்டும் மின்னல். ஒவ்வொரு முறை மின்னல் வெட்டும் போதும் ஆபத்துக்கு உதவ வேறு உதவிக் கப்பல்தான் வந்து விட்டது என்று உரக்கக் கூவுவோம். ஆபத்துக்கு உதவ வரும் கப்பல் தன் 'ஸ்பார்க்' லைட்டுகளை எரிய விட்டு அப்படி அணைக்கும் என்று படகோட்டி சொல்லியிருந்தான். நாங்களும் 'மின்னல்' தெரியும் போதெல்லாம் படகுகளின் 'ஸ்பார்க்' லைட்டுகளை எரிய விட்டு அணைத்து ஏமாந்து போனோம்.

படகுகள் கப்பலை விட்டு ஓரிரு கி.மீ. தூரத்திற்கு மேல் எங்கும் செல்லக் கூடாது என்பது கேப்டனின் உத்தரவு. காரணம்? ஒன்று, எரிபொருள் போதாது. இரண்டா

(தொடர்ச்சி 81-ம் பக்கம்)

இப்போது தமிழ் மாநிலக் காங்கிரஸுக்கு சோதனையான காலம். கொள்கை வழி நின்று முடிவு எடுப்பதா அல்லது தேர்தல் ஆதாயத்தை எதிர்பார்த்து முடிவு எடுப்பதா என்று மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கிறார்கள். மதவாதத்துக்கும் எதிர்ப்பு; ஊழலுக்கும் எதிர்ப்பு. கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தக் கோஷங்களை வைத்துக் கொண்டு தனியாகத் தேர்தலை சந்திக்க முடியுமா?

"த.மா.கா இல்லாத காங்கிரஸ் ஒரு காலி பாத்திரம். நமது கூட்டணிக்குள் த.மா.காவையும் கொண்டு வந்தால்தான் ஒரு மரியாதை இருக்கும்; ஆதரவு கூடும்!" என்று காங்கிரஸ் தூதர்களிடம் தெளிவாகவே சொல்லி விட்டார் ஜெயலலிதா. மற்றொரு பக்கத்தில், அ.தி.மு.கவிடமிருந்து, காங்கிரஸை மீட்டு, கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து மூன்றாவது அணி அமைத்தால் என்ன என்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார் மூப்பனார். இதில் வெல்லப் போகிறவர் யார்? மூப்பனாரா? ஜெவா?

"கட்சி இப்போது முக்கியமான ஒரு கட்டத்தில் நின்று கொண்டிருக்கிறது. எல்லா வித நிலைகளையும் ஆராய்ந்து, எல்லோரிடமும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பார் தலைவர் மூப்பனார்!" என்கிறார் சோ. பாலகிருஷ்ணன்.

சமீபத்தில் கூடிய அரசியல் விவகாரக் குழு கூட்டம் பல மணி நேரம் நடந்தும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. ஊழல் அ.தி.மு.கவுடன் நரசிம்ம ராவ் காங்கிரஸ் கூட்டு வைத்ததை எதிர்த்து வெளியில் வந்து தனிக்கட்சி கண்டவர்கள் நாம். ஊழல் வழக்குகள் கோர்ட்டில் உள்ள நிலையில்-ஜெயலலிதா சுத்தமானவர் என்று நீதிமன்ற முடிவு இதுவரை வெளிவராத நிலையில்-அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்பது ஒரு கொள்கைச் சறுக்கல் தானே. நரசிம்மராவ் செய்தால் தவறு. இப்போது அ.தி.மு.கவுடன் சோனியா கூட்டு வைத்தால் மட்டும் சரியா? என்பது போன்ற கேள்விகள் அன்றைய கூட்டத்தில் நிறையவே எழுப்பப்பட்டன. அ.தி.மு.கவுடன் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ எந்தக் கூட்டும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் பெரும்பாலான உயர் மட்டப் பிரமுகர்களின் கருத்து என்கிறார்கள் த.மா.கா புள்ளிகள்.

ஆனால் அருணாச்சலம், தனுஷ்கோடி ஆதித்தன், எஸ்.ஆர்.பி. போன்றவர்கள், "தனியாக நிற்பது தற்கொலைக்குச் சமம். தேர்தலில் அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி சுமாரான வெற்றியை ஈட்டினாலும் கூட த.மா.கா. கரைந்து போகும் ஆபத்து இருக்கிறது" என்பதைச் சுட்டிக் காண்பித்தார்களாம்.

"இப்போதெல்லாம் தேர்தல் கூட்டைப் பற்றி மக்கள் அத்தனை சீரியஸாக எடுத்துக் கொள்வதில்லை. எனவே தைரியமாக அ.தி.மு.கவுடன் கூட்டணி என்று முடிவெடுப்



ஜெயிப்

போம். தேர்தலில் நான்கைந்து இடங்களில் வெற்றி பெற்றால் தானே கட்சி கட்டுக் கோப்புடன் இருக்கும்" என்பது அ.தி.மு.க. கூட்டணிக்கு ஜே போடுபவர்களின் வாத மாம்!

"உடனே முடிவெடுக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்னர் வேறு கட்சிகளின் பார்வையில் பல மாறுதல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே தலைவர் பொறுமை காக்கிறார்" என்கிறார் சோ.பா.

"நீங்களெல்லாம் என்ன முடிவெடுக்கிறீர்களோ அதன்படி செயல்படுவது என் பொறுப்பு. ஜனநாயகத்தில் தேர்தல் வெற்றி தோல்வியைப் பொறுத்துத் தானே கட்சிகளின் செல்வாக்கு கணிக்கப்படுகிறது" என்கிறாராம் மூப்பனார். ப. சிதம்பரம், அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பதைக் கடுமையாக எதிர்க்கிறார் என்பது இப்போது ரகசியமல்ல. காங்கிரஸ் தலைமையை கன்வின்ஸ் செய்து அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து அதை மீட்கும் பணியை சிதம்பரத்திடம் மூப்பனார் ஒப்படைத்திருப்பதாக த.மா.கா. பிரமுகர் ஒருவர் சொல்கிறார். ப.சி.யும் தமக்கு வேண்டிய காங்கிரஸ் பிரமுகர்கள் மூலம் "ஜெயலலிதா நம்பகத் தன்மை இல்லாதவர். அவரோடு கூட்டணி வைப்பது காங்கிரஸுக்கு மாபெரும் தலைவலியாக முடியும்" என்பதை சோனியாவிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.



பாரா?

பாராளுமன்றத் தொகுதி உடன்பாட்டில் எம்.ஜி.ஆர். பார்முலாவைக் கையாளாமல், ஐந்தாறு இடங்களை மட்டும் தருவேன் என்று கண்டிப்பாக இருக்கும் ஜெ.யின் போக்கு காங்கிரஸுக்கு வருத்தத்தை உண்டாக்கியிருக்கும் நிலையில், அ.தி.மு.கவுடன் நெருங்கி வரும் வேகத்தை தற்போது காங்கிரஸ் குறைத்துக் கொண்டிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். தி.மு.க.மீதும் த.மா.காவினருக்கு வருத்தம் இருக்கிறது.

"தமிழ்நாட்டில் மூன்றாவது அணி என்ற மூச்சு கூட விடக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். மூன்றாவது அணி என்று ஒன்று அமைந்தால் அது வோட்டைப் பிரித்து தி.மு.க.–பா.ஜ.க. கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பைக் கூட்டும் என்கிறார்கள் அவர்கள். "தமிழ்நாட்டில் த.மா.காவுக்கென்று கொஞ்சம் செல்வாக்கு இருக்கிறது என்பது உண்மைதான். அதற்காகத் தனியாகப் போட்டியிட்டோ அல்லது சில உதிரிக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தோ செயல்பட்டால் அது மதவாதத்தை ஆதரிப்பதில்தான் போய் முடியும். சுயநலம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ பா.ஜ.க. அரசை ஜெயலலிதா கவிழ்த்தார். அதைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் மதவாத

அரசை தில்லியில் வர விடாமல் தடுப்பது தான் இந்தத் தேர்தலில் முக்கியமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயம்.

"மதவாதத்தை விட ஊழல்தான் ஒழிக்கப்பட வேண்டியது என்று சொல்லும் தி.மு.க.வினருக்குப் பழைய விஷயம் ஒன்றை நினைவுபடுத்துகிறோம். எமர்ஜென்சியின் போது கருணாநிதியின் மீது ஊழல் புகார்கள் காரணமாக சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. ஆனால் தி.மு.க. தீவிரமாக எமர்ஜென்சியை எதிர்த்தது. கமிஷன் அமைத்து ஊழலை விசாரித்தார்கள் என்ற காரணத்திற்காக தி.மு.கவை நாங்கள் விட்டுக் கொடுத்து விடவில்லை. தொடர்ந்து 1977ல் பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டோம். எனவே தேர்தலுக்குத் தேர்தல் முன்னிலைப்படுத்தப்படும் பிரச்னைகளைப் பொறுத்தே கூட்டணிகள் அமைக்கப்பட வேண்டும். பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி வைத்துக் கொள்ள முடிவு செய்தால், அதைத் தொடர்ந்து வரும் சட்டமன்றத் தேர்தலிலும் அ.தி.மு.கவுடன் கூட்டு வைத்துக் கொள்வோம் என்று இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. மாநிலத் தேர்தல்களில் ஊழல் பிரதானமாகப் பேசப்படுமானால் கூட்டணிகளின் நிலையில் மாறுதல் ஏற்படலாமே!'' என்கிறார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர்.

கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தமட்டில் அ.தி.மு.கவின் செல்வாக்கு கொஞ்சமும் குறையவில்லை என்பதுதான். "ஜெயலலிதாவின் தடாலடி அரசியல் அ.தி.மு.கவின் தொண்டனை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. எப்படியாவது அ.தி.மு.க. செல்வாக்குப் பெற்று மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வராதா என்றுதான் ஒவ்வொரு அ.தி.மு.க தொண்டனும் ஏங்கிக் கொண்டிருக்கிறான். நாடாளுமன்றத் தேர்தலில் பல ஜாதிச் சங்கங்களின் ஆதரவைப் பெற்றுவிட்டார் ஜெயலலிதா. அதேபோல் மைனாரிட்டி மக்கள் முழுமையாக அ.தி.மு.க. கூட்டணியை ஆதரிக்கும் வாய்ப்பு இருக்கிறது. நாங்களும் அந்தக் கூட்டணியில் இருக்கிறோம். ஒரு பலமான கூட்டணியாக அ.தி.மு.க. அணி உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் த.மா.கா. தனி ஆவர்த்தனம் வாசித்துக் கச்சேரியை சொதப்பிவிடக் கூடாது. ஒரு மாநிலக் கட்சியாக மாறிவிட்ட த.மா.காவுக்கு, சட்டமன்றத் தேர்தல்தான் முக்கியமான ஒன்று. இப்போது மதவாதத்திற்கெதிரான வோட்டுக்களைப் பிரிய விடாமல் காப்பாற்றும் பெரும் பொறுப்பு த.மா.காவுக்கு இருக்கிறது!'' என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள்.

அ.தி.மு.கவை விலக்கிவிட்டு, காங்கிரஸ், த.மா.காவுடன் இணைந்து தாங்கள் தனி அணி காண்பது கூட சரிப்பட்டு வராது என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். 'தாங்கள் சொல்வதுதான் சரி' என்று பிடிவாதத்துடன் இருக்கும் கம்யூனிஸ்டுகள் மீது கடுமையான கோபத்துடன் இருக்கிறார்கள் த.மா.கா.புள்ளிகள். "எங்களின் உணர்வை சரிவரப் புரிந்து கொள்ளவில்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது!'' என்கிறார் ஒரு த.மா.கா. பிரமுகர்.

"அவர்களுடைய சங்கடம் எங்களுக்குப் புரிகிறது. வோட்டுக்கள் சிதறா வண்ணம் ஏதாவது ஒரு ஏற்பாட்டுக்கு த.மா.கா. ஒத்துழைக்கும் என்று நம்புகிறேன். அதற்கான முயற்சிகளில் நாங்கள் இறங்குவோம்'' என்கிறார் வலது கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் நல்லகண்ணு. த.மா.கா. போட்டியிடும் தொகுதிகளில் அ.தி.மு.க. அணி வேட்பாளர்களை நிறுத்தாமலும் அ.தி.மு.க. அணி நிற்கும் தொகுதிகளில் த.மா.கா போட்டியிடாமலும் இருக்கும் ஒரு ஏற்பாடு செயல்பட வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள்.

"மூன்றாவது அணியை த.மா.கா. விரும்புகிறதோ இல்லையோ. தி.மு.க. கூட்டணி விரும்புகிறது. காரணம் வோட்டுகள் பிரியும் என்பதுதான். சமீபத்தில் ஒரு பேட்டியில் கலைஞர் 'தைரியமும் துணிச்சலும் இருந்தால் மூன்றாவது அணி உருவாகும்!' என்று சொல்லியிருக்கிறார். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் 'த.மா.கா. அ.தி.மு.கவுடன் போகக் கூடாது' என்று வலி



''தப்பா நினைச்சுக்காதீங்க. கடன் கொடுத்தா 'ஃப்ரெண்ட்ஷிப்' கெடும்னு பெரியவங்க சொல்றாங்க...''

''யார் சொன்னது? கடனை திருப்பிக் கேட்டாத்தான் 'ஃப்ரெண்ட்ஷிப்' கெடும். நீங்க தாராளமா கடன் தரலாம்!''

– சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

யுறுத்துகிறார். இவர்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?'' என்று கேட்டார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவர்.

இப்போதைய நிலையில் தி.மு.க.வுடன் மீண்டும் நெருங்கி வருவதற்கான வாய்ப்பு த.மா.காவுக்கும் இல்லை. அ.தி.மு.கவோ, த.மா.காவையும் அணைத்துக் கொண்டு போனால் வெற்றி வாய்ப்பு முழுமையாக இருக்கும் என்று கருதுகிறது. ''சென்ற பாராளுமன்றத் தேர்தலில், பல்வேறு தொகுதிகளின் முடிவைச் சற்று உன்னிப்பாகப் பரிசீலித்தால், வோட்டுக்கள் பிரிந்தது காரணமாக தி.மு.க. அணி பல தொகுதிகளில் தோற்றது பளிச்சென விளங்கும். அதே போன்ற ஒரு நிலை இந்தத் தேர்தலில் எங்களுக்கு ஏற்பட புரட்சித் தலைவி விரும்பவில்லை. எந்த ஒரு சிறு அமைப்பையும் விடாமல் நாங்கள் எங்களுடன் சேர்த்துக் கொள்ளக் காரணம் இதுதான். த.மா.காவிற்கு கணிசமான செல்வாக்கு இருக்கிறது. குறிப்பாக எங்களுக்கு ஆதரவு கொடுக்காத, படித்த, நடுத்தர மக்களின் ஆதரவு த.மா.காவிற்கு இருக்கிறது. த.மா.கா. எங்களுடன் இணைந்தால் எங்கள் அணிக்கு கண்ணியம் கூடும். இது தவிர, தமிழகத்தில் வெறும், எலும்புக் கூடாக உள்ள காங்கிரஸுக்கு த.மா.கா. இணைந்தால்தான் ஆக்ஸிஜன் கிடைக்கும்; வேலை செய்ய தொண்டர்கள் கிடைப்பார்கள். ஆனால் அதற்காக த.மா.காவை ஒரேயடியாக நாங்கள் கெஞ்சிக் கூப்பிட மாட்டோம். கூடிய மட்டில் எங்கள் அணிக்கு வலுவூட்டும் பணியில் நாங்கள் ஈடுபடுவோம். நிலைமையைப் புரிந்து கொண்டு அவர்கள் நல்ல முடிவு எடுக்க வேண்டும்'' என்று சொல்கிறார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஒருவர். தமிழகம் முழுவதும் உள்ள த.மா.கா. தொண்டர்கள் தி.மு.க. மீது கடும் வெறுப்புடன் இருப்பதாகவும், அவர்கள் அ.தி.மு.கவுடன் கூட்டணியை விரும்புகிறார்கள் என்றும் சொல்கிறார் அவர்.

இந்தச் சூழ்நிலையில்தான் மூப்பனார் முக்கிய பிரமுகர்களுடன் தொடர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார். இறுதியில் அ.தி.மு.கவுடன்தான் த.மா.கா. கூட்டணி வைத்துக் கொள்ளும் என்று கிளப்பி விடப்படும் வதந்திகள் த.மா.காவினரை மிகவும் பாதித்திருக்கிறது. கடந்த தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து இருபது இடங்களில் போட்டியிட்டது த.மா.கா. இந்த முறை அ.தி.மு.கவுடன் இணைந்தால் அவ்வளவு இடங்கள் ஒதுக்கப்படும் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்க முடியாது. எனவே கூட்டணி என்று முடிவெடுத்தால் கூட தொகுதி உடன்பாடுகள் பெருத்த பிரச்னையை உருவாக்கலாம். அ.தி.மு.கவுடன் இணைந்து தேர்தலைச் சந்தித்து, துரதிர்ஷ்டவசமாக தேர்தலில் தோல்வியுற்றால் கட்சியின் எதிர்காலமே கேள்விக் குறியாகிவிடும். அதே போல் தனியாக நின்று தோல்வியைத் தழுவினாலும் கட்சி எதிர்காலத்தில் காங்கிரஸுடன் கலந்து விடும் வாய்ப்பு இருக்கிறது.

மூன்றாவது அணி அமைக்க மற்ற கட்சிகளின் ஒத்துழைப்பும் இல்லை. அ.தி.மு.கவை விட்டுப் பிரிந்து தனி அணி அமைக்க இதுவரை காங்கிரஸ் கட்சியும் துணியவில்லை. சோனியாவின் வேண்டுகோளை ஏற்க வேண்டிய தர்மசங்கடமும் மூப்பனாருக்கு இருக்கிறது.

''தேர்தல் கூட்டு என்பது கொள்கை அடிப்படையில் வைக்கப்படுவதல்ல என்பது தமிழகத்தில் பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. த.மா.கா. அப்படிப்பட்ட சராசரிக் கட்சிகளில் ஒன்றல்ல என்பதை மூப்பனார் மக்களுக்குச் சொல்ல விரும்பினால் இந்தத் தேர்தலில் நிற்காமல் ஒதுங்கியே இருக்கலாம். இதுபோன்ற நிலையில் குறைந்தபட்சம் கட்சியின் மரியாதையாவது கூடுமே. ஆனால் இப்படிப்பட்ட முடிவெடுக்க பெரிய துணிச்சல் தேவை'' என்கிறார் தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

மூப்பனார் எடுக்கப் போகும் முடிவு இந்தத் தேர்தலை மட்டுமல்ல, எதிர்காலத் தமிழக அரசியல் காட்சியையே மாற்றும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

— ப்ரியன்

அட்டை(ஜெ)வண்ணப்படமும்,
படங்களும்: **சௌந்தர்ராஜன்**



''என் மனைவிக்கு என்ன ஆச்சன்னே தெரியலீங்க..''
''ஏன்? என்ன செய்றாங்க?''
''அடுப்புல பாலைக் காய வச்சிட்டு, 'பொறுத்தது போதும்! பொங்கி எழுன்னு' கத்தறா!''
– பர்வதவர்த்தினி

ராஜ தர்பார்

● சோனியாவின் ஜன்பத் மாளிகையிலிருந்து ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் பல ஆசிய தேசங்களுக்கு ஆகும் ஃபோன் செலவுகளே இந்திய அரசுக்கு லட்சக்கணக்கான ரூபாய்களை இழுத்து விடுவதைப் பற்றி விமர்சனம் எழுந்துள்ளது. 'மக்கள் மேல் மதிப்பிருந்தால் இதை உடனே நிறுத்துக' என்ற கோஷம் கிளம்பும் போலிருக்கிறது. 'தங்கள் தேசத் தலைவர்கள் என்ன உணவு உண்கிறார்கள், என்ன ஆடை உடுத்துகிறார்கள் மக்களின் பணம் அதற்காக எவ்வளவு செலவிடப்படுகிறது என்றெல்லாம் பட்டியலிடும் அயல்நாட்டுப் பத்திரிகைகள் சோனியாவின் மீது மட்டும் ஏன் பாரபட்சம் காட்டி இந்த இத்தாலியரை இந்தியத் தலைவியாக உயர்த்துகின்றன?" என்று ஒரு பிரபல தினசரியின் டெல்லி ஆசிரியர் ஒரு 'இன்டர்நெட்' பத்திரிகையில் கேள்வி எழுப்பியிருக்கிறார். சோனியாவின் படிப்பு (பள்ளியிறுதி வரை), பொதுவாக நினைக்கப்படுவது போல் ஆக்ஸ்ஃபோர்டில், கேம்ப்ரிட்ஜில் அவர் பெயர் இல்லாதது, ஒரு வீட்டில் வேலை செய்து அவர் ஜீவனத்தைக் கொஞ்ச காலம் கழித்தது போன்ற எல்லா விவரங்களும் வெளி வர வேண்டும் என்று எழுதியிருக்கிறார் டைம்ஸ் ஆஃப் இந்தியா டெல்லி ஆசிரியர் மோனு நலபாட். ஏனெனில் ஒரு முதிர்ந்த ஜனநாயகத்தில் மக்கள் தங்களைத் தலைமை தாங்க வருபவரைப் பற்றிய சகல விவரங்களையும் அறிந்திருக்க வேண்டும்.




• சோனியா: விவரம் தேவை!

● அமைச்சர்களின் உதவியாளர்கள் அடிக்கும் கொட்டம் அமைச்சர்களையும் மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. ரங்கராஜன் குமாரமங்கலத்திற்கு உதவி செய்ய தமிழகத்திலிருந்து குட்டி என்பவர் அனுப்பப்பட்டார். இவர் சன்னென்று விழுவது பலத்த விமர்சனத்திற்குள்ளாக, மீண்டும் விந்திய மலைக்குத் தெற்கே அனுப்பப்பட்டு விட்டார். நடராஜன், ராமகிருஷ்ணன் என்ற போயஸ்தோட்டத்தின் கண்கள் காதுகளாகச் செயல்பட்ட அ.தி.மு.க அமைச்சர்களின் உதவியாளர்களும் 'பேக் டு த பெவிலியன்'. இப்போது அஷோக் சுப்பிரமணியன் என்ற தமிழ் உதவியாளர் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸுக்கு. எளிதில் அணுகக் கூடிய ராணுவ அமைச்சரை 'ஹாய் ஜார்ஜ்' என்று ஜர்னலிச பூமியில் முளைத்து மூன்றிலை விடாத ஒரு 'கப் ரிப்போர்ட்டர்' கூட விளித்துப் பழகும் தன்மை வாய்ந்தவரை, இந்த உதவியாளர் பத்திரிகைத் தொடர்பிலிருந்து வெற்றிகரமாகத் தனிமைப் படுத்திக் கொண்டிருக்கிறார். ஆக ஜார்ஜ் நிறைய விமர்சனங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இப்

போது வாழப்பாடி ராமமூர்த்தியின் உதவியாளர் செல்வராஜ் எந்தப் பிரச்னையுடனும் எவரும் அமைச்சரைப் பார்க்க விடாமல் செய்து கொண்டிருக்கிறார். 'காபந்தின் உதவியே' இந்த 'தர்பார்' செய்தால் காபந்து நிலையரசானால் என்னவெல்லாம் செய்யும் என்றார் ஒரு மனுதாரர்.

அமைச்சர்களின் மாட்சிமை இருக்கும் போதே 'வேறு பலன்'களைச் 'சம்பாதித்து' விடுகிறார்கள் உதவியாளர்கள் என்றார் ஒரு ஹிந்திப் பத்திரிகையாளர். அதாவது இன்னின்ன காரியத்திற்கு இவ்வளவு ரேட் என்று ஹோட்டல் மெனுகார்ட் போலப் போய் விட்ட 'அன்பளிப்பு' விவகாரத்தில், காரியம் நடக்கிறதோ இல்லையோ அமைச்சரைப் பார்க்க வைப்பதற்கே இவ்வளவு என்ற புது ஐட்டம் ஒன்றும் சேர்ந்து விட்டதாம்.

● அமர், அக்பர், அன்டனி என்றழைக்கப்படும் பவார் - அன்வர் - சங்மா மும்மூர்த்திகள் சோனியா கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து இன்னும் கொஞ்சம் நஞ்சமிருக்கும் 'சுய சிந்தனையாளர்களையும்' ஓரங்கட்ட முயற்சிகள் துவங்கியிருக்கின்றன. கட்சியில் சோனியாவுக்குப் பிறகு தாங்களே பலம் பொருந்தியவர்கள்



• வாஜ்பேயி: எதிர்ப் பிரசாரம் உஷார்!



• சீதாராம் கேசரி: அழுது விட்டாராம்!

என்ற தோற்றத்தை நிலை நிறுத்த அர்ஜுன் சிங், ப்ரணாப் குமார் முகர்ஜி, ஆர்.கே. தவன் என்று பலரிடையே போட்டி. இவர்களுள் ஒருவர்தான் கட்சியில் இரண்டாவது ஸ்தானம் என்று நினைத்துக் கொண்டிருந்தீர்களென்றால் நீங்கள் உண்மையிலேயே அசடுதான். நிஜமாகவே இரண்டாவது ஸ்தானத்தில் தம்மை நிலை நிறுத்திக் கொண்டுள்ளவர் சோனியா மாளிகையின் காவற்காரர் என்றழைக்கப்படும் தட்டச்சர் - கம் உதவியாளர் வின்ஸென்ட் ஜார்ஜ். இவரன்றி எவ்வனுவும் அசையாதது மட்டுமல்ல, ஒரு ஈ எறும்பு, கொசு கூட நுழைய முடியாது ஜன்பத் மாளிகையில். எனவே அர்ஜுன் சிங் முதல் ஒரு குக்கிராம வட்டச் செயலாளர் வரை இன்றைக்கு ஜார்ஜை 'குஷி மூடில்' வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம்!

● சோனியா கட்சியின் தேசியக் குழு நடக்கும்போது இன்னும் சிலர் அமர்-அக்பர்-அன்டனி சார்பில் பேசுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. பார்த்தார் ஜார்ஜ். அழைத்தார் பழைய சஞ்சய் ஆப்தர்களை. இவர்கள் குண்டர்படை வேலைகளில் கில்லாடிக் கிட்டுகள். ஆப்தர்களுக்குச் சில கட்டளைகளைக் காதோடு காதாகப் போட்டார் ஜார்ஜ். அவ்வளவுதான்! மரங்கள், மாளிகை மதில் சுவர்கள் என்று பல இடங்களிலிருந்து ஒரு 'பழுவேட்டரையர் படை' கிளம்பியது. அவர்களிடம் முதலில் மாட்டிக் கொண்டவர் கட்சியின் முன்னாள் தலைவர் சீதாராம் கேசரி. மூக்குக் கண்ணாடி அறுபட்டு, தொப்பி கிழிபட்டு பஞ்ச கச்ச வேஷ்டி குலைந்து, கார் கண்ணாடிகள் நொறுங்கி கட்சி அலுவலகத்திற்குள் தொபீலென்று வந்து விழுந்தவர், எழுந்து அமர்ந்து சிறிது நேரம் அழுது விட்டாராம். கிழிந்த உடைகளைப் பார்த்துக் கொண்டு கேட்க நேர்ந்த வசவுகளை எண்ணிக் கொண்டு அழுது எழுந்தவரின் வேஷ்டி நழுவ, உடுக்கை இழந்தவன் கையாய் விரைந்தார் சுஷில் குமார் ஷிண்டே. அவரோ பஞ்ச கச்சத்தின் பின் பகுதியை முன் பகுதியில் இணிக்க பின் மற்றொருவரால் இதுவும் சரிப்படுத்தப்பட்டு ஒரு வழியாக அமர வைக்கப்பட்டார் காங்கிரஸ் ஸ்டைலில் கேஷரி. 'பபடையின்' அடுத்த தாக்குதல் ஜிதேந்திர பிரசாத், ஆர்.கே. தவன், ராஜேஷ் பைலட் என்று



• பிரமோத் மகாஜன்: வாங்கிய டோஸ்!

தொடர்ந்தது. தவன் தன் விலையுயர்ந்த ஸ்விஸ் கைக் கடிகாரம் காணாமல் போயிருந்ததை உணர்ந்தார், கட்சி அலுவலகம் உள்ளே வந்தவுடன். பிறகு கண்டெடுக்கப்பட்ட கடிகாரம் உருவம் தெரியாமல் சிதைக்கப்பட்டிருந்தது.

● இத்தாலியப் பிறப்பை எதிர்கொள்ளத் தயாராகிறது சோனியா கட்சி. ராஜீவ் காலத்திலிருந்து பிரபலமானது dirty tricks department (DTD). இந்திரா காலத்திலிருந்து எதிர்க்கட்சியினரைத் தர்ம சங்கடப்படுத்த உபயோகிக்கப்பட்ட இந்த DTD உறுப்பினர்கள் மிகச் சிறந்த மீடியா நிர்வாகிகள். பத்திரிகைகளுக்குப் பல செய்திகளை 'plant' செய்வார்கள். ஆக வாஜ்பேயின் தத்துக் குடும்பம், மருமகன் மற்றும் அவர் திருமதி கௌலுடன் live in partner ஆக வாழ்வது போன்ற பல விவரங்கள் திரட்டப்பட்டுச் செய்திகளாய்த் தயாராகின்றன.

● பி.ஜே.பி.யின் பெருந்தலைகள் பெருங்கோபத்திலிருக்கின்றன. இந்தப் பழுத்த பழங்கள், இந்தக் கலர் டீ.வி யுகத்தில் இளைய தலைமுறையினரின் பரிகாசங்களாய் கேலிச் சித்திரங்கள் போல் தோன்றுவதால் இவர்கள் டீ.வி முன் தோன்றக் கூடாது என்று உத்தரவு போட்டு விட்டது கட்சித் தலைமை. யார் யார் தோன்றலாம் என்னென்ன பேசலாம் என்று ஒரு பட்டியலும் போட்டு விட்டது. டீ.வி. விவாதங்களில் யார் யார் கட்சி சார்பில் கலந்து கொள்ளலாம் என்றும் கூறி விட்டது. இது கட்சியின் 'அழகு வாய்ந்த' முகங்களை ஒளிப்பெட்டியில் தோன்ற வைத்து கட்சி இமேஜை வளர்க்க! ஆக கே.எல். ஷர்மா, ஜே.பி. மாத்தூர் போன்ற பெரிசுகள் இந்தப் பட்டியலிலிருந்து நீக்கம்! தலைவர் குஷபாவ் டாக்கரேகூட இதற்கு விதிவிலக்கல்ல.

● இந்திய உளவுத்துறை (இன்ட்டெலிஜென்ஸ் பீரோ என்ற ஐ.பி.) ரஜோரி – பூஞ்ச் செக்டாருக்கும் பாகிஸ்தான் ஆயுதப் பயிற்சி பெற்ற கூலிப் படையை அனுப்புமென்று ஒரு தகவலை அனுப்பியிருக்கிறது. பாகிஸ்தான் உளவுத் துறை ஐ.எஸ்.ஐ.க்கும் சீக்கிய தீவிரவாதிகளுக்கும் மீண்டும் நல்லுறவு மலர்ந்து விட்டதாகவும் அதன் விளைவு டெல்லி சாந்தனி சௌக்கில் வெடித்த குண்டு என்றும் கூறுகிறது மற்றொரு குறிப்பு.

இதனிடையில் 'ரா' (ரிஸர்ச் ஏண்ட் அனலைஸிஸ் விங்) என்றழைக்கப்படும் அந்நிய உளவு விவகாரத்துறைக்கும் ஐ.பி.க்கும் நிரந்தரமாகத் தொடரும் பனிப்போர், கார்கில் விஷயத்தில் நடந்த உளவுத் தோல்விக்குக் காரணம் என்று பேசப்படுகிறது. குஜராத்தில் மீண்டும் ஊடுருவாளர்களின் நடவடிக்கைகள் துவங்கலாம் என்றும் ரகசியக் குறிப்புகள் கூறுவதாகத் தகவல்கள்.

● செய்தி ஒலி-ஒளிபரப்பு அமைச்சர் பிரமோத் மஹாஜன் பாகிஸ்தான் டீ.வி (P.TV)ஐத் தடை செய்த பிறகு ஒரு உயர் மட்டக் குழு கூட்டத்தைக் கூட்டினார். கார்கில் பிரச்னையில் இந்தியக் கருத்தை ஒழுங்காக ஒலி-ஒளி பரப்பவில்லை என்று அதிகாரிகளைக் கடிந்து கொண்டார். பின் எப்படியெல்லாம் ஒலி-ஒளி பரப்பின் தரத்தை உயர்த்தி, இந்தியக் கருத்தை உலக அளவில் சரியாக ப்ரொஜக்ட் செய்யலாம் என்று விவாதித்தார். கூட்டத்திலிருந்து வந்த ஓர் அதிகாரி, முதலில் அமைச்சர் இயந்திர நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளட்டும் என்று ஒரு 'டோஸ்' விட்டார். அதாவது கார்கில் பகுதியில் தூர்தர்ஷனுக்கு 'குறை சக்தி ஒளிபரப்புச் சாதனமே' உள்ளது. பாகிஸ்தானுக்கோ மிகச் சக்தி வாய்ந்த ஒன்றாம். ரேடியோவுக்கோ ஒரு லோக்கல் வேவ் ஸ்டேஷன்தான். அதுவும் மார்கோனி காலத்தது. 'இதை வைத்து எந்த எழவைக் கூட்ட?' என்றார் அந்த அதிகாரி.

● தமது பினாமி முதலமைச்சர், மனைவி ரப்ரி தேவி அரசில் இன்னும் எம்.எல்.ஏ, எம்.பி ஆகத் தேவையான வயதுக்குக்கூட வராத ராகேஷ் குமாரை அமைச்சராக்கி விட்டார் லாலுபிரசாத். அதுமட்டுமல்ல ஒரு கொலை வழக்கில் தேடப்படுபவர் என்றும் செய்திகள். 20 வயதான ராகேஷ் சமதாக் கட்சி எம்.பி சகுனி (ஆஹா என்ன பெயர்ப் பொருத்தம்) சௌத்திரியின் மகன். சமதாவை உடைத்ததற்குப் பரிசு கொடுக்க லாலு செய்தது இந்தக் காரியம். ஆனால் சமதா பீஹார் மாநிலத் தலைவர் ரகுநந்தன் ஜா, கவர்னருக்கு அளித்த மனுவில் இந்த விவரங்களைக் கொடுத்ததுடன், ராகேஷ், ஒரு வழக்கில் ஜாமீன் பெற தன் வயது மற்றும் பிற விவரங்களை அளித்ததையும் சாட்சியாக இணைத்திருக்கிறார்!

ஒற்றாடல்: **இந்த்ரப்ரஸ்தன்**

முதல்வர் மகள்

சீதா ரவி

ஒரு புஷ்ப பல்லக்கு சுமக்கும் மகிழ்ச்சியுடன் பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்தார் மாரி. கண்ணாடி குப்பிக்குள் அடைத்து வைத்த வண்ணத்துப் பூச்சிகள் போல் படபடத்துத் துடிக்கும் பெண்கள். எல்லாம் பதினேழு, பதினெட்டு வயது.

"சைலன்ஸ்! வில் யூ ப்ளீஸ் பே அடென்ஷன்? ஐ வாண்ட் சைலன்ஸ் திஸ் வெரி மினிட்!"

நஸ்ரீன் பானு துப்பட்டாவைப் புடைவைத் தலைப்பாகப் படரவிட்டு மிஸஸ் பத்மா போலவே பேசிக் காட்டியபோது பருத்திப் பூ வெடித்த மாதிரி பஸ்ஸே சிரித்தது. பத்மாவும் சிரித்துக் கொண்டாள்.

மாரி சிரமப்பட்டு சாலையைக் கவனித்தார். ஹம்சாபுரம், லக்ஷ்மிபுரம் என்று சிறு ஊர்கள் கடந்து சென்றன. மலைப் பாதை நெருங்கி விட்டது. இந்தத் தேன் குடித்த நரிகளை மூன்று மணி நேரத்தில் கொடைக்கானலில் சேர்த்து விடலாம். ஆனால் கொஞ்சம் அமைதி காத்தால் பரவாயில்லை... இப்படி நின்று, ஆடி, பாடி, ஓடி, சாடி பஸ்ஸை விளையாட்டு மைதானமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் எண்ணத்தைப் படித்தது போல் பத்மா மேடம் எழுந்து நின்றாள்.

"சைலன்ஸ்! வில் யூ ப்ளீஸ் பே அடென்ஷன்...?"

'க்ளீச்'சென்று பச்சைக் கிளி குரலில் ஒரு சிரிப்பு எழுந்தது. தொடர்ந்து கிணு கிணுவென்று விதவிதமான சிரிப்பொலிகள்.

"சுகந்தி! சியாமளா! நஸ்ரீன்! ப்ளீஸ்... நிஜமாகவே அமைதியாயிருங்க. மலைப் பாதையை இப்போ நெருங்கிக்கிட்டிருக்கோம். ரொம்ப கலாட்டா பண்ணினா ஓட்டறவருக்குக் கஷ்டமாயிருக்கும். யாரும் அவங்கவங்க இடத்தை விட்டு எழுந்திருக்கக் கூடாது. மூணு மணி நேரத்துல போய்ச் சேர்ந்துடலாம்."

அரசமரத்தில் அடையும் அந்திநேர மைனாக் கூட்டமாக அந்தப் பெண்கள் சலசலத்து மெள்ள அடங்கினார்கள். மலைப் பாதை ஏற ஆரம்பித்ததும் ஒரு பிரமிப்பு வந்து கவிந்தது. சமதளத்தை விட்டகன்று உயரத்தில் ஏறும் சின்ன கிறுகிறுப்பு; இருபுறமும் காடுகளடர்ந்த பாதையினூடே பயணம் செய்யும் நூதனம், இன்னும் உயரத்தில் போனதும் மேலும் கீழும் சுற்றிலும் மரம் மூடிய மலைகளிடையே தொட்டில் கட்டி ஆடுகின்ற சாகச உணர்வு; ஒரு திருப்பத்தில், மலையுச்சியிலிருந்து வெள்ளிக் கம்பியாக மினுமினுவென்று விழுகிற அருவியின் திடீர் அழகு... கொடைக்கானல் மலைப்பாதை ஓர் அற்புதமான ஆலாபனையைப் போல் அவர்களைப் படிப்படியாக ஆட்கொண்டது.

'மலையமாருதம்' என்று நினைத்துக் கொண்டாள் பத்மா. கொள்ளை கொள்ளையாக இதமும் உப்புக்கல் அளவுக்கு ஒரு இனிய சோகமும் கலந்திழையும் அழகான ராகம். இயற்கை விரிக்கும் இந்தக் காட்சியின் கிளர்ச்சியை எந்த இடத்திலும் சிலுப்பியெழவைக்கக்கூடிய மானுட கற்பனை! அதோடு முத்துக்குமாருக்குப் பிடித்த ராகமும் கூட!

அவன் நினைவு வரும் கணங்களிலெல்லாம் வாழ்க்கையே ஒரு நெடிய பெருமூச்சாகி விட்ட பளு அழுத்துகிறது. அப்படியும் தன்னால் கடமைகளாற்றி இயங்க முடிகிறதே என்று வியப்பதுண்டு பத்மா.

கொடைக்கானல் என்றதுமே அப்பா சொல்லித்தான் அனுப்பினார்.


"ரொம்ப எமோஷனலா ஆயிடாதே பத்மா. பெரிய பொறுப்பு. உன்னை நம்பித்தான் ப்ரின்ஸிபல் அறுபத்து மூணு அடங்காப்பிடாரிகளை அனுப்பறாங்க..."

"அவங்க ஒண்ணும் அடங்காப்பிடாரிங்க இல்லப்பா... மேலும் எச்.ஓ.டியும் கூட வர்றாங்க. மிஸஸ் வசந்தா. லேப் அஸிஸ்டெண்ட் சரோஜாவை கெமிஸ்ட்ரி டிபார்ட்மெண்ட்லேருந்து அனுப்பிச்சிருக்காங்க. டிரைவர் மாரி வேற அவர்

அண்ணனையும் அழைச்சுட்டு வர்றார்..."

"ஆனாலும் ஒவ்வொருத்தரும் நூறு சதம் பொறுப்பும் தங்களோடதுன்னு நினைச்சுக்கணும்மா.. இல்லாட்டி இப்படி ஒரு இளமைப் பட்டாளத்தை மேய்க்க முடியாது. அதுவும் தமிழ்ச் செல்வியை வேற அழைச்சுட்டு போகப் போறீங்க... அது எப்பேர்ப்பட்ட பொறுப்பு தெரியுமா...?"

1



பத்மா, தமிழ்ச்செல்வி இருந்த திசையில் திரும்பிப் பார்த்தாள். பக்கத்தில் இணைபிரியாத இந்திரா, வாசுகி - ஜன்னல் விளிம்பை இறுக்கிப் பிடித்தபடி மலையழகை சுவாசித்துக் கொண்டிருந்தாள் தமிழ். ரசனையில் தோய்ந்த முகம் வழக்கத்தைக் காட்டிலும் கூடுதலான அழகில் மலர்ந்திருந்தது. பாடம் நடத்தும்போது அடிக்கடி அந்த முகத்தைப் பார்க்கத் தோன்றும். சிதறாத கவனம். ஒரு விளக்கம் தரப்படும் முன்னரே அதன் முடிவைத் தன் மனத்துக்குள் எட்டி விடுவாள். அதிலிருந்து சிந்தனையை விரிவுபடுத்தி வேறு இரண்டு விளக்கங்கள் தந்து அசத்திவிடுவாள் தமிழ். ஆங்கில மொழியை ஒரு தூரிகை போல் அவள் கையாண்டது இன்னொரு ஆச்சர்யம்.

தமிழ் தமிழ் என்று மூச்சுவிடும் முதல்வரின் மகள். இனமான அரசியலின் முதன்மைக் காவலராகத் தம்மைப் பெருமையுடன் பிரகடனப்படுத்திக் கொள்கிறவரின் ஒரே செல்வி - தமிழ்ச்செல்வி! அந்த அரசியல் பண்பாட்டை திமிறிக் கொண்டு மீறத் துடிக்கும் எதிர்ப்புணர்வு தமிழ்ச்செல்வியின் ஒவ்வொரு சைகையிலும் தெரிந்தது. ஆங்கில இலக்கிய வகுப்பில் சேர அவள் நிரம்பப் போராட வேண்டியிருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டாள் பத்மா.

தமிழ்ச்செல்வி தன்னையே மறந்திருந்

தான். தன் போராட்டங்களை மறந்திருந்தான். கல்லூரி முதல்வரிடம் இந்தக் கொடைக்கானல் சுற்றுலாவுக்கு அனுமதி வாங்க முன்னின்று போராடியது அவள் தான்.

''அடுத்த வருஷம் ஃபைனல் இயர் மேடம். போனா வராது என்கிற மாதிரி ஒவ்வொரு நாளும் டெஸ்ட் வைப்பீங்க. அது மட்டுமில்லே... இப்பவே கிளாஸ்ல நாலு பெண்களுக்குக் கல்யாணம் ஃபிக்ஸாயிடுச்சு... நெக்ஸ்ட் இயர் போனா ஃபீடிங் பாட்டில், டையபர்னு எக்ஸ்ட்ரா லக்கேஜெல்லாம் சேர்ந்துடும்...''

கொல்லென்று தூதுக்குழு சிரிக்க, முதல்வர் இளகிவிட்டார்.

அப்பா என்கிற முதல்வரை இளக்குவது அவ்வளவு சுலபமாக இல்லை.

எடுத்த எடுப்பிலேயே, ''அதெல்லாம் வேண்டாம்'' – ஆணையாகவே ஒலித்தது.

காலை தினசரிகள் அவருக்காகக் காத்திருந்தன. முத்து காப்பி எடுத்து வந்து வைத்தான். உதவியாளர் பரமசிவம் மரியாதையான தூரத்தில் குறிப்புக் கற்றையைக் கையில் வைத்துக் கொண்டு நின்றிருந்தார்.

''அப்பா, ப்ளீஸ்!'' கெஞ்சுதல் என்பதே பிடிக்காத தமிழ், கௌவரத்தை விட்டுக் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

ஆங்கில வகுப்பில் சேருவதற்கு அவள் இவ்வளவு கெஞ்ச வேண்டியிருக்கவில்லை. பள்ளியிறுதி மதிப்பெண்களே அவள் தமிழில் எவ்வளவு பலவீனம் என்பதைப் பறைசாற்றின.

அருணாசலத்துக்குச் சந்தேகமின்றித் தெரிந்தது. தம் மகள் தமிழில் மட்டும் மோசமான மதிப்பெண்கள் வாங்கக்கூடியவள் அல்ல. வலிந்து போற்றப்படுவதைத் துணிந்து தூற்ற வேண்டும் என்கிற இளமைத் துடிப்பின் ஒரு பதிவுதான் இந்த மதிப்பெண்.

அருணாசலத்துக்குத் தம்முடைய நாத்திகவாதப் போராட்ட நாட்கள் நினைவுக்கு வந்தன. பகுத்தறிவு ஒரு பக்கம் இருக்கட்டும். வேரூன்றிய நம்பிக்கைகளைத் தகர்க்கும் இடிமின்னல் கேள்விகள் எழுப்புவதில் பிறிடும் மகிழ்ச்சி இருக்கிறதே... அதைப் பகுத்தறிவால் அளக்க முடியுமா என்ன!

தமிழ்ச்செல்வியின் தமிழ் மதிப்பெண் அவனுக்கு அத்தகைய திருப்தியை, மகிழ்ச்சியை ஏற்படுத்தியதைக் கவனிக்க முடிந்தது அவரால்.

ஆனால், எந்த முகத்துடன் அவளுக்கு இளநிலை தமிழ் வகுப்பில் இடம் கேட்பது! அவள் போக்கில் ஆங்கில இலக்கியம் படிக்க விட்டாயிற்று. அத்தனை பத்திரிகைகளும் தலைப்புச் செய்தி போடாத குறையாக அவரைக் குதறி விட்டன. காமெராக்காரர்களிடமிருந்து தமிழை கவனமாகக் காத்துவரும் அவள் அம்மா புண்ணியத்தால் போட்டோ எதுவும் வெளியாகவில்லை. போலீஸ் பாதுகாப்புடன் ஹோலி மதர் கல்லூரிக்குத் தினமும் போய் வருகிறாள்.

இப்போது கல்லூரி மாணவிகளுடன் டூர் போக வேண்டும் – அதுவும் பாதுகாப்பு அதிகாரிகள் யாரும் கூட வராமல் சென்று வர வேண்டும் என்று அனுமதி கேட்கிறாள்.

யோசிக்க என்ன இருக்கிறது? ''அதெல்லாம் வேண்டாம்.''

தமிழ்ச்செல்வி விடுகிற வழியாய் இல்லை.

பரமசிவத்தை வெளியேறும்படி ஜாடை காட்டினான்.

''கொஞ்சமாவது யோசிச்சுப் பாருங்கப்பா... எங்கே போனாலும் முதுகுல இரண்டு கண்ணு ஒட்டிக்கிட்டு கூடவே வருது. இந்த நரகத்தை விட ஏதாவது ஜெயிலுக்குப் போய் இருக்கலாம்னு கூட சில நேரத்துல தோணுது.''

''சும்மா உணர்ச்சிவசப்படாதே! இப்படியெல்லாம் நாடகம் போட்டா அனுப்பிடுவேன்னு நினைச்சியா?''

''எதுப்பா நாடகம்?'' மகளின் கண்களில் தீப்பொறி பறப்பதைக் கண்டு கொஞ்சம்



''உன் காதலனோட அடிக்கடி பீச்சுக்குப் போய் வருவியா?''

''ஏன் கேட்கிறீங்க, அம்மா?''

''சுண்டல் வித்தாவது உன்னைக் காப்பாத்துவேன்னு சொல்றாரே!''

– பா. ஜெயக்குமார்

பெருமிதமாகவே இருந்தது அருணாசலத்துக்கு!

"உங்க மனசைத் தொட்டுச் சொல்லுங்க... டே இன் அன்ட் டே அவுட் இப்படியே போலீஸ் சிஐடி, பாதுகாப்பு, பிளையின்க்ளோத்ஸ்மென் - இந்த வாழ்க்கை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

"ஷ்! பொது வாழ்க்கைன்னு வந்துட்டா சொந்த சுக துக்கமெல்லாம் பார்க்க முடியாதுடா..."

"ஆஹா! அப்படின்னா உங்களுக்கும் சுகதுக்கம்னு இருக்கு... ஒத்துக்கறீங்க இல்லை...? எனக்கும் அது மாதிரிதான் - உங்கக் கட்சிக் கொள்கைல முக்கியமா முதல்ல வைச்சிருக்கீங்களே 'தனி மனித உரிமை' - மேடையில எல்லாம் அடுக்கு மொழி போட்டுப் பேசறீங்களே... அந்த உரிமையைத்தான் நான் கேட்கறேன்..."

அறிவுரீதியாக வாதிட்டு, உணர்வுரீதியாக மனு போட்டு, ஒரு ரொட்டித் துண்டைப் போல் அப்பாவைத் திருப்பி திருப்பி வாட்டியெடுத்தாள் தமிழ்ச்செல்வி.

அருணாசலம் அவள் தாக்குதலால் அலுத்துப் போய் அனுமதி தந்துவிடவில்லை...

பாதுகாப்பு வளையம் என்கிற பெயரில் தனது அந்தரங்கம் அடியோடு குலைந்து போய்க் கிடந்ததை எண்ணி நோவதற்கு, அவருடைய திணறடிக்கும் தினசரி அலுவல்களுக்கிடையேயும் நேரமிருந்தது. தன்னில் ஒரு பகுதியை நகக்கித் திருகியெடுத்துச் சிறைவைத்தது போன்ற அந்த வேதனை உணர்வை இந்தக் குழந்தை எவ்வளவு துல்லியமாகத் தொட்டுக் காட்டியிருக்கிறாள்! உணர்ந்து அனுபவித்த துன்பத்தைத்தான் இவ்வளவு தெளிவாக இனங்காண முடியும் என்பது அவருக்குப் புரிந்தபோது, கண்ணில் துளித்த நீரை மறைக்க வேண்டியிருந்தது.

"செல்போனை எடுத்துக் கொடு..." என்றார்.

"ஸர்! இது வேண்டாம்!"

வி.ஐ.பி. பாதுகாப்பு என்னும் முள் கிரீடத்தைச் சுமந்து கொண்டிருந்த எஸ்.பி ரவீந்திரன், காலில் விழாத குறையாகக் கெஞ்சினார்.

"ஸாரி ரவீந்திரன், நான் தமிழ்ச்செல்விக்கு வாக்கு கொடுத்துட்டேன்..."

"ஸர், யாருக்கும் தெரியாம நான் பாதுகாப்பு ஏற்பாடு பண்றேன்... பர்சனலா நானே பொறுப்பேத்துக்கறேன்..."

"வாக்கு கொடுத்துட்டேன்னு சொல்றேனில்ல...?"

"கொடுத்த வாக்கை மீறுறதுல தப்பில்லை சார் - இந்த மாதிரி விஷயங்கள்ல.."

"போதும்! வாக்கு மீறும் பழக்கம் எனக்கு கிடையாது - எந்த மாதிரி விஷயத்துலயும்..."

முதல்வரின் கோபம் கத்திமுனையாய்க் கிழித்தது.

"யெஸ் ஸார்!" என்று விறைப்பாக நின்றார் ரவீந்திரன். "தேதி சொல்லுங்க..."

"ஆகஸ்ட் பத்து புறப்படறாங்க. நைட் திருச்சியில ஹால்ட். பதினொண்ணு, பன்னிரண்டு இரண்டு நாள் கொடைக்கானல்ல இருந்துட்டு, பதிமூணு காலையில புறப்பட்டு ராத்திரி வந்து சேர்ந்துடறாங்க."

"தமிழ்ச்செல்வி மேடம் இப்படி செக்யூரிட்டி இல்லாம போகப் போறாங்கன்னு வீட்ல அவங்க அம்மாவுக்குத் தெரியுமா சார்...?"

முதல்வர் ரவீந்திரனை எரித்துவிடுவது போல் பார்த்தார். "தெரியாது" என்றார் அடிக் குரலில்!

"ஓகே ஸார். அந்த டேட்ஸ்ல செக்யூரிட்டி வித்ட்ரா பண்றேன். ஆனா எங்க டிபார்ட்மென்ட் ஆட்களுக்குக் கூட அது தெரியாம பார்த்துக்குவேன்..."

தமிழ்ச் செல்வியைக் கூப்பிட்டுச் சொன்ன போது கள்வெறியுடன் அப்பாவின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவசரமாக அறையிலிருந்து வெளியேறிய ரவீந்திரனின் கடினப்பட்ட காவல் துறை இதயம் கூடக் கொஞ்சம் கனிந்தது.



"என் காதலர் இப்படிச் செய்வார்னு நான் கனவிலும் நினைக்கலடி!"

"ஏன், வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க ஏற்பாடு பண்றாரா?"

"அது பரவாயில்லையே. என்னையே கல்யாணம் பண்ணிக்க ஏற்பாடு செய்யறாரே!"

– லலிதா செல்லப்பா

டீ.வியில் பார்த்தது!

— நீச்சல் வீரர் அருண் பாலாஜி விமர்சிக்கிறார்

● ஆஸ்திரேலியாவிடம் இந்தியா தோத்தப்போ அழுகையே வந்துடுச்சி. சச்சின் டக் அவுட் ஆனப்போ கூட 'பக்'னு ஆச்சே தவிர, அவர் மேலே கோபம் வரல்லே. ஆனா கங்குலி,



ட்ராவிட், அசார்னு வரிசையா வெளியேறினதும் செம கடுப்பு. பாகிஸ்தான் அணியை ஜெயிச்ச பிறகுதான் ஆறுதல்.

● இந்த உலகக் கோப்பையெல்லாம் முடிந்தப்புறமாவது நீச்சல் போட்டிகளை டீ.வி.யிலே நிறைய ஒளிபரப்பினா நல்லாயிருக்கும். ஒலிம்பிக்ஸ்போது மட்டும்தான் நீச்சல் நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியுது. நீச்சலுக்கான ஒளிபரப்பு நேரம்கூட கம்மிதானே!

● 'பாட்டுக்குப் பாட்டு' அப்துல் ஹமீது எப்படித்தான் எல்லா சினிமாப் பாட்டுகளையும் மனப்பாடமாத் தெரிஞ்சு வச்சிருக்காரோ! பாடல் வார்த்தைகளில் யாராவது ரெண்டு தப்புக்கு மேலே செய்தா அவுட்! டக்கு டக்குனு தப்பைக் கண்டுபிடிக்கடறார்.

● தொண்ணூத்தைந்து வயசுப் பாட்டி, பாராசூட்டிலேயிருந்து குதிக்க தன் ஆசையைத் தீர்த்துக்கிட்டதை சென்றவார உலகத்திலே காண்பிச்சாங்க. 'இதுதான் சாதனை'ன்னு கத்தத் தோன்றியது.

● தாஸ் பாத்திரம் சுவாரசியமாக இருக்கு. மர்ம தேசத்திலே. நடக்கப் போறதை இவ்வளவு தெளிவா சொல்றவங்க நிஜத்திலே இருக்க முடியுமா என்ன!

● டிஸ்கோ இசைக்கு நடனமாட எனக்கு ரொம்ப இஷ்டம். பிரபுதேவான்னா உயிர். 'தில்லானா தில்லானா' நிகழ்ச்சியிலே— அட, இவ்வளவு பேர் நல்லா ஆடறாங்களே! ஸ்கூலிலே முறையா நடனம் (பரதமோ, மேற்கத்திய வகையோ) கத்துக் கொடுக்க ஒரு வகுப்பை ஒதுக்கினா நல்லாயிருக்குமே!

— ஜி.எஸ்.எஸ்.

தமிழ்ச் செல்வி பஸ்ஸின் ஜன்னலோர சீட்டில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தபோது பத்மாவும் மனம் கனிந்தாள். இளநீர் உறிஞ்சும் சுகத்துடன் ஜன்னல் வழியே தெரிந்த காட்சிகளை விழுங்கிக் கொண்டிருந்தாள் தமிழ்ச் செல்வி. இந்திரா அவள் தோளைச் சுற்றிக் கைபோட்டுக் கொண்டிருந்தாள். வாசுகி இருக்கையில் முன்னுக்குச் சரிந்து வந்து நெருக்கியடித்து தமிழை ஜன்னல் ஓரத்தோடு ஒட்டித் தள்ளியிருந்தாள்.

திடீரென்று தமிழ்ச்செல்வி தலையை உள்ளிழுத்து மடியில் கவிழ்த்துக் கொண்டாள்.

"ஏய், தமிழ்! என்ன ஆச்சு? வாசுகி பதற, கொஞ்சம் தண்ணி குடிக்கறியா...?" இந்திரா வாட்டர் பாட்டிலைத் திறந்தாள்.

"ஆர் யூ ஆல் ரைட், தமிழ்ச் செல்வி?" பத்மா எழுந்து போய் இருக்கைக்கு அருகில் நின்று கேட்டாள்.

'இல்லை' என்பது போல் மெள்ள தலையசைத்தாள் தமிழ்ச்செல்வி. "மேடம் ப்ளீஸ் அஞ்சு நிமிஷம் பஸ்ஸை நிறுத்தச் சொல்லுங்க... ஐம் ஃபீலிங் சிக்."

மாரியுடன் அவர் அண்ணனும் இறங்கினார். பத்மா, இந்திரா, வாசுகி மறைத்து நிற்க, தமிழ்ச் செல்வி மலைப்பாதை ஓரத்தில் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

ஜில்லென்று தண்ணீர் கொண்டு முகம் கழுவியபோது மாரி தன் அண்ணனிடம் தணிந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்: "சி.எம். பொண்ணுண்ணே; பாவம்...!"

"அவோமின் டாப்லட் போட்டுக்கிட்டிருக்கலாமில்லே...?"


"மலையிலே ஏறும் போது இப்படி வயித்தைப் புரட்டும்னு தெரியாது மேடம். இதுவரைக்கும் மலைப்பாதைல இப்படி பஸ்ல போனதில்லே... அது மட்டுமில்லே... மாத்திரை சாப்டா தூக்கம் வரும்... இத்தனை அழகையும் பார்க்க முடியுமா...?"

"வா! பஸ்ல ஏறு சீக்கிரம்..." அத்வானமான இடத்தில் முதல்வர் மகளுடன், நிற்கிறோம் என்ற பய உணர்வு திடீரென்று பத்மாவைப் பற்றிக் கொண்டது.

தோள் பிடித்து தமிழ்ச்செல்வியை பஸ் நோக்கி நகர்த்திய நிமிடத்தில் ஒரு டாடா சுமோ கடந்து சென்றது. அடுத்த வளைவைக் கடக்கும் முன் ஒருகணம் நின்று, திரும்பிப் பார்ப்பது போல் சற்றே நிதானித்து மேலே தொடர்ந்தது.

அதைக் கவனித்த பத்மா, 'செக்யூரிட்டி ஆட்கள்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள். தமிழ்ச்செல்வியும் அதைக் கவனித்தாள். அவள் காலி வயிற்றில் சிலீரென்று ஓர் உணர்வு கிளம்பி உடலெங்கும் பரவியது.

(தொடரும்)



1999 ஜூன் 20
பிராமாதி ஆனி 6
மலர் : 57
இதழ் : 47

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

அநீதிக்கு ஹலோ சொல்லும் வாஜ்பாய்!


மீண்டும் ஓர் இமாலயத் தவறு இழைத்திருக்கிறார் பிரதமர் வாஜ்பாய்! தமது அரசின் காபந்து அந்தஸ்தை மறந்து, தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஜக்மோகனை அப் பொறுப்பிலிருந்து மாற்றியிருக்கிறார்.

தேர்தலுக்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்களே உள்ள நிலையில், இந்த மாற்றத்துக்கு அவசியம் என்ன? எவ்வித விளக்கமும் இதுவரை தரப்படவில்லை.

செல்போன் நிறுவனத் தொழிலதிபர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய லைசன்ஸ் கட்டணம் 4500 கோடி ரூபாயை இன்னமும் கட்டாமல் வைத்துள்ளார்கள் என்பதும், அதை உடனடியாகக் கட்டியாக வேண்டும் என ஜக்மோகன் அவர்களை வற்புறுத்தி வந்தார் என்பதும் அவ்வமைச்சரே வெளியிட்டுள்ள தகவல்கள். தமது பதவிமாற்றம் அறிவிக்கப்பட்ட பிறகு கூட, 'தொழிலதிபர்கள் அத்தொகையை உடனே செலுத்திவிட வேண்டும்' என வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார் ஜக்மோகன்.

செல்போன் கம்பெனி அதிபர்கள் எல்லோருமே ஒட்டுமொத்தமாக, 'தொழில் சரியாக நடக்க வில்லை; அதனால் உரிமக் கட்டணம் செலுத்தவில்லை' என்று மூக்கால் அழுதார்கள்.

'இந்த வாதத்தை ஏற்பதற்கில்லை' எனக் கூறி, கட்டணங்களைச் செலுத்த கெடு வைத்தார் ஜக்மோகன். கெடு தேதி மும்முறை ஒத்திவைக்கப்பட்ட பிறகு கண்டிப்புக் காட்டி உரிமங்களை ரத்து செய்ய ஆரம்பித்தார். பொறுப்பாளர்களா தொழிலதிபர்கள்? தங்கள் 'செல்வாக்கை'ப்



பயன்படுத்தினார்கள்.

தமது கடமையை ஆற்றிய ஓர் அமைச்சரைக் குறுக்கே விழுந்து தடுத்ததும் அல்லாமல் அவர் இதுவரை வகித்த பொறுப்பைத் தாமே ஏற்றிருக்கிறார் பிரதமர்.

இதனால் நிர்வாக வட்டாரங்களில் எழக்கூடிய சர்ச்சை;

எதிர்க்கட்சிகளிடமிருந்து இதற்கு எழக்கூடிய கண்டனம்;

பொதுமக்களிடையே இச்சம்பவம் தோற்றுவிக்கக்கூடிய அவநம்பிக்கை

என எது குறித்தும் பிரதமர் கவலைப்படவில்லையென்றால் அந்தக் கவலைகளை மீறிய ஒரு ஆதாயம் கிடைக்கும் என அவர் எதிர்பார்ப்பதாகத்தான் தெரிகிறது.

செல்போன் நிறுவன அதிபர்கள் அனேகம் பேர் வேறு பல தொழில் பிரிவுகளில் வெற்றிகரமாக முதலீடு செய்து லாபம் கண்டு வருபவர்கள். தேர்தல் நெருங்குகிற நேரத்தில் பசையுள்ள இவர்களைத் திருப்திபடுத்துவதில் கிடைக்கக்கூடிய ஆதாயம், அரசுக்குக் கிட்டவேண்டிய 4500 கோடி ரூபாயைக் காட்டிலும் முக்கியமாகப் பட்டிருக்கிறது பி.ஜே.பி. தலைமைக்கு!


பிரதமர், ஜக்மோகனை அழைத்து சமரசமாகப் போகும்படி கூறியிருக்கிறார். அச்சந்திப்பிலிருந்து வெளிப்படுகையில், 'தொழிலதிபர்களுக்கு வளைந்து கொடுப்பதற்காக தேசநலனையும் சட்டத்தையும் பலிகொடுக்க நான் தயாராயில்லை' என்று ஜக்மோகன் பத்திரிகையாளர்களிடம் கூறியிருக்கிறார்.

ஆனால் அந்தத் தவறை இழைக்க வாஜ்பாய் தயாராகிவிட்டார் என்கிற உண்மை வாக்காளர்களுக்குப் புரியாமல் போகாது.

தேர்தல் மேல் கண்கொண்டு பிரதமர் எடுத்துள்ள இந் நடவடிக்கை, அவரது வெற்றி வாய்ப்புகளை அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறைக்கவே செய்யும்!

ஒணானை சாட்சியாக்கும் பாகிஸ்தான்!

பாகிஸ்தானிய அயலுறவுத் துறை அமைச்சரின் வருகையை ஒத்திவைத்ததன் மூலம் இந்திய அரசு தனது அதிருப்தியை வெளியிட்டிருக்கிறது.



கார்கில் ஊடுருவல் ஒருபுறம்; கட்டுப்பாடு எல்லையை மதிக்காமல் 'அந்தக் கோடு துல்லியமாக இல்லை' என்று கூறி தனது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் முயற்சி மறுபுறம்; பிடிபட்ட நமது ராணுவ வீரர்களைச் சித்திரவதை செய்து கொன்ற கொடுமை! போதாக்குறைக்கு சர்வதேச வட்டாரங்களில் இந்தியாவுக்கெதிரான கருத்துத் தூண்டல் என்று பாகிஸ்தான் அளித்து வரும் தொல்லைகளுக்கு இந்தியா தனது பாணியில் பதிலளித்திருக்கிறது.

அஸீஸின் வருகையை ஒத்திவைக்கச் சொன்னதன் மூலம், அந்த இடைவெளியில் கார்கில் ஊடுருவலாளர்களைக் கணிசமான அளவுக்குப் பின்னுக்குத் தள்ளலாம் என்பதும் கூறப்படாத ஒரு காரணம். அந்த வெற்றியின் தார்மிக பலம் பாகிஸ்தானிய அமைச்சருடனான பேச்சு வார்த்தையின் போது வலு சேர்க்கும் என்பது திட்டம்.

இந்தத் திட்டத்தை பாகிஸ்தான் கலபமாகக் கண்டுணர்ந்து விட்டது. தானும் தன் பங்குக்குத் திட்டமிட்டுச் செயல்படுகிறது. உலக நாடுகளின் ஒட்டுமொத்தப் பார்வையில் கார்கில் ஊடுருவல் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிற சமயத்தில் சீனாவின் ஆதரவும் அனுதாபமும் கிடைத்தால் பாகிஸ்தானுக்குப் பெரிதும் உபயோகமாயிருக்கும். 'என் எதிரியின் எதிரி எமக்கு நண்பன்' என்று கணக்கிட்டு சீனாவிடம் போய்ப் பேச முடிவெடுத்துள்ளது.

சர்தாஜ் அஸீஸ் இந்தியா வரும் முன் சீன விஜயம் முடித்துக் கொண்டுதான் வருகிறார்!

ஆக, நமது ஒவ்வொரு அடிக்கும் மூன்றடி எடுத்து வைக்க பாகிஸ்தான் திட்டமிடுகிறது. அஸீஸ் இங்கு பேச்சு வார்த்தைக்கு வருகிற நேரத்தில் இதை நாம் நினைவுகொள்ள வேண்டியது அவசியம். ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறாமலும் கட்டுப்பாடு எல்லைக்கோடு விஷயத்தில் விட்டுக் கொடாமலும் கண்டிப்பு காட்டப்பட வேண்டும்.

கார்கில் கைகலப்பில் நேர்ந்த இரு தரப்பு இழப்புகளுக்கும் பாகிஸ்தானே காரணம் என்பது அஸீஸுக்கு உணர்த்தப்பட வேண்டும். யுத்தத்தை நாம் விரும்பவில்லை. ஆனால், பாகிஸ்தான் நம் மீது யுத்தத்தைத் திணிக்குமானால் பொருளாதார ரீதியிலும் சரி, ராணுவ ரீதியிலும் சரி - பேரிழப்பு பாகிஸ்தானுக்குத்தான் ஏற்படும். ⭘

சொந்த அடையாளம்

பணம்

நம் வாழ்க்கையே ஒரு கண்ணாமூச்சி ஆட்டம்தான். கடைசி வரை ஆடுகிறோம். நம் ஆட்டம் நிற்கும் போதுதான் அந்த ஆட்டமும் நிற்கிறது. ஒரே ஒரு வித்தியாசம். சிறு வயதில் ஆட்களைத் தேடித் தொடுவதை நாம் கண்ணாமூச்சி ஆட்டமாக ஆடினோம். பெரியவனாகும் போது படிப்பு ஒரு கண்ணாமூச்சி ஆட்டம். காதல் ஒரு கண்ணாமூச்சி ஆட்டம். வேலை ஒரு கண்ணாமூச்சி ஆட்டம். கல்யாணம் ஒரு கண்ணாமூச்சி



ஆட்டம். வாய்த்தவளுடன் வம்பு தும்பு இல்லாமல் வாழத் தொடங்குவது ஒரு கண்ணாமூச்சி ஆட்டம். உயர்ந்ததோ, உருப்படி இல்லாததோ லட்சியம் என்பது ஒரு கண்ணாமூச்சி ஆட்டம். ஆசைகள் ஒரு கண்ணாமூச்சி ஆட்டம். இன்னும் பார்த்தால் நமது நாட்டு அரசியலே கூட ஒரு கண்ணாமூச்சி ஆட்டம்தான்.

ஆக, வாழ்க்கையின் எந்த ஒரு கண்ணாமூச்சி ஆட்டத்திலும் அடிப்படையாகவும் அவ்வளவு சீக்கிரம் அடைய முடியாததாகவும், அடைந்து விட்டால் அதன் மூலம் எதையும் ஆட்டிப் படைக்கலாம் என்ற 'வயாகரா' பவருடன் உள்ளே ஒளிந்திருப்பது பணம்... பணம்... பணம்!

நேர்வழியில் இந்தப் பணத்தை சம்பாதிப்பது என்பது ஐயப்பன் மலைக்கு பாதயாத்திரை போவது மாதிரி. மிக மிக நிதானமாக, பொறுமையாக, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சேர்க்க முடியும். இப்படி குருவி சேர்ப்பது போல் சேர்த்து எவரெஸ்ட் லெவலுக்கு குவித்து வைத்திருந்தாலும் அதைப் பராமரித்தபடியே பிறருக்குக் கொடுத்து உதவும் போதுதான் நீங்கள் கடவுளாக கருதப்படுவீர்கள். அதை பத்திரப்படுத்துவதிலோ அல்லது பராமரிப்பதிலோ கொஞ்சம் எசகு பிசகானாலும், இருப்பதிலேயே செங்குத்தான வெள்ளிங்கிரி மலையில், கீழிறங்கும் போது குச்சி இடறினால் எப்படி பல்லு பகடெல்லாம் கழன்று எவ்வளவு வேகமாக அடிவாரத்துக்கு உருண்டு வந்து சுருண்டு விழுவோமோ, அந்த கதி, அதோ கதியென்ற நிலைக்குத் தள்ளிவிடும்.

பணம் அவ்வளவு மோசமானதா என்று நினைக்க வேண்டாம். ஒரு விதத்தில் பார்த்தால் தாய், தந்தை, ஆசிரியர், அறிஞர், பேரறிஞர், மூதறிஞர் ஆகியோர் நமக்குப் புகட்ட முடியாத, புகட்டினாலும் நம் மனத்தில் ஏறாத புதிய புதிய பாடங்களைப் புகட்டுவதில் சிரஞ்சீவியான குரு பணமே.

சந்தேகமிருந்தால் "ஐயா! இப்படி ஒரு இக்கட்டில் மாட்டிக் கொண்டேன். தெய்வம் போல் நீங்கள்தான் உதவ வேண்டும்" என்று கண்ணீர் மல்க யாராவது சிலர் உங்களிடம் கைநீட்டி, அவர்களுக்கு நீங்கள் உதவி, உங்களை அவர்கள் கை கூப்பிக் கும்பிட்டுப் போயிருந்தால், இப்போது நல்ல நிலையில் உள்ள அவர்களிடம் போங்கள்.

"எனக்குக் கொஞ்சம் கஷ்ட..." என்று ஆரம்பித்ததும் உடனே அவர் உங்கள் நிலைமையைப் புரிந்து உங்களை அவர் அதற்கு

இயக்குனர் கே. பாக்யராஜ்

பந்தங்களை காட்டும் தரு!

மேல் பேசவிடாது தடுத்து, மிகமிக உருக்கமாக அவரது நிலையை விளக்க ஒரு பாட்டுப் பாடுவார் பாருங்கள். நீங்கள் திரும்பி வர, பஸ்ஸு"க்கு பாக்கெட்டில் வைத்துள்ள பத்து ரூபாயை எடுத்து அவருக்குக் கொடுத்து விட்டு பொடி நடையாக வீடு திரும்புவீர்கள். இது ஒரு ரகம்.

இனி ஒரு ரகம். நீங்கள் உங்களுக்கு கஷ்டம் என்றதும் எதிராளி அதிர்ந்து உங்கள் விசனம் முழுவதையும், உங்களை விட மிக மிக விசனத்தோடு கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, நீங்கள் முடித்ததும் அவர் வசனம் ஆரம்பிப்பார் பாருங்கள். அடேங்கப்பா! மாதிரிக்கு ஒரு ஆரம்பம்.

"இல்லை சார்! இல்லவே இல்லை. இந்த உலகத்துல ஆண்டவனே இல்லை. உங்களுக்கு இப்படி ஒரு கஷ்டத்தைக் கொடுத்திருக்கான்னா அவன் ஆண்டவனே இல்லை."

இப்போது நீங்கள் மெள்ள, "இல்லீங்க நாளைக்கு கா..." என்பதற்குள் இடைமறித்து அவர்,

"இல்லை சார்! நேத்து வரைக்கும் நான் ஆண்டவன் இருக்கிறதா நம்பினேன். இனி அது பொய். எப்ப உங்களைப் போல நல்லவங்களை சோதிக்கிறானோ அவன் கல்லு, கல்லுதான் சார்."

மறுபடியும் நீங்கள் "நாளைக்கு ஒரு பத்தாயிரம் ரூபா செக் ரிட்டன் ஆயிட்டா' அரெஸ்ட்...."

''ச்சச்சோ!''

(டமார்! டமார்!) ஒன்றுமில்லை. அவர் தன் நெற்றியில் அடித்துக் கொண்ட சத்தம்தான் அது. அவர் அடித்துக் கொண்டது உங்களுக்கே கொஞ்சம் சுருக்கென்று வலிக்கும். ஆனால் அவருக்கு வலிக்கவே வலிக்காது. கோவில் பூசாரி சாமி வந்தால் சாட்டையால் அடித்துக் கொள்வது போல் சரமாரியாக அடித்துக் கொண்டே இருப்பார். ஆனால் வசனத்தில் மட்டும் ரூட்டை மாற்றவே மாட்டார்.

"இல்லே உங்க கஷ்டத்தைக் கேட்டு எனக்கே ரத்தக் கண்ணீர் வரும்போது சாமி வேஸ்ட்... பூஜை வேஸ்ட்... புனஸ்காரம் இனஸ்காரம் எல்லாமே வேஸ்ட்" என்று ஆக்ரோஷமாக, அதேசமயம்,

'இனியும் எங்கிட்ட நீ உட்கார்ந்திருக்கிறது வேஸ்ட்' என்று நாசூக்காக நமக்குப் புரிய வைத்து அனுப்பிடுவாரு. இந்த ரகம் கூட ஓரளவுக்குப் பரவாயில்லை. மூன்றாவதாக ஒரு ரகம் இருக்கு பாருங்க. அதுதான் சூப்பர்.

"ஐயோ! நம்ம கஷ்டத்துக்கு கை கொடுத்தாரே. அவர் அன்னைக்கு நம்மளை தூக்கி நிறுத்தலேன்னா இன்னைக்கு நம்ம நிலைமை என்ன?" இப்படி மனசாட்சியோட ஒன்று இரண்டு பேர் யோசித்து,

"ஏதோ நம்மளால முடிஞ்ச வரைக்கும் கொடுப்போம்'' என்று நன்றியோடு நினைத்து பணத்தை மடியில் கட்டிக் கொண்டு நம் வீட்டை நோக்கி வந்து கொண்டிருப்பார்கள். அப்போது வழியில் நல்ல நீளமான வீச்சரிவாளை தீட்டிக் கொண்டு ஒருவர் வருவார் பாருங்கள். அவரையெல்லாம் நீங்கள் இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல, எடுக்கப் போகும் எந்த ஜென்மத்திலேயும் மறக்க மாட்டீர்கள். காரணம், அவரும் உங்களிடம் கஷ்டத்துக்கு கைநீட்டி வாங்கினவர் தான். ஆனால் இப்போது அவர் கொடுக்க வருபவனைக் குறுக்கிட்டு நிறுத்தி,

''கோமாளிப்பயலே! எந்த ஜென்மத்துல யாருக்கு அவன் என்ன பாவம் பண்ணினானோ... இன்னைக்கு இப்படி ஒரு கஷ்டம் வந்திருக்கு. வயித்தைக்கட்டி வாயைக்கட்டி எத்தனை ராத்திரி கண்ணுமுழிச்சு நீ இந்த காசை சேர்த்திருப்பே. அத்தனை அரும் பாடுபட்ட பணத்தை 'பொட்டுன்னு ஒரே நிமிஷத்துல தூக்கிக் கொடுக்கப் போறயே.... ஊர் உலகத்துல சொல்ற பழமொழி உனக்குத் தெரியாதா? 'கொட்றது கலபம்; அள்றது கஷ்டம்'" என்று அந்த நேரம் பார்த்து நம் கெட்ட நேரத்துக்கு, அந்த மேதாவிக்கு அப்படி ஒரு பழமொழி ஞாபகத்துக்கு வரும்.



''பேஷண்ட் சீரியசா இருக்காரா?''

''உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?''

''டாக்டர் அவசரமா பில் தயாரிச்சுக்கிட்டிருக் காரே!''

– அம்பை தேவா

ஆக, மிக மிக சொற்ப சுற்றமும், நண்பர்களும் மட்டுமே நமக்கு உதவுவார்கள். மீதம் உள்ள பலரக மனிதர்களை சொந்த பந்தங்களை நமக்கு அடையாளம் காட்டுகிற சிரஞ்சீவியான குருஜி பணம்தான். எனவே பணத்தை நாம் மதித்து வாழ வேண்டும். நாம் பிறருக்குச் செய்யும் உதவி பேங்கில் சேமித்து வைப்பது போல்தான். எப்போதாவது பிறர் மூலம் நமக்குத் திரும்பி வரும் என்பது உண்மையே! ஆனால் நாம் போடும் பாங்க் அதாவது நாம் உதவி செய்யும் மனிதர்களும், தேவைப்படும் உதவிகளும் அத்தியாவசியமானதா என்பதை உறுதிப்படுத்தி உதவுங்கள். வெறும் இரக்கம் காரணமாக மட்டுமே உதவினால் பணம் நம்மை சோதித்து விடும். எனக்கு வந்த அந்த சோதனையின் அனுபவத்திலும், வேதனையிலும்தான் பிறருக்கு அது வரக்கூடாது என இதனை நான் குறிப்பிடுகிறேன்.

அதோடு, பணம் சேர்ப்பது ஒன்றே லட்சியம் - குறிக்கோள் என்று வாழ்நாளை செலவழித்தாலும், நாம் வந்ததற்கும் வாழ்ந்ததற்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடும். அளவோடு பணம் சேர்த்து வைத்தால், அது உன்னைக் காக்கும். அளவுக்கு மேல் சேர்த்து வைத்தால், நீ அதனைக் காக்க வேண்டிவரும் என்ற பழமொழி அர்த்தபூர்வமானது.

எப்படி எனில்...

ஒருவன் ஒரு ஜோதிடரிடம் போவதாக வைத்துக் கொள்வோம். ஜோதிடர் உனக்கு தற்போது நேரம் சரியாக இல்லையென்கிறார். ஆனால், அடுத்த நாளே அவனுக்கு ஏதோ ஒரு லாட்டரியில் ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்தது. வாங்கியவன், முதல் வேலையாக ஜோதிடர் வீடு தேடிச் சென்று, "போய்யா, நீயும் உன் ஜோதிடமும்! எனக்கு டைம் சரியில்லேன்னா, எப்படிய்யா லாட்டரியில கோடி ரூபா விழும்" என்று வீராப்பாக பேசிவிட்டு வீட்டுக்கு வந்தான்.

வீட்டில் சம்சாரம் கண்களில் ஒருவித கலவரத்துடன் நின்றிருந்தாள். என்ன என்று விசாரித்தபோது, தங்களது இரண்டு குழந்தைகளில் ஒன்று வெகு நேரமாகியும் பள்ளியிலிருந்து வீடு திரும்பவில்லை என்றாள். "இன்னொரு குழந்தை எங்கே?" என்றான்.

அப்போது டெலிபோன் மணி ஒலித்தது. ஓடிப்போய் அவசரமாய் எடுத்தான்.

"உனது குழந்தை என்னிடம் பத்திரமாக உள்ளது. லாட்டரியில் விழுந்த ஒரு கோடியில் உன் குடும்பத்திற்கு 30 லட்சம் வைத்துக் கொண்டு மீதி 70 லட்சம் எனக்குக் கொடுப்பதாய் இருந்தால் மட்டுமே குழந்தை உயிரோடு கிடைக்கும். எங்கே எப்படிக் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் தொடர்பு கொள்கிறேன்" என்று துண்டித்துக் கொள்ள, தலையில் கைவைத்து அமர்ந்தான் நமது நாயகன்.


மீண்டும் டெலிபோன் ஒலித்தது. போனை எடுக்க, மறுமுனையில் தாத்தா, அதாவது நாயகனின் அப்பா, ''மகனே! என்னை மன்னிச்சிருடா! உனக்கு லாட்டரி விழுந்த விவரம் தெரிஞ்சி, என் வீட்டு வாசல்ல விளையாடிட்டிருந்த பேரனை எவனோ கடத்திட்டுப் போயிட்டு, 70 லட்ச ரூபா தர்லேன்னா குழந்தை உயிரோட வரா துன்னு மிரட்டறான்.. எனக்கு என்ன பண்ற துன்னே புரியலை. மறுபடியும் பேசறேன்னு சொன்னான்'' என்று புலம்ப, இப்போது நமது நாயகனே போனை துண்டித்தான்.


"நமக்கு விழுந்ததே ஒரு கோடி ரூபாய் தான். இரண்டு குழந்தைக்கும் தலா 70 லட்சம் என்றால், இன்னும் 40 லட்சம் ரூபாய்க்கு நான் எங்கே போவேன்? இதுதான் ஜோதிடர் கூறிய நம் மோசமான நேரமோ? அட ஆண்டவா! எல்லாருக்கும் பணம் இல்லையேங்கற கஷ்டத்தைக் கொடுத்து சோதிப்பே.. ஆனா எனக்கு பணத்தையே கொடுத்து சோதிக்கறியே?" என்று புலம்பினான்.

ஆக, அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது பண விஷயத்திலும் நூற்றுக்கு நூறு பொருந்தும். எனவே, உழைத்து பணத்தை ஈட்ட வேண்டும். நமது தேவைக்கு எஞ்சிய, மிஞ்சியவைகளை உண்மையான கஷ்டத்தில் இருப்போரைத் தேர்ந்தெடுத்து உதவ வேண்டும். சம்பாதித்த பணத்தை நாமும் நமது சுற்றமும் நண்பர்களும் சந்தோஷிக்க செலவழித்து, வாழ்க்கையின் சுகத்தை அனுபவிக்க வேண்டும்.

ஏற்பாடு : **எஸ். சந்திரமௌலி**

ஓம் ஸ்ரீ சாய்ராம்





ஸ்ரீ சாயி ஆன்மீக, கல்வி, கலாச்சார மற்றும் மருத்துவ அறக்கட்டளை

பதிவு எண் : 174/98

"எந்தரோ மகானுபாவலு அந்தரிகி வந்தனமுலு"

எத்தனையோ மகான்களை தோற்றுவித்த இப்பாரத பூமியில் தனது சமாதியில் இருந்து கொண்டே நல்லாசிகளை வழங்கி வரும் பகவான் ஸ்ரீ ஷீரடி சாயி பாபாவின் ஆலயம் ஒன்றை சென்னை - திருச்சிராப்பள்ளி மார்க்கத்தில் சென்னையிலிருந்து சுமார் 100 கி.மீ. தூரத்திலுள்ள ஸ்ரீ அருணகிரிநாதரால் பாடப்பெற்ற திருத்தலமான அச்சிறுபாக்கம் என்ற கிராமத்தில் ரூபாய் இருபத்தைந்து லட்சம் (அளவில்) கட்ட இருக்கிறோம்.

தனது மட்டற்ற அருளை இம்மனித சமூகத்தின்பால் ஜாதி, மத, இன வேறுபாடின்றி வழங்கிவரும் பகவான் ஸ்ரீ சாயி பாபாவின் ஆலயக் கைங்கர்யத்திற்கு பக்தர்களாகிய தாங்கள், தங்களாலியன்ற உதவியை செய்து பகவானின் அருளாசியைப் பெற வேண்டுகிறோம். மேற்கண்ட ஆலயப் பணிக்கு முன் வரும் அன்பர்கள், அதன் விபரத்தை தெரிவிக்க கோருகிறோம். இக்கைங்கர்யத்திற்கு கொடுக்கப்படும் நன்கொடைகள் வருமானவரி விலக்குக்கு தகுதி வாய்ந்தவைகளாகும்.

(Vide IT under section 80 G of IT Tax Act 1961 - C.No. 2039 (42) 1998-99. TN - V dated 15.12.1998 period 05.11.98 to 31.03.2000)

நன்கொடைகள் 'Account Payee' crossed Cheque/Demand Draft "Shree Sai Spiritual Educational, Cultural and Medical Charitable Trust" Chennai என்ற பெயரில் எடுக்கப்பட்டு அறக் கட்டளைக்கு கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

நெ. 7, மேலமாடத் தெரு,
அச்சிறுபாக்கம் – 603 301
காஞ்சிபுரம் மாவட்டம்

நெ. 5, 40 வது தெரு,
நங்கநல்லூர்,
சென்னை - 600 061

ஜக்மோஹனைத் தொலைத் தொடர்பு அமைச்சகத்திலிருந்து மாற்றியதன் மூலம் பி.ஜே.பி. தானாகவே "பெரிய அளவில் ஊழல் நடக்காத ஒரு அரசு" என்ற முகத் திரையைக் கிழித்துக் கொண்டிருக்கிறது. ஆயிரங்கோடிக் கணக்கில் பணம் புரளும் இந்த நவீன மொபைல் ஃபோன் தொழிலில் பல இந்தியக் கம்பெனிகள் மல்ட்டி நேஷனல் முதலைகளைவிட எத்து வேலைகள் செய்தன, செய்து கொண்டிருக்கின்றன.

முதலில் ஒப்பந்தத்தில், பிறகு தவணைப் பணம் செலுத்துவதில் என்று ஒவ்வொரு கட்டத்திலும் பணத்தில் தகராறு செய்தன. ஒப்பந்தப் பணத்தில் ஒரு தொகையைச் செலுத்திவிட்டு, மீதமுள்ளதை தள்ளுபடி செய்யுமாறு வற்புறுத்தின. 'மொபைல் தொழிலில் உள்நாட்டு நிறுவனங்களை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும்' என்று காரணம் கூறினர். தங்களுக்கு மிதமிஞ்சிய நஷ்டம் ஏற்பட்டு விட்டதால் உள்நாட்டு நிறுவனங்கள் நசிந்துபோக அரசாங்கமே விட்டு விடக் கூடாது என்றும் வற்புறுத்திக் கூறினர். தவணைப் பணத்தைச் செலுத்திய போது மான்யம் கொடு என்று கேட்டுச் சில நிறுவனங்கள் பெறவும் செய்தன!

நமது 'தேசிய' அரசோ ஒரு விநோதமான பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியது. தாராள மயமாக்குதலின் ஒரு முனை நினைக்க முடியாத அளவுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது, மறுபுறம் தொலைத் தொடர்பு போன்ற துறைகளில் அயல் நாட்டு நிறுவனங்கள் நுழைவது நமது தேச இறையாண்மைக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று சொல்லி, உள்நாட்டுப் பண முதலைகள் மட்டுமே மொபைல் ஃபோன் தொழிலில் ஈடுபட முடியுமென்று விதித்து விட்டது. இதன் காரணமாகக் குறிப்பிட்ட சில கம்பெனிகள் இத் தொழிலில் ஏறத்தாழ ஏகபோகமாய் ஈடுபட ஆரம்பித்தன.

ஷுக்ராம் அமைச்சராக இருந்தபோது நடந்த ஊழல்களை நாடே அறியும். ஆனால் ஜக்மோஹனோ ஒரு நோ நான்சென்ஸ் அமைச்சர். எந்த முதலாளிக்கும் சட்டத்துக்கு உட்படாத சலுகை காட்டாதவர். இவர் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சராக இருந்தபோதும் சரி, டெல்லி யூனியன் பிரதேசமாக இருந்தபோது அதற்கு லெஃப்டினென்ட் கவர்னராக இருந்த போதும் சரி, சஞ்சய் காந்தி என்ற ஒரு 'சூப்பர் பவரின்' கட்டளைகளைக் காதில் கூடப் போட்டுக் கொள்ளாததால் தூக்கியெறியப்பட்டவர்.

அப்படிப்பட்டவர் இந்த எத்து வேலைக் கம்பெனிகளிடமிருந்து பணத்தை வசூலிக்கப் பயங்கர நடவடிக்கைகளை மேற்கொண்டார். தேர்தல் வரும் நேரத்தில் பல கட்சிகளுக்கும் பணம் கொடுக்கும் இந்த முதலாளிகளைப் பகைத்துக் கொண்டார். பி.ஜே.பி. அரசினால் 'அழுத்தத்தை'த் தாங்க இயலவில்லை.

சொல்லப் போனால் அரசு கவிழ்வதற்கு முன்பே ஜக்மோஹனை நீக்க முதல் அத்தியாயம் துவங்கி விட்டது. ஒரு தென்னிந்தியக் கம்பெனிக்குச் சில கோடி ரூபாய்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. லைஸன்ஸும் புதுப்பிக்கப்பட்டது. ஆனால் ஜக்மோஹன் செயல்பட்டது அட்டர்னி ஜெனரல் அலுவலகத்திலிருந்து சட்டபூர்வமாக இது சரியே என்ற குறிப்பு வந்த பிறகுதான். இதையே தங்களுக்கும் வேண்டின, ரூயா மொபைல் கம்பெனியும், மித்தல் கம்பெனியும். (இந்த மித்தல்கள்தான் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது 'சூட்கேஸை'ப் பிரபலமாக்கியவர்கள் என்பது நினைவிருக்கலாம்.)

ஆனால் இருவருக்குமே சட்டபூர்வமாக

ஜக்மோஹன் மாற்றமும்

ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை. ஜக்மோஹன் அழுத்தந்திருத்தமாக "சட்டம் செய்ய முடியாத எதையும் என்னால் செய்ய முடியாது" என்றார். இதில் ஒரு கம்பெனி பிரமோத் மஹாஜனுக்கு மிக மிக நெருக்கம். மஹாஜனோ தெரிந்தோ தெரியாமலோ மும்பை பணப் பைகளைக் கையாளத் தெரிந்த 'இளைய தலைமுறை ஷரத் பவார்' என்று பெயரெடுத்து விட்டவர். இந்நிலையில் தேர்தல் வேறு. ஆக ஜக்மோஹனை நீக்க மஹாஜனும் அழுத்தம்

கொடுத்திருப்பாரென்பது இங்கு அடிபடும் நம்பத்தகுந்த செய்தி.

இதே ரூயா க்ரூப் கம்பெனியினால்தான் முன்னாள் நிதி ஆலோசகராயிருந்து வெளியேற்றப்பட்ட மோஹன் குருஸ்வாமி விவகாரம் வெடித்தது. அப்போது அவர்கள் கேட்



பி.ஜே.பியின் தலைவலியும்!

டது வேறொரு தொழிலில் ரூ. 250 கோடி கஸ்டம்ஸ் டூடி விலக்கு.

ஆனால் செல்ஃபோன் பிசினஸில் ஜக்மோஹனிடம் இவர்கள் பாச்சா பலிக்கவில்லை. 49,000கோடி ரூபாய் புழங்குவதாகக் கூறப்படும் இந்தத் தொழிலில் சுமார் 1000 கோடி ரூபாய், ஜக்மோஹன் அமைச்சரான பிறகு வசூலிக்கப்பட்டது. பிரதமர் அலுவலகத்தின் தலையீட்டால் மீதமுள்ள பணத்தைச் செலுத்த வேண்டிய தேதிக்கெடு தள்ளி வைக்கப்பட்டது. அப்படியும் செலுத்தாத கம்பெனிகளின் லைஸன்ஸைக் கேன்ஸல் செய்ய நடவடிக்கைகளைத் துவக்கினார் ஜக்மோஹன். அவரே கேன்ஸல் செய்யப்பட்டுவிட்டார் இப்போது!

கம்பெனிகளோ டெல்லி உயர் நீதிமன்றம் சென்றன, 'டாட்' என்றழைக்கப்படும் டெலிகம்யூனிகேஷன்ஸ் துறையை எதிர்த்து. வாதம் என்னவென்றால் வருமானத்தை அரசும் தொழிலதிபர்களும் பிரித்துக்கொள்ளும் விகிதாசாரம் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஜக்மோஹன் கூறுவது, ''அப்படியென்றால் முதலில் லைஸன்ஸை சரண்டர் செய்யுங்கள்; பிறகு ஒப்பந்த விதிகளைப் பற்றிப் பேசுவோம்.''

இந்நிலையில் அஸோசெம் என்ற தொழிலதிபர் அமைப்பின் கூட்டமொன்றில் இன்டர்நெட் சர்வீஸ் மற்றும் புது தொலைத் தொடர்புப் பாலிஸி பற்றிப் பேச வந்த ஜக்மோஹன் நமது சில கேள்விகளுக்குப் பதிலளித்தார்:

"அநேகக் கம்பெனிகள் 20 சதவிகித ஒப்பந்தப் பணத்தைக் கூட இன்னும் செலுத்தவில்லை. உலகின் எந்த ஒரு நாட்டிலும் எந்த ஒரு கம்பெனியும் அரசுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு, பிறகு விதியை மாற்றுங்கள் என்று நெருக்கும் ஒரு விநோதம் நடப்பதில்லை. இந்தியாவில்தான் நடக்கிறது! இந்த லட்சணத்தில் எங்கிருந்து உள்நாட்டு அயல்நாட்டு முதலீடுகளைப் பெருக்க? தொலைத் தொடர்பு காண்ட்ராக்ட் வாங்கிய எல்லா கம்பெனிகளும் நஷ்டமடைந்து விட்டன என்பதை என்னால் ஏற்க முடியாது. அப்படி உண்மையாகவே தொழிலில் பெரும் நஷ்டம் என்றால் முதலில் ஒப்பந்தத்தை சரண்டர் செய்யுங்கள்'' என்றார்.

இந்தத் தொழிலால் இந்தியக் கம்பெனிகள் நசிந்து போகும் நிலை வருமா என்ற கேள்விக்கு "இதை ஒப்பந்தத்தில் கையெழுத்

துப் போடும்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் யோசிக்காமலா இருந்திருக்கும்? அப்போது எப்படி கையெழுத்துப் போட்டார்கள்?'' என்றவர், தொடர்ந்து ''மார்கெட் சர்வே, பிற நிலவரங்கள் என்று எல்லா நவீன தொழில் நுட்பத்துடன் சந்தைக்குள் புகுபவர்கள் எப்படி லாப நஷ்டங்களைக் கணக்கிடாமல் வருவார்கள்? எந்த அரசு இவ்வளவு பெரிய நஷ்டத்தைத் தாங்கி இவர்களுக்குச் சலுகைகளை அளித்துக் கொண்டே இருக்கும்?

''ஒரு கிரிக்கெட் உவமை சொல்லுகிறேன். ஒரு நாள் போட்டி துவங்கி, நீங்கள் நன்றாக ரன் அடிப்பீர்கள் என்று நினைத்து ஆடும் போது, ஐந்து விக்கெட்டுகள் சரிந்து விட்டன. உடனே, நீங்கள் போட்டி விதிகளை மாற்ற வேண்டும் என்றால் இயலுமா...?''

''இந்த மொபைல் தொழிலதிபர்கள் லாபியினால்தான் நீங்கள் மாற்றப்பட்டீர்களா?'' என்ற கேள்வியை மிக வலுவாக மறுத்தார் ஜக்மோஹன். ''நிச்சயமாக இல்லை''.

''ஆக இப்போது பணம் செலுத்தத் தவறி விட்டவர்களை என்ன செய்வது?''

''புது அமைச்சரிடம் கேளுங்கள்.''

''தயவு செய்து அரசியல்வாதி போல் பேசாதீர்கள். ஒரு நிர்வாகியாகப் பதிலளியுங்கள்'' என்று கூறியவுடன் சீரியஸான ஜக்மோஹன், ''ஒரு நடுவர் (Independent evaluator) நிலைமையை அலசி சமன் செய்ய வேண்டும். அல்லது அரசு எல்லா லைஸன்ஸையும் கேன்ஸல் செய்ய வேண்டும். பிறகு புது ஒப்பந்தங்கள் போட வரும் நிறுவனங்களிடம் தெளிவாக விளக்கிய பிறகே லைஸன்ஸ் வழங்க வேண்டும்.''

பிரச்னை இப்போது அரசியலாக்கப்பட்டு, முதலில் எப்படி ஒரு காபந்து சர்க்கார் அமைச்சரவையில் மாற்றம் செய்ய முடியும் என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இடது சாரிகளும், சோனியா கட்சியினரும் அரசைக் கடுமையாக விமர்சித்திருக்கின்றனர்.

சோனியா கட்சியின் பத்திரிகைத் தொடர்பாளர் அஜீத் ஜோஹி, ''பிரதமர் வாஜ்பேயியும், அவர் 'வளர்ப்பு மருமகன்' ரஞ்சன் பட்டாச்சார்யாவும் ஸெல்ஃபோன் கம்பெனி முதலாளிகளும் கொடுத்த நெருக்கடியால்தான் ஜக்மோஹன் மாற்றப்பட்டார்'' என்று பெயர் குறிப்பிட்டே குற்றச்சாட்டை வீசினார்.

''உங்கள் ஊரில் ஒரு வளர்ப்பு மகன்; இங்கொரு வளர்ப்பு மருமகன்'' என்று பி.ஜே.பி. உறுப்பினர் ஒருவரே நம்மிடம் கிண்டலடித்தார். ஏனெனில் பட்டாச்சார்யாவுக்கும் மஹாஜனுக்கும் பொதுவானது இந்த மொபைல் லாபி ஸ்நேகிதம். சுதான்ஷு மிட்டல், மஹாஜனின் ஆப்த நண்பர். 'மஹாஜனிடம் ஏதாவது தேவையா...? மிட்டலை ஸெல்லில் பிடியுங்கள்' என்பது இங்கு சர்வ சாதாரணமாகப் பேசப்படும் விஷயம். அதைப் போலவே இன்னொரு நடமாடும் தொலைபேசிக்காரர் பட்டாச்சார்யாவுக்கு நெருக்கமானவர்.

இதையெல்லாம் விட முக்கியமானது பணப்புழக்கம். சதா சர்வ காலமும் பணத்தோடு இருக்கும் இந்த முதலாளிகளைத் தேர்தல் நேரத்தில் பகைத்துக் கொள்வது உசிதமல்ல. பிற தொழிலதிபர்கள், பல நேரங்களில் புழங்கும் பணத்திற்குத் (rotation money) திண்டாடுவார்கள். ஆனால் இவர்களோ அப்படியல்ல. காரணம் உங்களுக்கே தெரிந்ததுதான்! உபயோகிப்பாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் முன் பணம், மாதாந்திர வாடகைப் பணம், கட்டணப் பணம் என்று எப்போதும் பணம் புழங்கும் தொழில் இது!

— வெங்கட்

''எந்தக் கூட்டணியும்தான் உங்க கட்சியை சேர்த்துக்க மாட்டேன்னுட்டாங்களே... அப்புறம் என்ன பண்ணுவீங்க?''

''விட்டுடுவோமுங்களா! எங்க கட்சியையே ரெண்டாப் பிளந்து, ஒருத்தருக்கொருத்தர் கூட்டணி வச்சுக்கிட்டோம்!''

— கிரிஜா மணாளன்





தெய்வீக துளசியை
நாம் வணங்கும்
பொழுது அது நம்மை
ஆசிர்வதிக்கின்றது

எப்படி?

மரம், செடிகளுக்கும், உயிர்த்தத்துவம் உண்டு என்று ஜகதீச சந்திர போஸ் என்னும் உலகப் பிரசித்தி பெற்ற இந்திய விஞ்ஞானி பத்தோன்பதாம் நூற்றாண்டிலேயே கண்டு பிடித்துள்ளார்.

தாவரங்களுக்கும், பசி இருக்கின்றது தாகம் இருக்கின்றது பாராட்டி பேசினால் மகிழ்ச்சியடைகிறது.

திட்டினால் விசனமடைகிறது என்பதை கண்டுப் பிடித்தார்.

–தர்மச்சக்கரம்.

செடிகளில் தெய்வீக செடிகளை வளர்ப்பதை போலவே நல்லோர்களுக்கும் கிராண்ட் ஸ்வீட் வாங்கி கொடுங்கள்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2-வது மெயின் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020. போன் : 4915662, 4914213

வட்டமேஜை

கண்களின் களைப்பைப் போக்க...

✉ 'ஜெ, கருணாநிதி இருவருமே தம்மை ஆதரிப்பார்கள்' என்ற பவாரின் ஜோக் வயிற்றைப் பதம் பார்த்து விட்டது!
அரவக்குறிச்சிப்பட்டி,
எம். அசோக்ராஜா.

✉ சரியான மாற்றுக் கட்சியாய்த் திகழ வேண்டிய காங்கிரஸ் வேற்றுக் கட்சியாய் மாறக் காரணமான சோனியாவை நன்றாகவே அடையாளங் காட்டியது தலையங்கம்!
இனாம்மணியாச்சி,
ச. ஆ. கேசவன்.

✉ சோனியாவின் செண்டிமெண்ட் நாடகத்தால், கட்டுக்கோப்பாக இருந்த காங்கிரஸுக்கு பலவீனமே தவிர பலனும் பலமும் இல்லை என்பதை ஆணித்தரமாகவே தலையங்கத்தின் வாயிலாக விளக்கி விட்டீர்கள்!
கும்பகோணம்,
எஸ்.கே.மூர்த்தி.

✉ அக்னியின் உக்கிரத்தில் தினமும் அலைந்து திரிந்து அம்பது, நூறு என்று சம்பாதிக்கும் ஏழை பாழைகளிடமும் அஞ்சு, பத்து என்று மாமூல் வாங்கிக் கொண்டு போவதாக அவர்கள் சொன்னதைக் கல்கியில் படித்தபோது, பற்றி எரிகிறது இளநீரும், நீர்மோரும் கூட!
சென்னை - 28,
ஏ. செல்வம்.

✉ 'புகைச்சலா?' என்ற கட்டுரையைப் படித்தேன். இந்தத் தேர்தலில் ம.தி.மு.கவுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகிறது என்று ஸ்டாலின் சொல்லியிருப்பது சரியானது. பெரியார், அண்ணா வழியில் செயல்படும் தி.மு.க., ம.தி.மு.க. நாளடைவில் ஒன்று சேருவதை தவிர்க்க முடியாமலும் போகலாம்.
சென்னை - 73,
கே. வி. ராமன்.

✉ 'இவர்கள் மட்டும் பிரதமர் ஆகக் கூடாதா?' சாருகேசியின் கற்பனை அசத்தல்! கற்பனையாகக் கூட அவர்கள் தேசத்திற்குப் புரிந்த நல்ல விஷயங்கள் இல்லையே என்பதை எண்ணும் போது ஒரு நெருடல் ஏற்படாமலில்லை!
நெய்வேலி - 3,
எஸ். ஸ்ரீகாந்த்.

✉ அலமு-அரஸ் கூட்டணியில் டுப்பி 'டெவில்' அசத்துகிறான்!
திருச்சி,
ராஜிராதா.

✉ அட, இனி ஜப்பானில் 'ட்விங்கிள்... ட்விங்கிள்... சூப்பர் ஸ்டார்' பாட்டுதானா?
சென்னை - 86,
ச. புகழேந்தி

✉ சத்யஜித்ராயின் அனுகூல் சிறுகதை அருமை. அவரின் பல தரமான திரைப் படங்களை ரசித்திருக்கிறேன். அவர் ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியரும் கூட என்பதை இக்கதை மூலம் தெரிந்து கொண்டேன்.
சென்னை - 91,
பால கல்கி.

✉ இளம் எழுத்தாளர்களைப் பற்றி கல்கி அவர்கள் 1954ல் குறிப்பிட்டது இப்போது சொல்வது போல் இருக்கிறது! கல்கி பத்திரிகைபோல் வளரும் எழுத்தாளர்களை வேறு யார் ஊக்குவித்திருக்கிறார்கள்?
பொன்மலை,
ஆர். பிரகாஷ்.

✉ அருண் சரண்யாவின் 'நேற்று வாழ்ந்தவர்' நல்லதொரு படைப்பு. அதைப் படித்ததும் சார்லஸ் பாம்ப்பின் 'எலியாவின் கட்டுரைகள்' என்ற நூலில் உள்ள "கனவுக் குழந்தைகள்" என்ற கட்டுரை நினைவுக்கு வந்தது. "ஞாபகத்தில் உள்ள கருத்துக்கள் நம்மையறியாது நம்முடைய நூலில் புகுந்து விடுவதுண்டு'' என்ற ஹோம்ஸின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை?
திருச்சி - 5,
கோ. சுந்தரராமன்.

✉ தி.க.சி. அவர்கள் 75 வயதில் கண்களில் கண்ணீர் ஒழுக, விடாமல் படிப்பதாக கடிதம் எழுதியிருந்தார். என் அனுபவத்தில் ஒரு இலவச இயற்கை மருத்துவ ஆலோசனை: கண் கழுவும் குப்பிகள் இயற்கை மருத்துவ மனைகளிலோ அல்லது காதிகிராப்ட்களிலோ கிடைக்கும். சுமார் 20ரூபாய் விலை. தினமும் ஒரு தம்ளர் பானைத் தண்ணீர்தான் செலவு. விளக்கவுரையும் உண்டு!. நீங்களும் பயன்படுத்தலாம்; கண்ணில் கண்ணீர் வராது; நீண்ட நேரம் படிக்கலாம்! களைப்பே தெரியாது!
கோவை- 25,
எம்.எஸ்.பி. காசிவிஸ்வநாதன்.

வி.ஐ.பி.யைத் தெரிஞ்சுக்கங்க!

1980ம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் முகையூர் தொகுதியில் அனந்தபுரம் என்ற கிராமத்தில் 'காங்கிரஸ் சார்பாக நிற்கும் தமக்கு கைச் சின்னத்தில் வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார் அந்த இளைஞர். அப்போது கட்சிப் பிரமுகர் ஒருவர் அருகில் வந்து "முகையூர் தொகுதிக்கு காங்கிரஸ் சார்பாக போட்டியிட சுந்தரமூர்த்தி என்பவருக்கு டிக்கெட் கொடுத்திருப்பதாக அறிவிப்பு வந்திருக்கிறது என்ற அதிர்ச்சிச் செய்தியைச் சொன்னார். 'காங்கிரஸ் வேட்பாளர்' என்று அறிவிக்கப்பட்டு இரண்டு நாட்கள் பிரசாரம் செய்த பின் இப்படிப்பட்ட நிலை ஏற்படும் என்று அந்த இளைஞர் சிறிதும் நினைக்கவில்லை. இருந்தாலும் தலைமையின் ஆணையை ஏற்று, தேர்தல் களத்தில் இருந்து வாபஸ் பெற்றார் அவர்.

அது போன்ற அனுபவம் மீண்டும் தமக்கு வராது என்று உறுதியாக நம்பிய அந்த இளைஞருக்கு, 1984 சட்டமன்றத் தேர்தலும் அதே போன்ற சோதனையைச் சந்திக்க வைத்தது. அந்தத் தேர்தலில் கடலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, அவரை மாற்றி, செல்லப்பா என்பவரை வேட்பாளராக நிறுத்தியது காங்கிரஸ் தலைமை.

"இப்படிப்பட்ட சங்கடங்கள் என்னை ஒரு போதும் சோர்வில் ஆழ்த்தியதில்லை. மாறாக, அவற்றை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு ஒரு புதிய உத்வேகத்துடன் போராடும் குணத்தையே வளர்த்தன" என்கிறார் தமிழ் மாநில காங்கிரஸின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான எஸ். அழகிரி.

அந்த இரண்டு அனுபவங்களுக்குப் பிறகு 1991ல் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டு எந்தவிதப் பிரச்னையும் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர் ஆன அழகிரி, 1996ம் ஆண்டும் அதே தொகுதியில் த.மா.கா. வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார்.

நுங்கும் நுரையுமாக கொப்பளிக்கும் வீராணம் ஏரிக் கரையில் குதிரையில் செல்லும் வந்தியத் தேவனை, கல்கி அவர்கள் பொன்னியின் செல்வனில் முதன் முதலாக அறிமுகப்படுத்துவாரல்லவா. அந்தப் பகுதியிலுள்ள கிரப்பாளையம்தான் அழகிரியின் ஊர். தங்கள் பகுதியின் பெருமையை வரலாற்று ரீதியாக எடுத்துச் சொல்லி வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியது மட்டுமல்லாமல், தங்களுக்கு இலக்கிய ரசனையையும் வளர்த்ததில் பொன்னியின் செல்வனுக்கு பெரும் பங்கு உண்டு என்கிறார் அழகிரி.

அப்பா சம்பந்தம் ஒரு முழுமையான திராவிடர் கழகக்காரர். எனவே மூன்று மகன்களுக்கும் முறையே திராவிட இயக்கத் தூண்களான பன்னீர்செல்வம், சௌந்தர பாண்டியன், அழகிரி என்று பெயர் வைத்ததில் ஆச்சர்யமில்லை. கிராம கர்ணமாகவும் அப்பா இருந்ததால் ஊரில் நல்ல மரியாதை. பெரியார் உட்பட திராவிட இயக்க பிரமுகர்கள் அந்தப் பகுதிக்கு வந்தால் தவறாமல் விசிட் செய்யும் வீடு அவருடையது. சம்பந்தம் நல்ல பேச்சாளரும் கூட. "என் தந்தை அவரின் கருத்தை எங்கள் மேல் சிறிதும் திணித்ததில்லை. எங்களுக்கு முழு கருத்துச் சுதந்தரம் கொடுத்தார். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் போதே காங்கிரஸ் மேடைகளில் பேசத் துவங்கி விட்டேன்" என்கிறார் அழகிரி.

அழகிரிக்கு கணீரென்று குரல் வளம்.

மூப்பனார் என்ன

"இன்று மாலை... காங்கிரஸ் பொதுக் கூட்டம்" என்று மாட்டு வண்டியில் ஸ்பீக்கர் கட்டிக் கொண்டு தெருத் தெருவாக அறிவிக்க, உள்ளூர் பிரமுகர்கள் சிறுவன் அழகிரியைத்தான் தேடுவார்களாம். அண்ணாமலையில் பி.யு.சி. படிக்கும்போது காங்கிரஸ் சார்பாக இயங்கிக் கொண்டிருந்த தேசிய தமிழ் மாணவர் பேரவையில் உறுப்பினராகி விட்டார் அழகிரி. ஈ.வெ.கி. சம்பத், எம்.பி. சுப்பிரமணியம், இளையபெருமாள் போன்ற தலைவர்களுடன் நல்ல பழக்கம் ஏற்பட்டது.

முதன் முதலாக சம்பத் அவர்களைச் சந்திக்க அவர் வீட்டுக்குச் சென்றிருந்தார் அழகிரி. சம்பத் அவர்களுக்கு அழகிரியை



சொன்னாலும் செய்வார்!

அறிமுகம் செய்து வைத்த தஞ்சை ராமமூர்த்தி 'இவர்தான் சிதம்பரம் அழகிரி' என்று சொல்லி அறிமுகப்படுத்தினார். ''உங்களுக்கு கிரப்பாளையம் சம்பந்தம் என்பவரைத் தெரியுமா?'' என்று உடனே சம்பத் கேட்க, அழகிரிக்கு இன்ப அதிர்ச்சி. அவர்தான் தம் தந்தை என்று பணிவுடன் சொன்னார் அழகிரி. "ஓ! சம்பந்தம் மகனா!" என்று சொல்லி பூரிப்படைந்தாராம் சம்பத்.

அழகிரியின் மேடைப் பேச்சில் சம்பத், தா. பாண்டியன் ஆகியோரது தாக்கம் இருக்கும். ''அவர்களைத் தவிர எமர்ஜென்சி கொடுமையில் உயிர் இழந்த தி.மு.க.வைச் சேர்ந்த சிட்டிபாபு அவர்களின் மேடைப் பேச்சும் என்னை மிகவும் கவர்ந்த ஒன்று!'' என்று சொல்லும் அழகிரியை, எஸ்.ஐ. ஆக சேர்த்துவிட ஏற்பாடு செய்தார் அவர் சகோதரர். "இரண்டு நாட்கள் தஞ்சை ரிசர்வ் போலீஸ் கிரவுண்டை சுற்றிய பின் 'ஐயோ... நமது லட்சியங்கள் என்னாவது' என்று அரசியலுக்குத் திரும்பி வந்து விட்டேன்'' என்கிறார்.

காங்கிரஸில் மூப்பனாரின் எதிர் கோஷ்டித் தலைவர்களுடன் அதிகமாகப் பழகிக் கொண்டிருந்ததால் அரசியலில் சேர்ந்த சில வருடங்கள் வரை மூப்பனாருடன் அவ்வளவாக அழகிரிக்கு தொடர்பே யில்லை. அழகிரி, இளைஞர் காங்கிரஸ் மாநிலத் துணைத் தலைவராக இருந்த போது, மாவட்டத் தலைவர் சுப்பிரமணிய ரெட்டியார், 'சுந்தர பெருமாள் கோயிலுக்கு மூப்பனாரைச் சந்திக்கச் செல்லுகிறேன்... வாங்களேன்'' என்றழைக்க, மூப்பனாரைச் சந்திக்க அவருடன் சென்றார் அழகிரி. முதல் சந்திப்பிலேயே "ஆஹா... இவரல்லவா நமது தலைவர்... இத்தனை நாள் இவரைச் சந்திக்காமல் இருந்து விட்டோமே!'' என்று வருத்தப்பட்டுப் போனார் அழகிரி.

அதன்பின் அடிக்கடி மூப்பனார் அவர்களுடன் தொடர்பு கொண்டு உறவை வளர்த்துக் கொண்டார். அதிலும் ஒரு சிக்கல் இருந்தது. தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திண்டிவனம் ராமமூர்த்தி, மூப்பனாருக்கு மிகவும் நெருங்கியவராக இருந்தார். தமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவர் மூலமாகத்தான் மூப்பனாரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். அழகிரியின் நேரடித் தொடர்பு அவருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''திண்டிவனம் ராமமூர்த்தியை எனது அன்பான எதிரி என்று கூடச் சொல்லலாம். கிரப்பாளையம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவிக்கு நான் போட்டியிட விரும்பினேன். ஆனால் திண்டிவனம் வேறொருவருக்காக சிபாரிசு செய்தார். கடைசியில் தலைவர் மூப்பனார் ஆதரவில் எனக்கு சீட் கிடைத்து நான் பஞ்சாத்து யூனியன் தலைவர் ஆனேன்!''

தமது அரசியல் வாழ்வில் ஆறு முறை சிறைக்குப் போயிருக்கிறார் அழகிரி. "எனக்குப் பிடித்த ஜெயில் கடலூர் ஜெயில்தான். கேப்பர் குவாரி என்ற சிறு குன்றின் மீது



''நம்ம தலைவர், கட்சிப் பொருளாளரைக் கட்சிலேருந்து நீக்கிட்டாராமே?''

''பின்னே! 'கட்சிப் பணிகளை முடுக்கறதுக்காக ஸ்பேனர்கள் வாங்கிய செலவு பத்தாயிரம்'னு கணக்குக் காட்டினாராம்!''

— டி.என். பாலகிருஷ்ணன்

அந்த ஜெயில் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஜெயிலுக்குப் போனவுடன் அங்கிருக்கும் பிரபல கைதிகளுடன் அறிமுகம் செய்து கொள்வேன். அதன் பின் பரோலில் வெளிவரும் அவர்கள் என்னைச் சந்திப்பார்கள். பரோலை நீட்டிக்க சட்ட அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமியின் அனுமதியைப் பெற்றுக் கொடுப்பேன். இப்படிப் பல ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு பரோல் நீட்டிப்பு வாங்கித் தந்ததால் கே.ஏ.கே. கூட கிண்டலடிப்பார். சட்டமன்றத்தில் பேசும்போது அடிக்கடி 'விதுர நீதி'யிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசுவேன். ஒருமுறை கே.ஏ.கே. 'எனக்கு அந்தப் புத்தகத்தின் ஒரு காப்பி வாங்கி கொடுங்களேன் தம்பி' என்று கேட்டார். அவருக்கு ஒரு புத்தகம் வாங்கிக் கொடுத்தேன். பல நேரங்களில் முடிவுகளை எடுப்பதற்கு விதுர நீதி மிகவும் பயன்பட்டிருக்கிறது என்று கே.ஏ.கே. சொல்லியிருக்கிறார்!''

அழகிரி கிரப்பாளையம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தபோது, அன்னை இந்திரா மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒன்றைத் துவங்கி ஆயிரம் கிராமப்புற பெண்களுக்கு இந்தியன் வங்கி மூலம் கடனுதவி பெற்று தையல் இயந்திரம் வாங்கிக் கொடுத்தார். அந்த விழாவில் மூப்பனார் பேசும்போது 'வங்கியில் கடன் வாங்கிக் கொடுப்பது பெரிய விஷயமல்ல; கடன் வாங்கிய எல்லோரும் அதை முழுவதுமாக திருப்பிக் கட்ட அழகிரி துணை நிற்க வேண்டும்'' என்று பேசினார். தலைவர் அவர்களின் பேச்சை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு எல்லோரிடமும் பணம் வசூல் செய்து வங்கிக் கடனை அடைத்தார் அழகிரி.

''கமிட்டெட் ஆக நான் பணிபுரிவது தலைவரை மிகவும் கவர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் தொடர்ந்து என் மீது அன்பு மழை பொழிகிறார்'' என்று பெருமையுடன் சொல்லும் அழகிரி, ஓய்வு கிடைத்தால் ஜெயகாந்தன், ஓஷோ புத்தகங்களை கையில் எடுத்துக் கொள்வாராம்.

''எனது குடும்ப பின்னணி காரணமாக எனக்கு முதலில் அறிமுகமானவர் பாரதிதாசன். அவர் மூலமாகத்தான் பாரதியை உணர்ந்து படித்து ரசித்தேன்!'' என்று சொல்லும் அழகிரியின் அறையில் நிறைய கடவுள் படங்கள்!

ஜெயலலிதா ஆட்சியில் கொடியன்குளத்தில் நடந்த ஜாதிக் கலவரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். சட்டமன்றத்தில் அதைப் பற்றிய விவாதம் வந்த போது தாம் பதினெட்டு மணி நேரம் பணிபுரியும் முதல்வராக இருப்பதாகப் பெருமையுடன் சொன்னார் ஜெயலலிதா.

அதன் பின் பேசிய அழகிரி, ஜெயலலிதா எப்படி செயல்படாத முதல்வராக இருக்கிறார் என்பதை மிகவும் கிண்டலாகப் பேசி விளக்கி, 'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்... உள்ளே இருப்பது ஈறும் பேனாம்...' என்று முடித்தார். அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவர் பேசும் போது பல முறை குறுக்கிட்டு குழப்பம் விளைவித்தார்கள். அன்று பார்த்து ஜெயலலிதா தமது ஹேர் ஸ்டைலை கொஞ்சம் மாற்றி இருந்தார். ''இன்னிக்கு பெரிய கலாட்டா ஆகி இருக்கும்... தப்பிச்சிங்க'' என்று எஸ்.ஆர்.பி. சொன்னாராம்.

த.மா.காவுக்கு ஏற்படும் அரசியல் தடுமாற்றங்கள் குறித்து அழகிரியிடம் கேட்டால் டக்கென்று பதில் வருகிறது.

''எனக்குச் சிறு வயது முதலே பொதுவுடைமைத் தத்துவங்கள் பிடிக்கும். ஆனால் நமது நாட்டில் சமத்துவ சோஷலிச சமுதாயம் அமைய வேண்டுமென்றால் காங்கிரஸின் உயரிய கருத்துக்கள், கொள்கைகள் மூலமாக மட்டுமே சாத்தியமாகும் என்று காங்கிரஸில் இணைந்தவன் நான். மூப்பனார் அவர்களைத் தலைவராக ஏற்றுச் செயல்படும் என்னால் வேறொரு தலைவரின் கீழ் இனி பணிபுரிய முடியுமா என்பது சந்தேகமே! 'இனி அரசியல் வேண்டாம்; அவரவர் சொந்த வேலையை கவனிக்கப் போங்க' என்று மூப்பனார் ஆணையிட்டால், உடனே அரசியலுக்கு மூட்டைகட்டிவிட்டு, சொந்த வேலையைப் பார்க்கப் போய் விடுவேன். இது மேலோட்டமாகச் சொல்லப்படும் பேச்சல்ல. அடி மனத்திலிருந்து வருவது!'' என்று உணர்ச்சி பூர்வமாகச் சொல்கிறார் அழகிரி.

— ஸ்ரீநிவாசன்

படம் : ஸ்ரீஹரி



• தப்பாட்டம்...

ஆண்கள் மட்டுமே - குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் செய்து வந்த ஆட்டம் தப்பாட்டம். ஆபத்து மிகுந்த கலை. அதைக் கற்றதோடு மட்டுமல்லாது இந்தியா முழுக்க மேடையேற்றியும் வருகிறார்கள், திண்டுக்கல் சக்தி போர்ப்பறைக் கலைக் குழு கலைஞிகள். மொத்தம் பதினாறு பெண்கள்.

தற்போதைய காலகட்டத்தில் கிராமத்து ஆண்களே மறந்து வரும் ஒரு கலை வடிவம். அதற்குப் பெண்கள் உயிர்கொடுத்தது எப்படி? கலைக் குழுவை உருவாக்கிய சிஸ்டர் சந்திராவிடம் கேட்டோம். கிறிஸ்டியன் மிஷினரியில் சிஸ்டர். இசை, பரதம், கரகாட்டம் என பல கலைகள் கற்றவர். பாதல் சர்க்காரிடம் வீதி நாடகத்தில் பயிற்சி பெற்றவர்.

''ஆறு வருடம் ஆகிவிட்டது இந்தத் தப்பாட்டக் கலைக் குழுவைத் துவங்கி'' என்று விளக்கினார்.



• சகோதரி சந்திரா

''நான் நாகர் கோயிலிலிருந்து திண்டுக்கல் மிஷினரிக்கு வந்தபோது அந்த ஊரில் ஆண்கள் 'தப்பு' (பறை) அடிப்பதைப் பார்த்தேன். அதில் நிறைய சாகச வித்தைகள் இருந்தன. நல்ல கலை. ஆனால் அனைவரும் 'தண்ணி' போட்டு விட்டே ஆடினர். அவர்களின் மூன்று நாள் ஆட்டத்திற்கு அந்த ஊர் நாட்டாண்மை ரொம்பக் குறைவான ஊதியமும் ஓரிரு வேளைச் சோறும் போட்டு அசிங்கப் படுத்தினார். இவ்வளவு நல்ல கலைக்கு உரிய மரியாதையில்லையே என்று எனக்குள் ஆதங்கம். நானே ஒரு பாடல் அமைத்

தப்பாட்டத்துக்கு உயிர் கொடுக்கும் பெண்கள்!

துப் பாடி, தப்பாட்டக் குழுவினரை அழைத்து ஆட வைத்தேன். அப்போது ஒரே ஒரு பெண் என்னுடன் தாளம் போட்டாள். பிறகு அவர்கள் சார்ந்திருந்த குடும்பப் பெண்களைத் திரட்டினேன். அதற்கு அவர்களின் பெற்றோர்களிடமே பெரிய எதிர்ப்பு. நான் நடத்தும் தையற் பயிற்சிப் பள்ளிப் பெண்கள் சிலரைத் தப்படிக்க விட்ட போது, 'எம் பொண்ணைத் தப்படிக்க வச்சுட்டீங்களே!' என மனம் வருந்தினர். இந்தத் தப்பாட்டத்தை அவர்கள் ஜாதிக்கான அடையாளமாக-அசிங்கமாகக் கருதினர். அதை உடைப்பதற்காகவே அதனை முறைப்படுத்தி, ட்யூன் அமைத்து, முகபாவங்கள், நடன தோரணைகளை மாற்றியமைத்து அவரவர் ஊரிலேயே நிகழ்ச்சி பண்ணினேன். அங்கே கூடிய கூட்டம், கிடைத்த கைதட்டல், பாராட்டு, பரிசு மழைகள் கண்டு அவர்களின் பெற்றோர்களே அசந்து, அவர்களை வாழ்த்தி அனுப்ப ஆரம்பித்தனர்!

"தப்பாட்டம் என்றில்லை. அனைத்துக் கிராமிய நடனங்களும் - கும்மி - கோலாட்டம் - கரகம் என சகல வித்தைகளும் செய்கிறோம். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியே இவை அமைக்கப்படுகின்றன. இதையே கலை இரவுகளிலும், மகளிர், தொழிலாளர் அமைப்புகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கொடுத்து வருகிறோம்!"

"கலை இரவுகளிலும், சில அமைப்பு சார்ந்த நிகழ்ச்சிகளிலும் மட்டுமே இதைச் செய்வதால் உங்களுக்கு ஒரு முத்திரை குத்தி விடுவார்களே. கலை பலதரப்பட்ட மக்களைச் சென்று சேர்வதிலும் சிக்கல்கள் ஏற்படுமே?"

"உண்மைதான். நாங்களும் ஆரம்ப காலத்தில் கோயில் விசேஷங்களுக்கெல்லாம் போய் வந்தோம். ஆனால் அதில் வரும் ஆடியன்ஸ் வேறு மாதிரி இருக்கிறார்கள். கொச்சையாய்ப் பேசி சில்மிஷங்களிலும் ஈடுபட விழைகிறார்கள். பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாததால் கோயில் திருவிழாக்களுக்குப் போவதில்லை. கிறிஸ்துவக் கோயில் விழாக்களில் இம்மாதிரிப் பிரச்னைகள் இல்லை என்பதால் அங்கே போய் நிகழ்த்துகிறோம். என்றாலும், 'உங்க சாமி கோயிலுக்கு மட்டும் போய் நிகழ்ச்சி நடத்துகிறீர்களே...? எங்க கோயிலுக்கு வரமாட்டீங்களோ?'ன்னு மற்றவர்கள் கேட்டு விடக் கூடாதல்லவா! அதனால் அதிலும் ரொம்ப கவனமாகவே இருக்கிறோம்."

இவர்கள் குழுவில், ஆரம்பத்தில் பன்னிரண்டு பேர் மட்டும்தான் இருந்தனராம். இப்போது தலா நாலு பேர் கொண்ட ஆறு குழுக்கள் இருக்கின்றன. இதற்காகத் திண்டுக்கல்லில் ஆறு மாதப் பயிற்சி கொடுக்கின்றனர். தற்போது நிறையப் பெண்கள் இதைக் கற்றுக் கொள்ள வருகின்றனர். என்றாலும் அவர்களின் உடல்நலன் குறித்த கவனத்துடன்தான் பயிற்சிக்குப் பரிசீலிக்கிறார்களாம்.

இப் பெண்களுக்கு மெய்சிலிர்க்க வைத்த நிகழ்ச்சி ஏதும் உண்டா?

கடந்த மார்ச் மாதம், டெல்லியில் - பார்லிமெண்டில் மகளிருக்கான இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படாத சூழலில் பார்லிமெண்ட் நோக்கி படையெடுத்த பெண்கள் படையில் இக் கலைக் குழுவினரும் அடக்கம். பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட அப் பெண்கள் சமுத்திரத்தைக் காவலர்கள் தடுத்து நிறுத்த, அங்கே சும்மாயிருக்கவில்லை இவர்கள். கையோடு கொண்டு போயிருந்த 'பறை'யை எடுத்து அடித்துப் போட்ட ஆட்டத்தில் டெல்லி நகரின் ஒரு பகுதியே திரண்டு வந்து விட்டதாம்! பாதி நாள் போக்குவரத்தே ஸ்தம்பிக்கிற அளவுக்குக் கூட்டம் கூட ஆரம்பித்து விட்டதாம்! நடந்ததை விவரித்து குதூகலம் கொள்கின்றனர் இப் பெண்கள்.

சந்திப்பு, படங்கள் : **கேயெஸ்வி**

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

''சாப்பாடா இது! வாயில வைக்க முடியலை. எங்கய்யா உங்க முதலாளி? கூப்பிடுய்யா அவரை!''

''சாப்பிடறதுக்காக பக்கத்துத் தெருவில இருக்கிற சந்திரபவனுக்குப் போயிருக்கிறார்!''

''அடப்பாவமே! நான்தான்யா அந்த சந்திரபவன் ஹோட்டல் முதலாளி. அங்க சாப்பாடு நல்லா இல்லேன்னுதானே இங்க வந்தேன்!''

- வி. விக்னேஷ்



கேஸ்ட்ரோ (GASTRO)

வாயுத் தொல்லையா?
சிறந்த மருந்து கேஸ்ட்ரோவை நம்புங்கள்!

நம்மிடையே எண்ணற்ற நபர்கள் வாயு தொல்லைகளினால் அவதிப்படுகிறார்கள். பலரக மருந்துகளையும் சிகிச்சைகளையும் பின்பற்றி பலன் கிடைக்காமல் மனம் நொந்து சலிப்படைந்து கொள்கிறார்கள். காரணம் வாயுத் தொல்லை ஒரு நோய் என்பதை இவர்கள் உணராமல் இருப்பதுதான்.

வாயுத் தொல்லைகளினால் ஏற்படும் இதர நோய் அறிகுறிகள்

வயிற்றில் எரிச்சல் அல்லது வயிற்றில் ஏதோ பாரம் இருப்பது போன்ற உணர்வு, நெஞ்சுவலி, வயிறு நிறைந்து இருக்கும் பொழுது சத்தத்துடன் கூடிய காற்று வெளியேறுதல், வாயு வெளியேறுதல், இனிப்பு பண்டங்களின் மேல் அளவிற்கு அதிகமான ஆசை, நடக்கும்பொழுது மூச்சு வாங்குதல், காது குடைச்சல், வாயில் துர்நாற்றம், இருமும் பொழுது நுரையீரல்களில் வலி, சளி அல்லது சீதத்துடன் வெளிவரும் மலம், தொண்டையில் சளி கட்டுதல், முன்கோபம், தினசரி அலுவல்களில் ஈடுபாடு இல்லாமை, கவனக்குறைவு போன்றவை வாயுத் தொல்லைகளினால் ஏற்படும் சில அறிகுறிகள்.

மேற்கண்ட அறிகுறிகள் ஏதாவது தங்களுக்கு தென்பட்டால் கேஸ்ட்ரோ உபயோகியுங்கள். மிகச் சிறந்த தூய ஆயுர்வேத மருந்துகளால் தயாரிக்கப்பட்டது. இது உங்களை வாயுத் தொல்லைகளிலிருந்து முழுமையாக விடுவித்து விடுவது மட்டுமின்றி வாயுத் தொல்லையின் அடிப்படை காரணத்தையும் முழுமையாக அழித்து விடுகிறது. இதுவே 'கேஸ்ட்ரோ'வின் தன்னிகரற்ற தனிச்சிறப்பு.

கேஸ்ட்ரோ வாயுத் தொல்லைகளை விரட்டுகிறது. நோயை முழுமையாக குணமாக்குகிறது.



Rani's

தயாரிப்பாளர்கள்

ராணி டிரக் ஹவுஸ்

நெல்லாயி – 680 305, திருச்சூர், கேரளா. போன்/பேக்ஸ் : 0488 - 881339

தமிழ்நாட்டு முகவர் (C&F) – தமருகாதம் பார்மாசூட்டிகல்ஸ் (பி) லிட்.,

52, சிங்கண்ண செட்டி தெரு, முதல் தளம், சிந்தாதிரிபேட்டை, சென்னை - 2. போன் : 8592096

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்

DISTRIBUTORS : CHENNAI : 1) Vasantha Enterprises, Jafferkhanpet, Ph. 4711372; 2) Anandhi Ram Agencies, Adayar; 3) Hema Medical Hall, Park Town, Ph. 5355973; 4) Arunachalam Medical Stores, Chindadripet, Ph. 8534175; 5) Surana Pharmaceuticals, Ph. 586826; 6) Kumaramalayan Distributor, Royapettah, Ph. 4990450; 7) Gowri Enterprises, Tambaram, Ph. 2369215; 8) Gowtham Pharma Distributor, Ph. 582123/586746; 9) Puraswalkam - Plas Pharma, Ph. 6425668. **VELLORE :** M.R. Stores, Ph. 220023; **KAVERIPATTINAM :** Jeeva Medical Stores, Ph. 52032; **DHARMAPURI :** Tamilambigai Marunthakam, Ph. 61854; **VILLUPURAM :** Malars Pharmaceuticals, Ph. 22578; **PONDICHERRY :** Shankar Ganesh Associates, Ph. 335355; **NEYVELI :** Anuradha Enterprises, Ph. 62728; **SALEM :** Prabhat Medical Stores, Shevapet, Ph. 220441/220881; **ERODE :** Shri Raghavendra Swamy Medicals, Ph. 220562; **COIMBATORE :** Devi Enterprises, Ph. 442359; **TRICHY :** A.K.S. Agencies, Ph. 765055/765745; **KUMBAKONAM :** A. Shanmugham & Co., Ph. 431737; **THANJAVUR :** Saraswathi Medical Stores, Ph. 31264; **THIRUVARUR :** Meenu Traders, Ph. 22585; **PUDUKOTTAI :** Sri Balaji Enterprises, Ph. 60979; **MADURAI :** Dhanalakshmi & Co., Ph. 621421; **PARAMKUDI :** Kamala Medicals, Ph. 21340; **VIRUDHUNAGAR :** Meenakshi Medical Agencies, Ph. 44382; **TUTICORIN :** Sethu Ram & Sons, Ph. 325639; **TIRUNELVELI :** Selvam Medical Agencies, Ph. 337591; **NAGERCOIL :** Southern Agencies, South Car Street; M. Gopalanasan, Bilamore Road.

OUTSIDE TAMILNADU : KERALA : Available with all medical shops.

BOMBAY : Sanjay Distributors, Ph. 2050095; **DELHI :** Cochin Ayurvedic Centre, Ph. 4619367/4691123; **INDORE :** Kerala Stores, Ph. 550383; **AHMEDABAD :** Kerala Stores, Vastrapur, Ph. 6731064; **BANGALORE :** Thomas Agencies, Ph. 2871535; K.G.F. : S. Parasmull, Avenue Road, Robertsonpet; **TIRUPATI :** Surya Medicals, Ph. 20614.

இப்பொழுது வளைகுடா நாடுகளில் எல்லா சூப்பர் மார்க்கெட்டுகளிலும் இலங்கையிலும் கிடைக்கும். யு.எ.இ (ரசல் கைமா) போன் : 227145; பஹ்ரைன் (மனாமா) போன் : 254340; சவூதி அரேபியா (தமாம்) போன் : 8334034; மஸ்கட் (ஜலான் பிடு அல்) போன் : 453872/453071; இலங்கை அனுபம் என்டர்பிரைசஸ், 110 வேலுவான ப்ளேஸ், கொழும்பு - 9. போன் : 681287

மேல் தாழ்ப்பாள்

ஆர். வெங்கடேஷ்

எதிரே சுப்ரியா விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாடுவதை விட, அதைப் பார்த்துக் குதூகலித்துக் கொண்டிருந்தாள். பழம்பெரும் பாண்டியாட்டம். அவளை விடப் பெரிய பெண்கள் விளையாடுவதை, கூடவே நின்று குதித்து குதித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். விளையாட்டுக்கள் புரியும் வயதுதான். நாலைந்து பெண்கள். எல்லாம் பக்கத்து பக்கத்து வீடுகள். சாயங்காலம் போவதே தெரியாமல் கொண்டாட்டம்.

பங்கஜம், சுப்ரியாவை நான்கு மணிக்கே தலைவாரி, பௌடர் போட்டு, வேறு உடை மாற்றி, வாசலுக்கு அழைத்து வந்து விட்டாள். மணி ஐந்தரை ஆறு இருக்கும். மாலதி வந்து விட்டாளே. இன்னும் கொஞ்சம் நேரத்தில் பத்மநாபனும் வந்து விடுவான்.

"பாட்டி, தண்ணி!"

அவசரம் முகத்தில் தொனிக்க, சுப்ரியா ஓடி வந்தாள். பக்கத்தில் இருந்த தண்ணீர் பாட்டிலில் இருந்து தண்ணீரை அவசரமாக உறிஞ்சி விட்டு ஓடினாள்.

"இருட்டாயிடுச்சு, உள்ளே போலாம்மா."

"கொஞ்ச நேரத்துல வந்துடறேன், என்ன..."

வார்த்தை காற்றில் கரைய, விரைவான ஓட்டம். பங்கஜத்துக்கும் உள்ளே போய் ஒன்றும் ஆக வேண்டியதில்லை. சுப்ரியாவின் மாலை விளையாட்டை மனதில் கொண்டு, மூன்று மணிக்கே இரவுக்குத் தேவையான சாதத்தை வைத்ததுடன், புடலங்காயையும் வெட்டி வைத்து விட்டாள். ஏழு மணிக்கு மேல் போய் கூட்டு செய்தாலும், எட்டு மணிக்கெல்லாம் சாப்பிட உட்காரலாம்.

பல வகையில் இந்த வீடு பங்கஜத்துக்குப் பிடித்திருந்தது. பத்து ஒவ்வொருமுறை கடிதம் போடும் போதும் சென்னைக்கு வரும்படி கட்டாயம் எழுதுவான். காலைச் சுற்றிக் கொண்டிருக்கும் கணவன், பிள்ளை, வீடு போன்றவற்றை அவ்வளவு சுலபத்தில் விலக்கிக் கொண்டு வந்து விட முடியவில்லை. இத்தனைக்கும் பத்து வீட்டுக்கு மூத்தவன். அவன் வீட்டுக்கே வந்து போக முடியவில்லை என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

இந்த முறைதான் முழுதாகப் பத்து நாட்கள் கிடைத்தன. விடுமுறை போல. அப்பா எங்கோ டிரெயினிங் என்று போக, இரண்டாவது மகன், 'நான் ஓட்டலில் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் சீமந்தப் புத்திரனோடும், அவன் பெற்ற இளவரசியோடும் கொஞ்சிக் குலாவி விட்டு வா' என்று மதுரையை விட்டுக் கிளப்பினான்.

இங்கே அத்தனையும் அற்புதம். பத்துவும் மாலதியும் சிந்தாமல் சிதறாமல் குடும்பம் நடத்தினார்கள். சிக்கனமும் சிறப்பும் ஒவ்வொரு செயலிலும் தெரிந்தது. புதுக்குடித்தனம் போட்டது, பிள்ளைப் பிறப்பு என்று அவ்வப்போது எட்டிப் பார்த்ததோடு, இப்போது பக்கத்தில் நின்று அத்தனையையும் பார்க்கும் போது, பிரமிப்புத் தட்டுகிறது. தான் வளர்த்த பத்துவா? எப்பொழுது பார்த்தாலும் விளையாட்டு விளையாட்டு என்று கிரிக்கெட் மட்டையை சிரமேற்கொண்டு அலைந்தவனா இவன்? இவ்வளவு பொறுப்பும் பக்குவமும் எப்படி வந்தன?

நடுவில் ஒரு வாரம், இங்கே இரண்டாமவன், ஏதோ ஒரு இண்டர்வியூவுக்கு வந்து தங்கிவிட்டு, மதுரை வந்தவன், மறக்காமல் மன்னி புகழ் பாடினான். கூடவே,

"நம்ம பத்துவான்னு எனக்கு ஒரே டவுட்தாம்மா. என்னங்கறே? தானே துணி தோய்ச்சு உலத்தறான், சுப்ரியாவ குளிப்பாட்டறான். டிரஸ் பண்ணிவுடறான்,



எல்லாத்த ,விட சூப்பரா சமையல் பண்றான். விளையாட்டே கதின்னு கெடந்த பத்துவான்னு எனக்கே சந்தேகம் வந்துடிச்சி'' என்றான்.

பங்கஜத்துக்கு இது அவ்வளவு ஆச்சரியம் அளிக்கவில்லை. முடியாது என்று சுணங்க முடியுமா என்ன? ஒரு நிர்ப்பந்தம் வரும் போது, கூடவே அதற்கான அனுசரணையும் வந்து விடுகிறது. அவ்வளவுதான்.

ஆனால், இந்த வீட்டுக்கு வந்தவுடன், பங்கஜத்தை பாதித்த விஷயம் வேறொன்று. வாசல் கதவு.

பங்கஜம் ஊரிலிருந்து வந்த அன்று தான் பத்மநாபன் வாசல் கதவுக்கு உயரமான இடத்தில் இன்னொரு தாழ்ப்பாள் போட்டான். கீழ்த்தாழ்ப்பாள் சுப்ரியாவுக்கு எட்டுகிறதென்றும், தானே போய்த் திறந்து கொண்டு வெளியே போய் விடுகிறாள் என்றும் மாலதி சொன்னாள்.

''உள்ள வேலையா இருக்கும் போது, இவ எங்க இருக்கான்னே தெரியலை! ஒரே விஷமமா இருக்கா. சத்தம் போடாம, தானே கதவு தெறந்துக்கிட்டு வெளியே போயிடறா. ஒருநாள் பயந்தே போயிட்டேன். வாசல்ல போய் நடுரோடுல நிக்கறது. உள்ள வாடின்னு கூப்டாலும் வர மாட்டேங்கறா. என்னங்கறீங்க, ஒரே படுத்தல்.''

அம்மா சொல்வதைக் கேட்ட சுப்ரியா, ஆமாம் என்பது போல் தலையாட்டினாள். 'அப்படியெல்லாம் செய்யக் கூடாது'

என்று பங்கஜம் சொல்ல, 'செய்வேன்' என்றாள். மூன்று வயதுதான். எல்லாவற்றையும் புரிந்து கொள்கிறது. கூடவே தனக்கென்று உள்ள தனித்தன்மையை, உரிமையை விட்டுக் கொடுக்காத மனப்பான்மையும் தெளிவாகப் புரிந்தது.

முதல் இரண்டு நாள் பேசிப் பேசியே பொழுதுபோனது. அம்மா வந்த மகிழ்ச்சியில் பத்து, அலுவலகத்துக்கு விடுமுறை போட்டு விட்டான். அம்மாவைக் கூட்டிக் கொண்டு திருவேற்காடு, மாங்காடு என்றும் பாண்டிபஜார், ரங்கநாதன் தெரு என்றும் பத்துவும் மாலதியும் அலைந்தார்கள். மூன்றாம் நாள் அலுவலகம் கிளம்பும் போது, நான் சுப்ரியாவைப் பார்த்துக் கொள்கிறேன், கிரச்சில் விடவேண்டாம் என்ற போது, மாலதியைப் போன்றே, பத்துவும் யோசித்தான்.

"இருப்பாளாம்மா?" என்றான் பத்து.

"இருக்காம என்னடா? இருப்பா."

"ஓரே விஷமம் பண்ணுவா. கண்ணுல விளக்கெண்ணெயை விட்டு பார்த்துக் கிட்டே இருக்கணும்."

''சரி, பாத்துக்கறேன். நீ ஆபீஸ் போயிட்டு வா.''

சுப்ரியா விஷமமெல்லாம் இல்லை. தானுண்டு, தன் விளையாட்டு சாமான்கள் உண்டென்று இருக்க ஆரம்பித்தாள். பொம்மைகளுக்குக் கதை சொன்னாள். சாதம் ஊட்டினாள். வாய் துடைத்து, குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள். மடியில் போட்டுத் தூங்க வைத்தாள். சிறிது நேரத்தில் தானே ஆசிரியை ஆனாள். பொம்மைகளை வரிசையாக உட்காரவைத்து, கையில் தென்னங்குச்சியோடு பாடம் நடத்தினாள். சில பொம்மைகளை மிரட்டினாள். சிலவற்றை 'குட் கேர்ள்' என்று பாராட்டினாள். அதுவும் அலுத்துப் போக, ஒரு வாரப் பத்திரிகையை மடியில் பரப்பிக் கொண்டு, படங்களைப் பார்த்தாள். அரைகுறை நடிகையைப் பார்த்து, ஷேம் ஷேம் என்றாள்.

அவ்வப்போது பங்கஜம் பார்த்தபோது, சிரித்தாள். கூடவே வெட்கம். பத்தரை மணி போல் சாதம் ஊட்டும்போதும் பெரும் சிரமமில்லை. அப்புறம் மடியில் போட்டுக் கொண்டு டீ.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்க, கொஞ்ச நேரத்தில் தூங்கிப் போனாள். உள்ளறை கட்டிலில், சுப்ரியாவை விட்டு விட்டு, பக்கத்தில் உயர தலையணைகளை அடுக்கி, புரளாமல் முட்டுக் கொடுத்தாள்.

நல்ல தூக்கம். எழுந்தபோது, மணி மூன்றரையோ நான்கோ. ஹார்லிக்ஸைக் குடித்த பின்தான் அந்தப் படலம் ஆரம்பமானது. பொம்மைகள் பிடிக்கவில்லை, புத்தகம் பிடிக்கவில்லை, ஆசிரியப் பணி பிடிக்கவில்லை. எல்லாவற்றிலும் ஒன்றிரண்டு நிமிடங்கள். அப்புறம் அடுத்தது. அப்புறம் அடுத்தது. மெல்ல ஒரு அமைதியின்மை பரவத் தொடங்கியது.

கொஞ்ச நேரம் பங்கஜம் சப்பாத்தி இடுவதையும், அடுப்பில் போட்டு எடுப்பதையும் பார்த்துக் கொண்டிருந்தாள். சப்பாத்தியை தட்டில் விண்டு விண்டு போட, சாப்பிட்டு முடித்தாள். கையலம்பிக் கொண்டவள், போய் வாசல் கதவருகே நின்று கொண்டாள். அவளுக்கு எட்டின தாழ்ப்பாளை நீக்கி விட்டு, திறக்க முயற்சி செய்தாள். மேலே நிமிர்ந்து புதுத் தாழ்ப்பாளைப் பார்த்தவுடன்தான் அழுகை கிளம்பியது.

பங்கஜத்துக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. வேலைகள் அப்படியே இருந்தன. எவ்வளவு சமாதானப்படுத்தியும் சுப்ரியா கேட்கவில்லை. இந்த க்ஷணம் வாசல் போக வேண்டும். கதவைத் திற. இரண்டு நிமிடத்தில் வேலைகளை அப்படி அப்படியே நிறுத்தி விட்டு, கதவைத் திறந்தாள். சட்டெனப் புதுக்காற்று முகத்தில் உரச, சுப்ரியா வாசலுக்கு ஓடிப் போனாள்.

அவள் வயது, பெரியதும் சிறியதுமாய் ஒரு கூட்டம் வாசலில். சட்டெனப் போய் கலந்து கொண்டு விட்டாள். முகத்தில் புதுப் பொலிவு. ஒளி. மகிழ்ச்சி. பொம்மையும், புத்தகமும் தராத உத்வேகம். சகமனித வாசனை. அது தரும் உற்சாகம். துள்ளல். நிறைவு.

அவ்வப்போது, தான் இங்கேதான் இருக்கிறேன். பயப்பட வேண்டாம் என்பது போல் கையசைப்பதும், ஓடி வந்து பார்த்து விட்டுப் போவதுமாய் இருந்தாள் சுப்ரியா.



''ஸ்டிரெச்சர்ல கோர்ட்டுக்கு வந்த தலைவரு திடீர்னு எழுந்து ஓடுறாரே?''

''யாரோ குறும்புக்கார அரசு வக்கீல் பாம்பு! பாம்பு!ன்னு கத்தி இருக்கார்!''

— வளர்மதி ஆசைத்தம்பி

இன்னும் கொஞ்ச நேரத்தில் மாலதி வந்து விடுவாள். சொல்லிக் கொள்ளலாம். இப்போதைய தலையாய கடமை, சுப்ரியாவின் விளையாட்டு.

பத்துவின் அப்பாவும் இப்படித்தான் சொல்வார். பத்துவும் இரண்டாமவனும் ஆடாத மேட்சே இல்லையென்று சொல்லலாம். எல்லாவற்றுக்கும் அப்பாதான் கூடப் போவார். பிள்ளைகளின் வெற்றி அவரின் மகிழ்ச்சி. சொல்லப் போனால், இன்று வரை கிரிக்கெட்டின் நுணுக்கங்கள் அவருக்குத் தெரியாது. இரண்டாமவன் கேலி செய்வான். ஆனால், பிள்ளைகளை விளையாட வைப்பது அவரது தலையாய கடமை.

இனி தானிருக்கும் வரை, மாலையில் விரைவாய் வேலைகளை முடித்து விட்டு, சுப்ரியாவை விளையாட வெளியே அழைத்துச் செல்லவேணும் என்று நினைத்துக் கொண்டாள் பங்கஜம்.

மறுநாள் ஏதோ பேசும்போது, மாலதியிடம் இதைச் சொன்னாள் பங்கஜம். முகத்தில் பெரிய சுவாரசியமில்லை. முக்கிய விஷயமில்லை என்பது போல் பாவனை.

"அதான், வீடு நெறைய விளையாட்டு சாமானா இருக்கே. விளையாட வேண்டியதுதான்."

"எவ்ளோ நேரம்தான் பொம்மைகளோட வெளையாட முடியும்?" என்றாள் பங்கஜம்.

"இவளோட வெளையாட ஆள் வேற தேட முடியுமாம்மா? நம்மோடதான் வெளையாடணும்."

"நாம அவளுக்கு ஈடா என்ன? அவ ஈடு பசங்கதான் அவளுக்குப் பொருத்தம்."

மாலதி எதுவும் பேசவில்லை. தேர்வு விடைத் தாள்களைத் திருத்த உட்கார்ந்து விட்டாள். இரவு சாப்பிடும் போது, மறுபடி அந்தப் பேச்சு வந்தது.

"நான் என் கிளாஸ்லயே பாக்குறேனம்மா. விளையாட்டு அது இதுன்னு போற பெண்கள், ஒண்ணு கூட ஒரு டிஜிட் மார்க்க தாண்டினதில்லை. ஏதோ ஒண்ணு ரெண்டு எக்ஸ்ட்ராடினரியா படிக்கவும் படிக்கும். பெரும்பாலும் படிப்பே ஏறுவதில்லை."

பங்கஜத்தால் பதில் சொல்ல முடியவில்லை. மாலதி சொல்வதில் உண்மை இல்லாமலும் இல்லை. ஆனால் பங்கஜம் நினைப்பது வேறெதோ. சமூகத்திற்கான இணக்கம், பரிவு.

"நான் அப்படிச் சொல்லலை மாலதி. நாலு பேரோடு சேர்ந்து வாழுறது வெளையாடறது, பழகறது..."

"புரியறதும்மா. ஆனா, நாம இப்போ என்ன சொல்லித் தரமோ, அதுதானே வளரும். விளையாட்டுன்னா விளையாட்டு வரும். படிப்புன்னா, படிப்பு வரும். இன்னிக்கு இருக்கற நெலைமையில, படிப்பு இல்லன்னா கஷ்டம்மா. இதோ பாருங்களேன், எம்.எஸ்சி. கெமிஸ்ட்ரி, எம்.பில். படிச்சிருக்கேன். பி.ஜி. டீச்சர்னுதான் பேரு. என்ன மரியாதை, சொல்லுங்க?"

பங்கஜத்தால் இன்னும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. வாழ்க்கைக்கான தேவைகள் என்ன என்பதில் உள்ள புரிதல் இடைவெளி இது. தான் வாழ்ந்து முடித்த கதை இனி பயன்படாதோ?

"இன்னிக்கு எவ்வளவு படிச்சாலும் போதாதும்மா. ஒண்ணு பணம், வசதி, அந்தஸ்து இருக்கணும். இல்ல, யாரும் தொடவே முடியாத, படிப்பு இருக்கணும். அப்பத்தான் ஓரளவுக்கு நம்பிக்கையோட வாழ முடியும். என் காலத்துலயே எம்.ஏ., எம்.எஸ்.சிக்கெல்லாம் மதிப்பே இல்ல. இன்னும் சுப்ரியா காலத்துல எப்படி இருக்குன்னு யோசிச்சுப் பாருங்க."



தலைவரோட பழைய தொழில் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு."

"எப்படிச் சொல்றே?"

"அம்மா, தாயி ஓட்டு போடுங்கன்னு கேட்டாரே!"

— குடந்தை கே.ஆர். ரவிக்குமார்

மௌனத்தைக் கைகொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இன்றைய தேவையின் பிரதிபலிப்பு இதுதானோ என்னவோ? தான் தான் பழசோ? காலாவதியாகிப் போனோமோ?

"**எ**ன்னம்மா, இங்க உட்கார்ந்துக்கிட்டிருக்கீங்க? உள்ள போலை?"

பத்மநாபன் வந்து விட்டான். வண்டியை

மேலேற்றினான். நகரம் தந்த களைப்பு. புகை அழுக்கு.

"சுப்ரியா விளையாடிட்டிருக்காடா. அதோ பாரு. நான் அவள கூட்டிட்டு வர்றேன். நீ உள்ள போ."

பத்மநாபன் நின்று சுப்ரியாவைப் பார்த்தான். நியான் வெளிச்சத்தில் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பா வந்ததைச் சுப்ரியா கவனிக்கவில்லை. ஏதும் சொல்லாமல் உள்ளே போனவன், பத்து நிமிடத்திற்கெல்லாம் உடைமாற்றிக் கொண்டு வாசல் வந்தான். அம்மா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். குழந்தைகள் விளையாடுவதையே கண்கொட்டாமல் பார்த்திருந்தான்.

"என்னடா, அப்படிப் பார்க்கறே?"



"தலைவர் இப்படியா ஓட்டு கேட்கிறது?"

"எப்படித்தான் கேட்கிறாரு?"

"ஆட்சியைக் கவுக்க எனக்கு ஒரு முறை சந்தர்ப்பம் தரக் கூடாதான்னு கேட்கிறாரே!"

– குடந்தை கே. ஆர். ரவிக்குமார்

"இவ விளையாடறதைப் பார்த்து எவ்வளவு நாளாச்சின்னு யோசிக்கறேன்."

கனமான மௌனம் அங்கே உறைந்தது. எண்ணங்களின் பாய்ச்சல். சட்டெனத் தன் இளமையும் வேகமும் மழுங்கிப் போனதோ என்று சம்சயம் மேலிட, பயம் கவ்விக் கொண்டது. கொஞ்ச நேரத்தில், வாழ்க்கை ஓட்டத்தில், தன் தேர்வு எவ்வாறு மாறிக் கொண்டே இருந்திருக்கின்றன என்பதும் விளங்கிற்று. தேவைக்கேற்ப தேர்வு. விருப்பத்திற்கேற்றவை அல்ல.

"இப்ப கிரிக்கெட் வெளையாடறியாடா?"

"கொஞ்ச நாள் எங்க ஆபீஸ் டீம்ல இருந்தேன். அப்புறம் கண்டினியூ பண்ண முடியலை."

"ஏண்டா?"

"பிராக்டீஸ், மேட்ச்னு அலையணும். குடும்பம், குழந்தைன்னு ஆனப்புறம், எது முக்கியம்ங்கறது வந்துடுச்சி. ஏதோ ஒண்ண விட்டுத்தான் ஆகணும்னப்போ, நான் கிரிக்கெட்டை விட்டுட்டேன். எப்போதாவது பழைய ஞாபகம் வந்தா, போய் ஆடிட்டு வருவேன். சீரியஸ்ஸா எல்லாம் ஆடறதில்ல."

பங்கஜமும் மௌனத்துள் விழுந்தாள். விருப்பங்களைக் கலைத்துப் போடுவதில் வாழ்க்கைக்கு அப்படியென்ன ஒரு மகிழ்ச்சியோ? அதையும் மீறி விருப்பங்களைத் தக்கவைத்துக் கொள்வது சாத்தியமா என்ன?

"இதெல்லாம் யோசிக்கும், அப்பா இரேட்மா."

"ஏண்டா?"

"நான் ஏதோ பெரிய கிரிக்கெட்டரா வருவேன்னு நெனைச்சுக்கிட்டு, பாங்குக்கு லீவு போட்டுட்டெல்லாம் என்னோட சுத்தியிருக்கார். நான் இவளுக்காக ஒருநாள் கூட லீவு போட முடிஞ்சதில்ல, தெரியுமா? ஏதாவது உடம்பு சரியில்லன்னா கூட, மாலதி தான் லீவு போட்டுட்டு உட்கார்ந்துக்கிட்டிருப்பா."

வார்த்தைகளுக்குள் தொனித்த இயலாமை பங்கஜத்துக்குப் புரிந்தது.

மறுநாள் விடுமுறை என்று பத்மநாபன் வீட்டில் இருந்தான். மதியத்திற்கு மேல் சுப்ரியா அழத் தொடங்கினாள். பங்கஜம் வேலைகளை முடித்து விட்டிருந்தாள். மேல்தாழ்ப்பாளைத் திறக்கப் போன போது, பத்மநாபன் தடுத்தான்.

"ஏண்டா?"

"வேண்டாம்மா. நீ பாட்டுக்கு வெளியே அழைச்சுக்கிட்டுப் போய் விளையாட பழக்கிடுவே. அப்புறம் அவ தினம் வெளிய போகணும்னு சொல்லுவா. யார் கூட்டிக்கிட்டுப் போறது, சொல்லு? இன்னும் ரெண்டு நாள்ல நீயும் மதுரை போயிடுவே. அப்புறம் நாங்கதான் அவஸ்தைப்படணும். உள்ளேயே இருக்கட்டும். விடு. தானா அழுது அடங்குவா. விளையாடலைன்னா ஒண்ணும் குடிமுழுகிப் போயிடாது.

அடுத்த மூன்றாம் நாள் பங்கஜம் மதுரை கிளம்பினாள். மீண்டும் மேல் தாழ்ப்பாள் கெட்டியாகப் போடப்பட்டது. ●




பதினெட்டாம் அத்தியாயம்

நிமித்தக்காரன்

நம்பியாண்டார் நம்பியை வரவேற்பதற்காகக் கூட்டியிருந்த சபை கலையும் சமயத்தில் பெரிய மகாராணி தம் செல்வக் குமாரனிடம், ''மகனே! நான் இவர்களை அரண்மனை வாசல் வரையில் சென்று வழி அனுப்பி விட்டு வருகிறேன். அதற்குள் நீ உன் இருப்பிடம் சென்று சிரம பரிகாரம் செய்துகொண்டு திரும்பி வா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்!'' என்றார்.

''ஆகட்டும், தாயே!'' என்று சொல்லி விட்டு மதுராந்தகர் புறப்பட்டார். அரண்மனையில் அவர் தங்கியிருந்த பகுதிக்குப் போனார். அவருடைய உள்ளத்தில் ஆத்திரமும் அசூயையும் கொழுந்து விட்டு எரிந்தன. யாரோ வழியோடு போகிற ஆண்டிப் பண்டாரத்துக்கு எவ்வளவு தடபுடலான மரியாதைகள்! இராஜ குலத்தின் கௌரவத்துக்கே தம் தாயினால் பங்கம் நேர்ந்து விடும் போலல்லவா இருக்கிறது!

அமரர் கல்கி



கல்கி கலெக்ஷன்

பழுவேட்டரையர்கள் தம் அன்னையைப் பற்றி அடிக்கடி குறை சொல்லுவதில் வியப்பு ஒன்றுமில்லை. உடம்பில் சாம்பலைப் பூசிக்கொண்டு, ருத்திராட்ச மாலைகளை அணிந்துகொண்டு யார் வந்தாலும் பெரிய மகாராணிக்குப் போதும்! பதிகம் ஒன்றும் அவன் பாடிக்கொண்டு வந்து விட வேண்டும்; அல்லது கோயில், குளம், திருப்பணி என்று சொல்லிக்கொண்டு வந்து விட வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு அள்ளிக் கொடுத்து இராஜாங்க பொக்கிஷத்தையே இவர் சூனியமாக்கி விடுவார் போலிருக்கிறது! போதாததற்கு, இளவரசி குந்தவை ஒருத்தி எப்போதும் அருகில் இருக்கிறாள். கோயில் திருப்பணி செய்து மிச்சம் ஏதேனும் இருந்தால் அதை மருத்துவ சாலை ஏற்படுத்துவதற்காகச் செலவிட்டு விடுகிறாள். இப்படியெல்லாம் இவர்கள் செய்வதற்கு இடம் கொடுத்து வந்தால் நாளை நம்முடைய மனோரதம் எப்படி நிறைவேறும்? சோழ சிங்காதனத்தில் ஏறி நாலா திசைகளிலும் சைன்யங்களை அனுப்பி இந்த நில உலகம் முழுவதையும் வென்று ஒரு குடை நிழலில் ஆளுவது எவ்விதம் நடைபெறும்?

மறுபடியும் பெரிய மகாராணிக்கு மகனிடம் ஏதோ அந்தரங்கம் பேச வேண்டுமாம்! என்ன அந்தரங்கத்தைச் சொல்லப் போகிறாரோ, தெரியவில்லை! அஷ்டாங்க யோகம், இயம நியம நிதித்தியாசனம் ஆகியவற்றைக் குறித்து ஒருவேளை பேச ஆரம்பித்து விடுவார். கண்களின் பார்வையை மூக்கு நுனியில் செலுத்திக் குண்டலினியை மேல் நோக்கிக் கொண்டு வருவதினால் அறுபத்தி நாலு கலைகளையும் கல்லாமல் கற்கும் முறையைப் பற்றி ஒருவேளை உபதேசிக்க ஆரம்பித்து விடுவார்! அல்லது நடராஜருடைய ஆனந்தக் கூத்தின் உட்பொருளைக் குறித்தும், அவருடைய சடா மகுடம் எதைக் குறிக்கிறது, அவர் அணிந்திருக்கும் பிறை எதைக் குறிக்கிறது என்பவை குறித்தும் சொல்ல ஆரம்பித்து விடுவார். இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லித்தான் நம்மை உலகம் அரைப் பைத்தியம் என்று பரிகசிக்கும்படியான நிலைக்குக் கொண்டு வந்து விட்டார். அம்மாதிரி பேச்சுகளுக்கு இனிமேல் இடங்கொடுக்கக் கூடாது. அவர் பேசித்தான் தீருவேன் என்றாலும், நாம் காதிலே வாங்கிக் கொள்ளக் கூடாது...

இருக்கட்டும்; அன்னை மீண்டும் கூப்பிட்டு அனுப்புவதற்குள் அந்த நிமித்தக்காரனிடம் பேசியாக வேண்டும்; வருங்காலத்தைப் பற்றிக் கேட்டாக வேண்டும். யாருமே அறிந்திருக்க முடியாத இரண்டு மர்மமான செய்திகளை அவன் எப்படி அறிந்துகொண்டான்? அதை நினைத்துப் பார்த்தால் ஒரே வியப்பாக அல்லவா இருக்கிறது! அதிசயமான சக்தி அவனிடம் ஏதோ இருக்க வேண்டும். சென்று போன நிகழ்ச்சிகளை அறிந்து கூறியது போல் வருங்காலத்தில் நடக்கப் போவதைப் பற்றியும் அவனால் கூற முடியுமா? – அவனையே கேட்டுப் பார்த்து விடலாம்.

சபையிலிருந்து தாம் புறப்படும் சமயத்தில் நிமித்தக்காரன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு தயங்கித் தயங்கி நிற்பதை மதுராந்தகர் கவனித்தார். அவனைத் தம்முடன் வரும்படி சமிக்ஞையினால் கட்டளையிட்டார். வந்தியத்தேவனுடைய கண்கள் இளவரசியின் முகத்தைப் பார்க்கவும், நயன பாஷையினால் செய்தி உணர்த்தவும் ஆர்வம் கொண்டிருந்தன. ஆனால் இளவரசி மீண்டும் அவனைத் திரும்பிக் கூடப் பாராமல் பெரிய மகாராணியுடன் போய் விட்டாள்.

இது என்ன? தன்னை இளவரசி அடியோடு மறந்து விட்டாளா? அப்படித்தான் இருக்க வேண்டும். எத்தனையோ ஆயிரமாயிரம் பேரை அவர் தினம் தினம் பார்த்து வருகிறார், ஒரு தடவை - இரண்டு தடவை பார்த்த தன்னுடைய முகம் அவர் மனத்தில் எவ்விதம் நினைவிருக்கும்? நான் பைத்தியக்காரன்; இரவும் பகலும் எத்தனை எத்தனையோ விபரீத சம்பவங்கள்-அபாயங்களிடையிலும் இளவரசியின் திருமுகத்தையே நினைத்துக் கொண்டிருந்தேன். இளவரசி எதற்காக என்னை நினைத்திருக்க வேண்டும்? தேனீ தேனை விரும்பி மலரைச் சுற்றிச் சுற்றி வருகிறது. மலருக்குத் தேனீயைப் பற்றி என்ன கவலை? மலர் சூரியனைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருக்கிறது. குந்தவையின் முகமலரை விரியச் செய்யும் சூரியதேவன் யாரோ...?

ஆயினும் தன்னை எதற்காக அனுப்பினாரோ, அந்தச் செய்தியைத் தெரிந்து கொள்வதிலேகூட அவருக்கு ஆர்வம் இல்லாமலா போய் விடும்? தனக்கு முன்னாலேயே யாராவது வந்து சொல்லியிருப்பார்களோ? அது எப்படி முடியும்? இல்லை, இல்லை! அவர் ஏதோ கவலையில் ஆழ்ந்திருக்கிறார் என்பதை அவர் முகம் நன்றாகக் காட்டியது. தன்னை அடையாளம் கண்டு கொள்ளாததுதான் காரணமாயிருக்க வேண்டும். அந்தரங்க ஓலையை எடுத்துக்கொண்டு இலங்கை சென்ற தூதன், மதுராந்தகத் தேவரின் பரிவாரங்களில் ஒருவனாகச் சபைக்கு வந்தால் எப்படி அடையாளம் கண்டு பிடித்துத் தெரிந்து கொள்ள முடியும்? - ஆகா! இளவரசியைச் சந்தித்து, அந் நகரில் நுழைவதற்குத் தான் கையாண்ட யுக்திகளைப் பற்றிச் சொல்லும்போது அவர் எவ்வளவு ஆச்சரியம் அடைவார்? ஆனால் சந்திப்பது எப்படி? செய்தி சொல்லி அனுப்புவது எப்படி...?

''நிமித்தக்காரா! என்ன யோசனையில் ஆழ்ந்திருக்கிறாய்?'' என்ற மதுராந்தகரின் குரலைக் கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டான். அதற்குள்ளே அவர்கள் அரண்மனையில் மதுராந்தகத் தேவருடைய தனி அறைக்கு வந்திருந்தார்கள்.

அந்த நாளில் சோதிடர்கள், ஆருடக்காரர்கள், ரேகை பார்த்துக் குறி சொல்வோர், நிமித்தக்காரர் என்று, வருங்காலத்தைப் பற்றிச் சொல்வோர் பலர் இருந்தனர். சோதிடர்கள் ஜாதகம் பார்த்தும், கிரகங்கள் நட்சத்திரங்களின் சஞ்சாரத்தைக் கணித்தும், ஜோதிடம் சொல்வார்கள். ஆருடக்காரர்கள் தங்களிடம் வருவோர் பேசும் சொற்களைக் கொண்டும், ஆருடம் கேட்கும் வேளையைக் கொண்டும், நூற்றெட்டில் ஒரு இலக்கம் சொல்லும்படி கேட்டும் சுபா சுபங்களைப் பற்றிப் பொதுப் படையாகச் சொல்வார்கள். ரேகை சாஸ்திரமோ அன்றைக்கு இருந்தபடியே இன்றைக்கும் இருந்து வருகிறது.

நிமித்தக்காரர்கள் என்பவர்கள் ஞான திருஷ்டி படைத்த முனி புங்கவர்களைப் போல் அகக் கண்ணினால் பார்க்கும் ஆற்றல் உடையவர்கள். அவர்கள் மனத்தை ஒருமுகப்படுத்தி வைத்துக் கொண்டு, அகக் கண்ணின் உதவியினால் முக்கால நிகழ்ச்சிகளையும் நேரில் பார்ப்பது போல் பார்த்து உரைப்பார்கள். சிலர் புறக் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் அமர்ந்து சொல்வார்கள்; இன்னும் சிலர் தீபப் பிழம்பை உற்று நோக்கிய வண்ணம் மனத்தை ஒருமுகப் படுத்திக்கொண்டு நடந்து போன, நடக்கப் போகிற நிகழ்ச்சிகளை அந்தத்

தீபப் பிழம்பில் பார்த்துச் சொல்வார்கள். இன்னும் சிலருக்கு எதிர்ப்பட்டவர்களின் முகத்தைப் பார்க்கும்போதே அவர்களுடைய சென்ற கால வரலாறும், வருங்கால வரலாறும் மனத்தில் தோன்றி விடும். இத்தகைய அதிசய சக்திகள் படைத்தவர்களைத் தவிர, காக்கை இடம் போயிற்றா வலம் போயிற்றா என்பது முதலான வெளி நிகழ்ச்சிகளைக்கொண்டு சகுன பலன்களை உரைக்கும் சாதாரண நிமித்தக்காரர்களும் உண்டு.

வந்தியத்தேவன் தன்னை, "நிமித்தக்காரா!" என்று மதுராந்தகர் அழைத்ததும் திடுக்கிட்டான். இளவரசர் மேலும் தன்னை என்னென்ன கேள்விகள் கேட்பாரோ தெரியவில்லை. அவற்றுக்கெல்லாம் சாமர்த்தியமாகத் தக்க விடை கூறிச் சமாளித்துக் கொள்ள வேண்டும். கடவுளே! இங்கிருந்து, இவரிடமிருந்து தப்பித்துச் செல்வது எப்படி? இளவரசியைத் தனியாகச் சந்தித்துப் பேசுவது எப்படி....?

"வேறு யோசனை ஒன்றுமில்லை, ஐயா! நான் நிமித்தக்காரனாயிருப்பதைக் காட்டிலும் இப்போது சபையில் பார்த்த பிள்ளையைப் போல் நாலு பதிகங்களைக் கற்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். எனக்கும் எவ்வளவு உபசாரம் மரியாதையெல்லாம் நடக்கும் என்றுதான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்!" என்றான்.

"யார் வேண்டாம் என்றார்கள்! நீயும் தேவாரத் திருப்பதிகம் கற்றுக்கொண்டு பாடுவதுதானே?"

"இன்னாருக்கு இன்னபடி என்று எழுதியிருப்பது போலத்தானே நடக்கும், இளவரசே! வீண் ஆசைப்பட்டு என்ன பயன்?"

"பதிகம் பாடிய அந்தப் பிள்ளையைப் பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது? அவனுடைய யோகம்..."

"மிக உயர்ந்த யோகம். சிவ யோகமும் இராஜ யோகமும் கலந்தது. மன்னர்களும் மகாராணிகளும் அந்தப் பிள்ளைக்கு மரியாதை செய்வார்கள். மகான்களுடைய பெயருடனே அவருடைய பெயரும் சேர்ந்து இப் பூவுலகத்தில் நெடுங்காலம் விளங்கும்."-

வல்லவரையன் ஏதோ குருட்டாம் போக்காக இவ்விதம் கூறினான். ஆனால் மதுராந்தகருடைய மனத்தில் அவனுடைய வார்த்தைகள் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கி விட்டன.

"என்னுடைய யோகம் எப்படி என்று சொல், பார்க்கலாம்!"

"அவனுடைய யோகத்தைப் போலவே தங்கள் யோகமும்; சிவ யோகமும் இராஜ யோகமும் கலந்தது. ஆனால் இன்னும் மேன்மையானது."


"அப்பனே! கொஞ்சம் விவரமாகச் சொல், பார்க்கலாம்."

வல்லவரையன் என்ன சொல்வது என்று யோசிக்க அவகாசம் வேண்டினான். ஆகையால், "இப்படியெல்லாம் அவசரப்பட்டால் முடியுமா? விவரமாகச் சொல்ல வேண்டுமானால், தீபம் ஏற்றி வைத்து, அகிற் புகை போடச் சொல்ல வேணும். தாங்களும் தீபத்துக்குப் பின்னால் உட்கார்ந்து கொள்ள வேணும். அப்போது வருங்கால நிகழ்ச்சிகளை நடக்கப் போகிறபடியே பார்த்துச் சொல்லுவேன்."

மதுராந்தகர் பரபரப்பு அடைந்து தீபம் ஏற்றி வைக்கும்படியும் அகிற் புகை போடும்படியும் கட்டளையிட்டார்.

தீபத்துக்கு முன்னாலும் பின்னாலும் இரண்டு மணைகளும் போடப்பட்டன. மதுராந்தகர் ஒரு மணையில் உட்கார்ந்த பின்னர், அவருக்கெதிரே வந்தியத்தேவனும் உட்கார்ந்தான்.

கண்ணை மூடிக்கொண்டு சிறிது



நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய வாய் ஏதோ மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தது.

பிறகு அவன் உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டு ஆவேசம் வந்தவனைப் போல் நடித்தான். வெறியாட்டக்காரனைப் போல் அவன் உடல் நடுங்கிற்று.

பின்னர், கண்களை அகலத் திறந்தான். எதிரில் இருந்த தீபத்தின் பிழம்பை உற்றுப் பார்க்கலானான்.

சற்று நேரம் பார்த்துவிட்டு மதுராந்தகத் தேவரை நோக்கி, "ஐயா! தங்களைப் பற்றி அலட்சியமாக நான் ஏதாவது சொல்லியிருந்தால் மன்னிக்க வேண்டும். தங்களுடைய யோகம் சாதாரண யோகம் அல்ல. அங்கே சபையில் உட்கார்ந்து பாட்டுப் படித்த பிள்ளையின் யோகத்துக்கும் தங்கள் யோகத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அந்தப் பிள்ளையின் யோகம் அரசர்களின் ஆதரவினால் ஏற்படும் ராஜயோகம்; தங்களுடைய யோகத்தைப் பற்றி இந்தத் தீபத்திலே நான் காண்பது – ஆகா! என்னையே பிரமிக்கச் செய்கிறது!" என்றான்.

"அப்படி என்ன காண்கிறாய்? சொல்! சொல்!" என்றார் மதுராந்தகர்.

"ஆகா! எப்படிச் சொல்லுவேன்? சொல்வதற்கு வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை! அதோ கண்ணுக்கெட்டிய தூரம் மணிமுடி தரித்த மன்னர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். மந்திரிகளும் சாமந்தர்களும் அதிகாரிகளும் வரிசை வரிசையாக நிற்கிறார்கள். அவர்களுக்கு அப்பால், முடிவில்லாத கடலைப் போல், சேனா வீரர்கள் அலைமோதிக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் கையில் பிடித்த வேல்களும், வாள்களும் மார்பில் தரித்த கவசங்களும் ஒளி வீசிக் கண்ணைப் பறிக்கின்றன. தூரத்திலுள்ள மாடமாளிகைகளின் மேல் ஜனங்கள் நின்று ஆர்ப்பரிக்கிறார்கள். கோட்டை கொத்தளங்கள் மீதெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாய் நிற்கின்றனர். அவர்கள்... அவர்கள்... ஏதேதோ கோஷம் செய்கிறார்கள்...!"

"சொல், சொல்! மக்கள் என்ன கோஷமிடுகிறார்கள்?"

"இளவரசே! பல்லாயிரம் மக்களின் கோஷமாகையால் நன்றாகக் கேட்கவில்லை. 'சோழ குலத் தோன்றல் வாழ்க! திரிபுவன சக்கரவர்த்தி வாழ்க! மன்னாதி மன்னர் வாழ்க! திரிபுவன சக்கரவர்த்தி வாழ்க! மன்னாதி மன்னர் வாழ்க!' என்றெல்லாம் கோஷிப்பது போலத் தோன்றுகிறது."

"அப்புறம் என்ன?"

"மக்கள் திரண்டு கூட்டம் கூட்டமாக முன்னேறி வருகிறார்கள். வேலும் வாளும் பிடித்த வீரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள். சிறிது நேரம் அங்கே ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது."

"சரி, சரி! கூட்டம் எதற்காகக் கூடியிருக்கிறது? அதைச் சொல்!"

"அதைத்தான் நானும் இப்போது பார்க்கப் போகிறேன். கூட்டத்தின் மத்தியில் புலிக்கொடி வானளாவிப் பறக்கிறது. அதற்குக் கீழே மீனக்கொடி, விற்கொடி, பனைக்கொடி, சிங்கக் கொடி, ரிஷபக் கொடி, பன்றிக் கொடி ஆகியவை தாழ்வாகப் பறக்கின்றன. மயன் மாளிகையைப் போன்ற சபா மண்டபத்தின் நடுவிலே நவரத்தின கசிதமான தங்கச் சிங்காதனம் போட்டிருக்கிறது. அருகில் ஒரு பீடத்தில் கோடி சூரியப் பிரகாசமான வைர வைடூரியங்கள் பதித்த மணி மகுடம் ஒன்று வைத்திருக்கிறது. சிங்காதனத்துக்கு மேலே தண் மதியின் வெண்ணிலவையொத்த குளிர்ச்சி பொருந்திய பொன் கொற்றக்குடை விரிந்து கவிந்திருக்கிறது. தேவ கன்னிகையரைப் போன்ற பெண்கள் கைகளில் வெண் சாமரங்களை வைத்துக்கொண்டு

காத்திருக்கிறார்கள். பற்பல புண்ணிய தீர்த்தங்களிலிருந்து கொண்டு வந்த தண்ணீருடன் பொற் குடங்கள் வரிசையாக வைத்திருக்கின்றன. இளவரசே! பட்டாபிஷேகத்துக்கு எல்லாம் ஆயத்தமாகி விட்டன...!

"யாருக்குப் பட்டாபிஷேகம்? அதைச் சொல். அப்பனே!" என்றார் மதுராந்தகர்.

"இதோ அதுவும் தெரிந்து விடும். சபா மண்டபத்தின் பிரதான வாசற் கதவு திறந்திருக்கிறது. பலவகைக் கட்டியம் கூறிக் கொண்டு சிலர் உள்ளே வருகிறார்கள். வீர கம்பீரத் தோற்றமுடைய கிழவர் ஒருவர் வருகிறார். அவருடைய சகோதரர் போலக் காணப்படும் இன்னொருவர் வருகிறார். அவர்களுக்குப் பின்னால் மன்மதனையொத்த சுந்தர ரூபமுடைய இராஜகுமாரர் ஒருவர் இதோ வருகிறார்..."

"அது யார்? யார்?"

வந்தியத்தேவன் மதுராந்தகரை மறுமுறை உற்றுப் பார்த்து விட்டு மீண்டும் தீபத்தை நோக்கினான்.

"ஐயா! தங்களைப் போலவே அவர் இருக்கிறார்! தங்களைப் போல என்ன? தாங்களேதான்! முன்னால் வந்த இருவரும் தங்களைச் சிம்மாசனத்தை நோக்கி அழைத்துச் செல்கிறார்கள். 'ஜய விஜயீபவா!' என்ற கோஷம் சமுத்திர கோஷத்தைப் போல் எழுகிறது. தங்கள் மீது நூறு நூறு கரங்கள் புஷ்பங்களையும் மணிகளையும் மஞ்சள் நிறத் தானியங்களையும் தூவுகின்றன. இதோ தாங்கள் சிங்காதனத்தை நெருங்கி விட்டீர்கள்! அடடா! இது என்ன? சகுனத் தடை போல் யார் குறுக்கே வருகிறது? தலைவிரி கோலமாக ஒரு ஸ்திரீ குறுக்கே வந்து தங்களுக்கும் சிம்மாதனத்துக்கும் நடுவில் நிற்கிறாள் 'வேண்டாம்' என்று தங்களைத் தடை செய்கிறாள். தாங்கள் அந்த ஸ்திரீயைத் தள்ளுகிறீர்கள்...! அடாடா! இது என்ன, நல்ல சமயத்தில் இப்படிப் புகை வந்து மூடிக் கொள்கிறது? ஒன்றும் தெரியவில்லையே...?"

"பார்! பார்! நன்றாக உற்றுப் பார்! அப்புறம் என்ன நடக்கிறது?"

"இளவரசே! மன்னிக்க வேண்டும்! பெரும் புகைப்படலம் வந்து எல்லாவற்றையும் மறைத்து விட்டது...!"

"பார், அப்பனே! பார்! அந்த ஸ்திரீ யார் என்றாவது பார்! அவளை நீ முன்னம் பார்த்திருக்கிறாயா?"

"இளவரசே! அந்த மாதரசியும் மறைந்து விட்டாள். தாங்களும் மறைந்து விட்டீர்கள். சபை, சிம்மாசனம், கிரீடம், – எல்லாம் மறைந்து விட்டன. இந்த அரண்மனையில் மந்திர சக்தி உள்ளவர்கள் யாரோ இருக்க வேண்டும்! வேண்டுமென்றே மந்திரம் போட்டுத் தடுத்து விட்டதாகக் காண்கிறது. ஐயோ! என் முகமெல்லாம் பற்றி எரிவது போல் தகிக்கிறது...!"

இவ்விதம் கூறி வந்தியத்தேவன் தன் கரங்களினால் முகத்தை மூடிக்கொண்டான். அப்படியே சிறிது நேரம் இருந்து விட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான்.

மதுராந்தகத் தேவருடைய உடம்பின் நரம்புகள் எல்லாம் புடைத்துக்கொண்டிருந்தன. அவருடைய முகத்தில் கோபம் கொதித்துக்கொண்டிருந்தது. கண்கள் எரியும் தணல்களைப் போல் பிரகாசித்தன. வந்தியத்தேவனுக்குச் சிறிது பயமாகவே போய் விட்டது. இளவரசருடைய ஆசை வெறியை அளவுக்கு அதிகமாகக் கிளப்பி விட்டோமோ என்று பயந்து போனான்.

"மறுபடியும் பார்! நன்றாகப் பார்த்துச் சொல்!" என்றார் மதுராந்தகர்.

"இளவரசே! அதில் பயனில்லை! ஒருதடவை மறைந்த காட்சி மறுபடியும் உடனே வராது. சில நாள் கழிந்த பிறகுதான் வரும். தீபத்தைப் பார்த்து

வேண்டுமானால் வேறு ஏதாவது காட்சி தெரிந்தால் சொல்லுகிறேன்..."

"சொல், சொல்! என்ன காட்சி புலப்பட்டாலும் சொல்!"

"ஜனங்கள் ஒரே குழப்பமாயிருக்கிறார்கள். துக்கமாயும் கோபமாயும் இருக்கிறார்கள். தூதன் ஒருவன் வந்து அவர்களிடம் ஏதோ செய்தி சொல்லுகிறான். இராஜ குடும்பத்தைச் சேர்ந்த யாரோ ஒருவர் கடலில் முழுகிவிட்டதாகச் சொல்கிறான். ஐயோ! பாவம்! அந்தத் தூதனை ஜனங்கள் அடிக்கப் போகிறார்கள். இளவரசே! அம்மாதிரி ஏதாவது நேர்ந்தால் தாங்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஜனங்கள் மத்தியில் செல்ல வேண்டாம்! சென்றாலும் ஜாக்கிரதையாகச் செல்லுங்கள்!"

"கடலில் முழுகியது யார் என்று பெயர் சொல்லவில்லையா...?"

"கூச்சலிலும் குழப்பத்திலும் பெயர்



காதில் விழவில்லை. அந்தக் காட்சி மறைந்துவிட்டது... இப்போது கழுத்தில் மண்டை ஓடு மாலைகளை அணிந்த ஒரு பயங்கரமான கூட்டம் என் கண் முன் தெரிகிறது. காபாலிகர்கள் – காலா முகர்கள் போல் தோன்றுகிறார்கள். அவர்களில் ஒருவன் கையில் ஒரு பயங் கரமான அரிவாளை வைத்துக்கொண் டிருக்கிறான். அவனுக்கு எதிரில் பலபீடம் ஒன்று இருக்கிறது. இளவரசே! இங்கேயும் இராஜகுமாரர் ஒருவர் வருகிறார். காலாமுகர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு கொம்மாளம் அடிக் கிறார்கள். ஐயா! தப்பித் தவறிக் கூடத் தாங்கள் அப்படிப்பட்ட கூட்டத்தின் மத்தியில் போக வேண்டாம்...!''

இதைக் கேட்டதும் மதுராந்தகரு டைய முகத்தில் வியர்வை துளித்தது.



அவர் உடம்பு நடுங்கியது.

வந்தியத்தேவன் அதைக் கவனித்துக் கொண்டான். பின்னர், "இளவரசே! மேலும் ஒன்றும் எனக்குத் தெரிவில்லை. மன்னிக்க வேண்டும். என் தலை சுற்றுகிறது. கண் இருளுகிறது. யாரோ மந்திரம் போட்டுத் தடை செய்கிறார்கள். இன்னொரு சமயம் இன்னொரு இடத்தில் பார்த்துச் சொல்கிறேன்!" என்று கூறித் தன் தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டான்.

அச்சமயத்தில் அரண்மனைச் சேவகன் ஒருவன் வந்து பெரிய மகாராணி செம்பியன்மாதேவி இளவரசரை அழைத்து வரச் சொன்னதாகக் கூறினான்.

மதுராந்தகர் தன் உள்ளத்தில் பொங்கிய ஆத்திரத்தையெல்லாம் அன்னையின் மீது கொட்டி விடுவது என்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டார்.

"ஐயா! தலைவலி பொறுக்க முடியவில்லை. அரண்மனைக்கு வெளியே சென்று இந்த நகரைக் கொஞ்சம் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று வந்தியத்தேவன் அவரிடம் கூறி அனுமதி பெற்றுக் கொண்டான்.

பழையாறை மருத்துவர் மகன் பினாகபாணி பண்டிதனுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய ரஸம் ஏற்பட்டிருந்தது. சில நாளைக்கு முன்பு வரையில் அவன் தந்தையிடம் மருந்து சாஸ்திரம் கற்றுக் கொள்ளுவதுடன் திருப்தியடைந்தான். கோடிக்கரைப் பிரயாணத்தின்போது வந்தியத்தேவன் வெளி உலகத்தைப் பற்றிப் பல விஷயங்களை அவனுக்குக் கூறினான். அத்துடன் மட்டும் அவன் நிறுத்தவில்லை. புதிதாகக் காதல் வலையில் விழுந்தவர்களுக்கு அதைப் பற்றி யாரிடமாவது பேசத் தோன்றுவது இயல்பு. வைத்தியர் மகன் முதல் தர அசடு என்று தெரிந்து கொண்ட வந்தியத்தேவன் அவனிடம் பெண்களிடம் காதல் கொள்ளுவதைப் பற்றிய அபாயங்களைப் பற்றிப் பேசலானான். தான் ஒரு பெண்ணிடம் காதல் கொண்டு அதன் பயனாக அனுபவித்து வரும் இன்ப துன்பங்களைப் பற்றியும் கூறினான்.

வைத்தியர் மகன் பினாகபாணி இந்தப் பேச்சுக்களை முதலில் அவ்வளவாக ரசிக்கவில்லை. சிறிது சிறிதாக அவன் மனம் மாறியது. வந்தியத்தேவனிடம் விவரமில்லாத அசூசையும் ஆத்திரமும் ஏற்பட்டன. அவனுடைய மனத்தைக் கவர்ந்த மங்கையின் ஊர், பெயர் என்ன என்று கேட்டான். வந்தியத்தேவன் சொல்ல மறுத்து விட்டான். அதனால் பினாகபாணியின் கோபம் அதிகமாயிற்று. கோடிக்கரை போய்ச் சேருவதற்குள் வந்தியத்தேவனை வைத்தியரின் மகன் தன்னுடைய சத்துருவாகவே கருதத் தொடங்கி விட்டான்.

அவன் மனத்திற்குள் புகைந்து கொண்டிருந்த பூங்குழலியைப் பார்த்ததும் கொழுந்து விடத் தொடங்கியது. பூங்குழலி அவனை மறுதளித்ததுடன் பரிகாசமும் செய்தாள். அவள் தன்னைக் காட்டிலும் வந்தியத்தேவனை அதிகம் மதிக்கிறாள் என்று தெரிய வந்ததும் பினாகபாணியின் பைத்தியம் ஏற்றி விட்டது. வந்தியத்தேவனைத் தொடர்ந்து வந்த வீரர்களிடம் அவனைக் காட்டிக் கொடுக்கவும் துணிந்தான்.

பழுவேட்டரையரின் ஆட்கள் வந்தியத்தேவனைப் பிடிக்க முடியாமல் பினாகபாணியைப் பிடித்துக்கொண்டு தஞ்சை சென்றார்கள். சிறிது நேரம் அவன் பாதாளச் சிறையில் வசிக்கும்படி நேர்ந்தது. இதனாலெல்லாம் அவனுக்கு முன்னமே வந்தியத்தேவனிடம் உண்டாகியிருந்த கோபம்

மேலும் வளர்ந்தது.

இளவரசி குந்தவை அவனைப் பார்த்துப் பேசி விடுதலை செய்வதற்காகப் பாதாள சிறைக்குப் போவதற்கு முன்னாலேயே அவன் விடுதலையாகியிருந்ததைக் கண்டோம். விடுதலை செய்தவன் பழுவூர் இளைய ராணி நந்தினிதான். தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்தியத்தேவன் தஞ்சை அரண்மனையிலிருந்து தப்பித்துச் சென்றது பற்றி நந்தினி கோபமும் சந்தேகமும் கொண்டிருந்தாள். அவன் பழையாறை சென்று, பிறகு ஈழ நாட்டுக்குத் தப்பிச் சென்றதை அறிந்த பிறகு அவளுடைய சந்தேகம் அதிகமாயிற்று. எப்படியும் ஒருநாள் பழையாறைக்குத் திரும்பி வந்து இளவரசி குந்தவையைப் பார்க்க முயல்வான் என்று ஊகித்தாள். அப்போது அவனைக் கண்டுபிடித்துச் செய்தி அனுப்பப் பழையாறையில் தனக்கு நம்பகமான ஆள் ஒருவன் வேண்டும் என்று தீவிரமாக எண்ணினாள்.

வைத்தியர் மகன் பினாகபாணியைப் பார்த்துப் பேசிய பிறகு அவன் அந்த வேலைக்குச் சரியான ஆள் என்று முடிவு செய்தாள். அவனிடம் அந்தப் பெரிய பொறுப்பை ஒப்புவித்தாள்.

"உனக்குத் துரோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றவன் சீக்கிரத்தில் ஒருநாள் பழையாறைக்குத் திரும்பி வருவான். நீ கண்ணும் கருத்துமாகப் பார்த்திருந்து அவன் எங்கெங்கே போகிறான், என்னென்ன செய்கிறான் என்பதைக் கவனித்து எனக்கு உடனே சொல்லி அனுப்ப வேண்டும். அவ்விதம் செய்தால் உனக்கு வேண்டிய வெகுமதிகளை அளிப்பேன்'' என்றாள்.

பின்னர் சின்னப் பழுவேட்டரையரும் அவனை அழைத்து வந்தியத் தேவனைப் பற்றிக் கட்டளை இட்டார். ''அந்த இராஜத் துரோகி திரும்பி வரும்போது அவனைத் பிடித்துக் கொடுத்தால் உன்னை நமது ஒற்றர் படையில் சேர்த்துப் பெரிய அதிகாரியாக்கி விடுவேன்'' என்று அவனுக்கு ஆசை காட்டியிருந்தார்.

அது முதல் பினாகபாணி மருத்துவத் தொழிலில் பற்றை இழந்து விட்டான். ஏதேதோ ஆகாசக்கோட்டைகள் கட்டிக்கொண்டே பழையாறை நகரின் வீதிகளில் ஓயாமல் அலைந்து கொண்டிருந்தான். திடீர் திடீரென்று அவனுக்குச் சந்தேகம் உதித்து விடும். வீதியில் போகிறவர்களின் அருகில் ஓடிச் சென்று முகத்தை உற்றுப் பார்ப்பான். "இவன் இல்லை!'' என்று முணுமுணுத்துக் கொண்டே அப்பால் செல்வான். இதைப் பார்த்த பலரும் வைத்தியர் மகனுக்குச் சித்தப் பிரமை பிடித்து விட்டதென்று எண்ணத் தொடங்கினார்கள்.

ஆயினும் பினாகபாணி தன்னுடைய முயற்சியைக் கைவிடவில்லை.

மதுராந்தகத் தேவரும், அவருடைய பரிவாரங்களும் பழையாறைக்குள் பிரவேசித்தபோது பினாகபாணி அவர்களை அவ்வளவு நன்றாகக் கவனிக்கவில்லை. அவர்களில் வந்தியத்தேவன் இருக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. திருநாரையூர் நம்பியின் பல்லக்கைச் சூழ்ந்திருந்த பெருங் கூட்டத்திலே அவன் சுற்றிச் சுற்றி வந்து பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது சற்றுத் தூரத்தில் மதுராந்தகருடைய பரிவாரம் போவது தெரிந்தது. மதுராந்தகருக்கு அருகில் குதிரை மேலிருந்தவன் ஒருதடவை திரும்பிப் பார்த்தபோது பினாகபாணிக்கு ஐயம் உதித்தது. ஆனால் அவன் விரைவாகச் சென்று அரண்மனையில் புகுந்து விட்டபடியால் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை.

(தொடரும்)

யுத்தம் "வரட்டுமா, வேண்டாமா?" என்று பாய்ச்சுக் காட்டிக் கொண்டிருந்த சமயத்தில் நான் சென்னைப் பட்டணத்தில் இல்லை. அதற்கு ஒரு வாரத்துக்கு முந்தியே கிளம்பிப் போய்விட்டேன். எந்தச் சமயத்திலும் ஐரோப்பாவிலிருந்து, "உடனே புறப்படவும்" என்று தந்தி வரலாமென்று எனக்குப் பயமாயிருந்தது. ஆனால், அந்த பயங்கரமான பொறுப்பில் பங்குபெறுவதற்கு எனக்குச் சம்மதமில்லை. சேம்பர்லினும், டலாடியரும், இர்வினும், ஹிட்லரும், ரிப்பன்டிராப்பும், கர்னல்பெக்குமாகச் சேர்ந்துதானே இந்த விபரீத நிலைமையை ஏற்படுத்தினார்கள்? ஆகவே, அவர்களே யுத்தம் ஆரம்பிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளட்டும். எனக்கு என்னத்திற்கு அந்தப் பாவம்? என் கையில் என்னத்திற்காக இரத்தக்கறை படவேண்டும்?

இம்மாதிரி எண்ணி, சென்னையிலிருந்து கிளம்பிக் குற்றாலத்துக்குப் போய்விட்டேன். தமிழ்நாட்டுக்குள்ளே குற்றாலந்தான் ஒதுங்கி வசிப்பதற்கு ஏற்ற இடம். சென்னையில் ஞாயிற்றுக்கிழமை தபால் போட்டால், குற்றாலத்துக்குச் செவ்வாய்க்கிழமைதான் போய்ச் சேரும். குற்றாலத்துக்கு அப்பாலுள்ள திருநெல்வேலிக்கு மறுநாள் போய் விடும்; ஆனால் குற்றாலத்துக்கு அதற்கு மறுநாள்தான் போகும்.

உலகக் கொந்தளிப்புக்களிலிருந்தும் காங்கிரஸ் நெருக்கடிகளிலிருந்தும் விலகி அஞ்ஞாதவாசம் செய்ய விரும்புகிறவர்களுக்காகவே தபால் இலாகாக்காரர்கள் இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

குற்றாலத்திலிருந்து திரும்பிச் சென்னைக்கு வந்ததும் மேற்படி காரணத்தை ஒரு சிநேகிதரிடம் சொன்னேன். அவர் நம்பவில்லை. "எனக்கா கடுக்காய் கொடுக்கப் பார்க்கிறீர்? சேம்பர்லினும் ஹிட்லருமாவது, உம்மை அழைப்பதாவது? அதெல்லாம் இல்லை. யுத்தம் ஆரம்பித்து விட்டால் சென்னையில் வெடிகுண்டு விழுமே என்று பயந்து கொண்டுதான் போய் விட்டீர்!" என்றார். "ஆனால் இப்போது திரும்பி வந்து விட்டேனே?" என்றதற்கு, "கடற்கரை விளக்குகளை அணைத்தாகி விட்டது, இனிமேல் பயமில்லை என்று தெரிந்து கொண்டு வந்திருக்கிறீர்!" என்றார்.

சில பேர் இப்படித்தான் நிஜம் சொன்னாலும் நம்ப மாட்டார்கள், பொய் சொன்னாலும் நம்ப மாட்டார்கள். பத்திரிகைகளில் அச்சடித்த பொய்களைக் கூட அவர்கள் நம்புகிறதில்லை. இந்த சம்சயாத்மாக்கள், "ஏற்கெனவேயே பத்திரிகைகளில் முக்கால்வாசிப் பொய்தான் வரும்; யுத்தம் வேறு வந்து விட்டதோ இல்லையோ? இனிமேல் எல்லாம் பொய்தான்!" என்று சொல்லிக்கொண்டே,


யாத்திரை

அரையணாப் பத்திரிகைக்கு ஓரணா கொடுத்து வாங்கி வாசிப்பார்கள்.

ஆகவே, இப்படிப்பட்டவர்களை உத்தேசித்து, நிஜத்தைச் சொல்லி விடுவதுதான் நல்லதென்று நினைக்கிறேன். யுத்தத்துக்கு பயந்து கொண்டுதான் குற்றாலத்துக்குப் போனேன். ஆனால், குற்றாலத்துக்குப் போவானேன் என்று கேட்டால், நல்லது, நமது பெரியவர்கள் இதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள்?

"காலன் வருமுன்னே
கண்பஞ் சடைமுன்னே
பாலும் கடைவாய்
படுமுன்னே – மேல்விழுந்து
உற்றார் அழுமுன்னே
ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே
கூறு!"

கல்கி கலெக்ஷன்



கதம்பம்!

என்று பட்டினத்தார் எவ்வளவு வெட்டவெளிச்சமாய்ச் சொல்லியிருக்கிறார்? ஜெர்மனிக்காரனோ, ருஷியாக்காரனோ இங்கே வந்து நம்மைக் குண்டு போட்டுச் சுடுவதற்கு முன்னே, குற்றாலநாதரைத் தரிசித்து விடவேண்டும், அப்புறம் என்று தள்ளி வைப்பதில் பிரயோஜனமில்லையென்று தீர்க்கதரிசியான பட்டினத்தடிகள் சொல்லி விட்டாரல்லவா? மேலும், அப்பர் ஸ்வாமிகள் என்ன சொல்கிறார்?

“உற்றார் ஆருளரோ – உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத் துறை
கூத்தனல்லால் நமக்(கு)
உற்றார் ஆருளரோ?”

இப்படி ‘யாருளரோ? யாருளரோ?’ என்று அப்பர் ஸ்வாமிகளே கதறியிருக்கும் போது, நாம் வேறு யாரைத் தேடிப் போவது? குற்றாலநாதனைத் தேடித்தான் போக வேண்டும்.

ஆனால், இந்த வருஷத்தில் அப்படிக் குற்றாலநாதரைத் தேடிப் போவதில் பயன் உண்டா? குற்றாலநாதர் குற்றாலத்துக் கோவிலில் இருக்கிறாரா? அல்லது மூட்டை முடிச்சுகளுடன் கிளம்பிப் போய் விட்டாரா? – இந்தச் சந்தேகம் என்னுடைய மனதைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது. (அந்த தரித்திரம் பிடித்த பஞ்சத்திலடிபட்ட சந்தேகத்துக்குப் பசி ரொம்ப!) ஏனென்று கேட்டால், சமீபத்தில் அந்தக் கோவிலுக்குள் ஹரிஜனங்களை விட்டு விட்டார்கள் அல்லவா? ஹரிஜனங்கள் புகுந்த பின் கோவிலில் ஸ்வாமி இருப்பது சாத்தியமான காரியமா?

இந்தப் பயங்கரமான சந்தேகத்துடன் தான் குற்றாலத்துக் கோவிலுக்குச் சென்றேன். கோவில் வாசலில் “ஹரிஜனங்கள் உள்பட ஸகல ஹிந்துக்களும் இந்த ஆலயத்திற்குள் வந்து கடவுளைத் தரிசிக்கலாம்” என்று விளம்பரம் போட்டிருந்தது. இதிலிருந்து கடவுள் கோவிலுக்குள்தான் இருக்கிறார் என்று தைரியம் ஏற்பட்டது. இல்லாமல் போனால் விளம்பரம் போட மாட்டார்கள் அல்லவா?

கோவிலுக்குள் ஸ்வாமி அம்பாள் சந்நிதிகளுக்குச் சென்று தரிசித்தேன். எல்லாம் பழையபடியேதான் இருந்தன. அலங்காரங்கள் வெகு சோபிதமாயிருந்தன. அர்ச்சகர்கள் முன்னைக் காட்டிலும் அதிக பயபக்தியுடனே ஆராதனைகள் செய்தார்கள். மலர் மாலைகள் முன் போலவே நறுமணம் வீசின. விபூதி குங்குமப் பிரஸாதங்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

ஆனாலும், என் மனதிற்குள்ளேயே மட்டும் அலை அடித்துக் கொண்டுதான் இருந்தது. “வெளிப்படையாக எல்லாம் முன்போல்தானிருக்கிறது. ஆனாலும் தெய்வீக சக்தி முன் போல் இருக்கிறதோ, என்னமோ? அதற்கு என்ன ருசு?” என்று

அமரர் கல்கி

என் மனதிற்குள் ஒரு கேள்வி எழுந்து கொண்டேயிருந்தது. அதை எவ்வளவு நான் அமுக்கிப் பார்த்தும் பயனில்லை.

அந்தச் சமயத்தில் பாருங்கள்! ஓர் அற்புதம்! மேளவாத்திய, தாளவாத்தியங்களுடன் ஒரு காவடி கோஷ்டி கோவிலுக்குள் வந்தது. பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டு சந்நிதியில் வந்து நின்றது. காவடி எடுத்தவருக்கு ஆவேசம் வருவிப்பதற்காக மேளக்காரர்கள் முயற்சி தொடங்கினார்கள்.

ஆகா! அந்தத் தவுல்கள்தான் என்ன பாடுபட்டன! தவுல்காரர்கள்தான் எப்படி எகிறி எகிறிக் குதித்தார்கள்? நாதஸ்வரம் வாசித்தவர் மட்டும் சப்பையா? மூச்சு விடாமல் அவர் வாசித்த வாசிப்பை என்னவென்று சொல்ல?

ஆனால் அந்தச் சமயத்தில், காவடி பக்தருக்கு ஆவேசம் வரவேண்டுமென்பதில் அவர்கள் எல்லாரைக் காட்டிலும் எனக்குத்தான் ஆவலும் பரபரப்பும் அதிகமாயிருந்தன. அந்த பக்தர் மீது ஆவேசம் வந்தால், கோவிலில் ஸ்வாமி இருக்கிறார் என்று நிச்சயம்; ஆவேசம் வராவிட்டால், ஹரிஜனங்களுக்கு பயந்து கொண்டு ஸ்வாமி போய்விட்டார் என்றுதான் நினைக்க வேண்டும். இப்படி நான் தீர்மானித்திருந்தபடியால், எனக்கு அவ்வளவு ஆவல் இருந்தது. நேரமாக ஆக, பரபரப்பும் பதை பதைப்பும் அதிகமாயின. நம்மிடம் ஒரு மேளம் இல்லையே. இருந்தால் நாமும் ஒரு கை பார்க்கலாமே என்று கூட எண்ணினேன்.

கடைசியாக, என்னுடைய நம்பிக்கை சிதறிப் போகும் தருவாயில் காவடிக்காரர்கள் மேல் ஆவேசம் வந்தது. பரவசமாய் ஆடத் தொடங்கினர்.

ஆகவே, ஸ்ரீ குற்றாலநாதர் தமது திருக்கோவிலில்தான் இருக்கிறார் என்று நிச்சயம் ஏற்பட்டது.

இந்த விஷயத்தை மேற்படி கோவில் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் செட்டியார் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்வாமி இருக்கிறாரோ இல்லையோ என்ற கவலையில்லாமல், சீக்கிரத்தில் பாக்கித் திருப்பணியையும் செய்து முடிக்கலாமென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். அப்படி, சீக்கிரம் திருப்பணி முடிந்தால், அனேக காரியங்களுக்கு சௌகரியமாயிருக்கும். முக்கியமாக, கோவில் பிராகாரத்தில் கிடக்கும் பெரிய கருங்கற்களையெல்லாம் எடுத்து அப்புறப்படுத்தினால், போக்குவரவுக்குத் தாராளமாய்ப் பாதை ஏற்படுமல்லவா?

குற்றாலத்தில், குற்றாலநாதரின் கோவிலைத் தவிர இன்னும் பல விசேஷங்களும் உண்டு. முக்கிய விசேஷம், அருவிதான். மலையில் மழை பெய்து, அந்த ஜலம் ஓடி வந்து மேலிருந்து கீழே கொட கொடவென்று கொட்டினால் அதற்கு அருவி என்று பெயர். பூகோள சாஸ்திரத்தில் இதை 'நீர் வீழ்ச்சி' என்று சொல்வார்கள்.



• குற்றாலநாதர் கோயில்

தஞ்சாவூர் - சென்னை முதலிய இடங்களில் உள்ளவர்களும் அப்படித்தான் கூறுவார்கள். ஆனால் 'நீர்வீழ்ச்சி' என்றால் திருநெல்வேலிக்காரர்கள் சிரிப்பார்கள்.

"அருவியையா நீர்வீழ்ச்சி என்கிறீர்கள்?" என்பார்கள். டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்ட பூகோள பாடப் புத்தகத்தைப் படித்திருந்தால் தானே அவர்களுக்குத் தெரியப் போகிறது?

இந்தியாவில் இன்னும் எத்தனையோ இடங்களில் அருவிகள் விழுகின்றன. அவற்றுடன் ஒப்பிடும்போது குற்றாலம் அருவி ரொம்பச் சின்னது. ஆனால் சின்னதாயிருப்பதுதான் அதனுடைய உயர்வு. மற்ற இடங்களில் உள்ள அருவி

களில் குளிக்க முடியாது, அருகில் போகவே முடியாது. குற்றாலம் அருவியில் நின்று குளிக்கலாம். இப்படிக் குளிக்கும் வசதியுள்ள அருவி இந்தியாவில் வேறெங்குமே கிடையாது என்று சொல்கிறார்கள்.

அருவியில் குளிப்பது ஒரு பெரிய சுகந்தான்; சந்தேகமில்லை. அருவியின் கிட்டப் போகும் வரையில் குளிரும். "போயும் போயும் இதிலே என்னத்துக்காகக் குளிக்க வேண்டும்? இந்த ஜலத்தில் ஒரு குடம் பிடித்துக் கொண்டு போய் வீட்டில் வெந்நீர் போட்டுக் குளிக்கலாம்" என்று தோன்றும். ஆனால் அருவியில் தலையை நீட்டிவிட வேண்டியதுதான்; குளிர் பறந்து போகும். அரை நிமிஷத்துக்கெல்லாம் உடம்பு சுதசுதவென்று ஆகிவிடும்.

அருவியில் ஜலம் சுமாராயிருக்கும் போது குளித்தால் உடம்பில் அம்மி பொளிவது போலிருக்கும்; அப்படிப் பொளிவது சுகமாகவும் இருக்கும். அருவி நிறைய விழுகிற போது குளித்துப் பழகியவர்கள் மல்யுத்தத்தில் நன்றாய்ப் பெயர் வாங்குவார்கள். முதுகிலும் தோளிலும் எத்தனை குத்து விழுந்தாலும் தாங்கக்கூடிய சக்தி பெறுவார்கள்.

சில சமயம் மலையில் பெருமழை பெய்யும் காலங்களில், அருவியில் ஏராளமாக ஜலம் கொட்டும். அப்போதெல்லாம் அருகிலேயே போக முடியாது. அந்தப் பயங்கரமான சௌந்தரியத்தைக் கொஞ்சம் தூரத்திலிருந்தே பார்த்து அனுபவிக்க வேண்டியதுதான்.

குற்றாலத்தின் இயற்கைக் காட்சிகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. மலை அடிவாரங்களில் தேக்கு மரங்கள் பூத்துக் குலுங்குவதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். மலை உச்சிகளில் நீர் மேகங்கள் வந்து தங்கியிருப்பதைக் "கண்ட கண்கள் வேறொன்றினைக் காணாவே!" என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையில், இந்த அற்புதக் காட்சியின் அழகைப் பார்த்தவர்கள்தான் திருமாலைக் "கொண்டல் வண்ணன்" என்றும், "நீல நிறத்து நெடுந்தகை" என்றும் பாடியிருக்க வேண்டும். நிலவு வெளிச்சத்தில் தூரத்தில் நின்று அருவியைப் பார்த்தால், அது நீரருவியாகத் தோன்றாது; பாலருவியாக தோன்றும். அருகில் சென்று பார்த்தாலோ, கோடி கோடியான வெண் முத்துக்களும், வைரக் கற்களும் வர்ஷிப்பதாகக் காணப்படும். வெயில் எரிக்கும் போது அருவிக் கரையில் தோன்றும் வானவில்களின் காட்சியை நினைத்தாலும் மயிர் சிலிர்க்கும். கண்ணுக்குத்தான் இப்படிக் காட்சி என்றால், காதுக்கு இனிய சங்கீதத்துக்கும் குறைவில்லை. இடைவிடாமல் "ஓ" என்று ஓசையிடும் அருவியின் சுருதிக்கு இணங்க விதவிதமான பட்சி ஜாலங்கள் தனித்தனியாகவும் கோஷ்டியாகவும் பாடிக் கொண்டேயிருப்பதைக் கேட்கலாம். இன்னும் மலைக்கு மேலே ஏறி சண்பகாடவி, தேனருவி முதலிய இடங்களுக்குப் போய் விட்டால், ஹிட்லரையும் முஸோலினியையும் ஸ்ரீ சீனிவாசய்யங்காரையும் கூட மறந்து விட்டு இங்கேயே தங்கி விடலாமென்று மனம் ஆசை கொள்ளும்.

இத்தகைய குற்றாலத்து இயற்கை அழகானது தமிழ்நாட்டுக்குச் சில சிறந்த கவிதைகளை அளித்திருக்கிறது.

"கொல்லை முல்லை
மெல்லரும்பீனம் குற்றாலம்"
என்றும்,
"கூதல் மாரி நுண்துளி
தூங்கும் குற்றாலம்"

என்றும் ஸ்ரீ ஞானசம்பந்தர் பாடியிருக்கிறார். நண்பர் பி. ஸ்ரீயின் கட்டுரைகளில் "குற்றாலக் குறவஞ்சி" என்னும் அரிய கவிதை நூலைப் பற்றி நாம் அடிக்கடி தெரிந்து கொண்டிருக்கிறோம்.

"ஓடக் காண்பது
பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது
யோகியர் உள்ளம்"
"காக மணுகாமலையில்
மேகநிரை சாயும்"
"தேனருவித் திரையெழும்பி
வானின்வழி ஒழுகும்"

என்பது போன்ற அழகான கவிதை வரிகள் நம்முடைய மனதில் பதிந்திருக்

கின்றன. குற்றாலத்தின் இயற்கை சௌந்தரியந்தான் இத்தகைய உயர்ந்த கவிதைக்குப் பிறப்பளித்தது என்பதில் சந்தேகமில்லை.

குற்றாலத்தில், ஜூன் ஜூலை ஆகஸ்டு மாதங்களை 'சாரல்' காலம் என்று சொல்வது வழக்கம். நமது வீடுகளில் முற்றத்தில் மழை பெய்தால் "தாழ்வாரத்தில் சாரல் அடிக்கிறது" என்று சொல்கிறோமல்லவா? அதுபோலவே மேற்சொன்ன மாதங்களில் மலைக்கு அப்பால் மலையாளத்தில் பெய்யும் மழையின் சாரல் குற்றாலத்தில் அடிக்கிறது. இந்த நாட்களில் அங்கு ஒரு நிமிஷம் சலசலவென்று தூற்றல் போடும்; அடுத்த நிமிஷம் பளீரென்று வெயில் எரிக்கும். வெயில் எரிக்கும்போதே மழை பெய்யும் காட்சியையும் அடிக்கடி பார்க்கலாம். இதெல்லாம் காண்பதற்கும் அநுபவிக்கிறதற்கும் வெகு ஆனந்தமாயிருக்கும்.

ஆனால் சாரல் காலத்தில் குற்றாலத்துக்குப் போவதில் சென்ற வருஷம் வரையில் ஒரு பெரிய சங்கடம் இருந்தது. அந்தக் காலத்தில், சுகப் பிரம்மங்களாயுள்ளவர்கள்தான் குற்றாலத்துக்குத் தைரியமாய்ப் போகலாம். வில்வமங்களரையும், திருநீலகண்டரையும் படுகுழியில் தள்ளியவர்களின் பரம்பரையில் வந்தவர்கள் அங்கு வந்து நிறைந்து விடுவார்களாம். இதனால், குற்றாலத்தில் ஒரு தெருவுக்கே "மீனவொட்டான் தெரு" என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில், விபசாரத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து, இந்தத் தொல்லை ஒருவாறு ஒழிந்து விட்டது. இப்போதெல்லாம், சுகப் பிரம்மரிஷிகளல்லாத சாதாரண மனிதர்களும் பயமின்றிச் சாரல் காலத்தில் அங்கே போகலாம்.

தற்சமயம் குற்றாலத்திலுள்ள குறையெல்லாம், சமீபத்தில் நமது சுகாதார மந்திரியின் கண்களை உறுத்திய அதே குப்பை கூளங்கள்தான். அருவிக் கரையிலும் கோவிலைச் சுற்றியும் தெரு ஓரங்களிலும் அசுத்தம் செய்வது சர்வ சாதாரணம். தெருக்களும், சாலைகளுமோ மகா மோசம். இப்படிப்பட்ட குற்றாலத்தைப் பார்த்து, 'தூய்மைக் கிறுக்கு' உள்ளவரான டாக்டர் ராஜன் மிரண்டு போனது இயல்பேயாகும். அவர் கோவில் மானேஜரை மிரட்டியதிலும் வியப்பில்லை. ஆனால், குற்றாலத்தைப் பரிசுத்தப்படுத்துவது கோவில் மானேஜரால் நடக்கக்கூடிய காரியம் என்று எனக்குத் தோன்றவில்லை. மாகாண சர்க்காரே கவனம் செலுத்தினால்தான் அது முடியும். கோடைக்கானலுக்கும், உதகமண்டலத்துக்கும் செலவாகியிருக்கும் தொகையில் நூற்றில் ஒரு பங்கு செலவழித்தால், குற்றாலத்தைத் தென்னாட்டிலேயே சிறந்த ஆரோக்கிய ஸ்தலமாக்கி விடலாம். பழைய சர்க்கார் காலத்தில் இதைச் செய்யாததில் வியப்பில்லை. ஆனால், காங்கிரஸ் சர்க்கார் செய்வார்களா? அதற்கும் ஒரு இடையூறு இருப்பது எனக்குத் தெரியும். குற்றாலத்துக்காகப் பணம் செலவழித்தால், குற்றாலத்து அருவியில் பாதியை மசூலிப் பட்டணத்துக்குக் கொண்டு வர வேண்டுமென்று ஆந்திரர்கள் சண்டையிடுவார்கள். கூவம் நதியில் பாதி கேட்பவர்கள் குற்றாலம் அருவியில் பங்கு கேட்காமல் விடுவார்களா?

ஆனாலும், எவ்வளவோ பெரிய காரியங்களைத் துணிச்சலாகச் செய்து பெயர் பெற்றிருக்கும் டாக்டர் ராஜன் மனது வைத்தால் ஒருவேளை நடந்தாலும் நடக்கும். நிற்க.

குற்றால வாசத்தை நீட்டிக்கும்படி தூண்டுவதற்கு எனக்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தன. இருந்தும், யுத்தம் ஆரம்பித்து விட்டது என்ற செய்தி கிடைத்த பிறகு குற்றாலத்தில் இருப்புக் கொள்ளவில்லை. அதிலும் சென்னை ஹைக்கோர்ட் வக்கீல்களில் 19 பேர் யுத்தகளத்தில் சேவை செய்வதற்குத் தயார் என்று கையெழுத்துப் போட்டிருக்கும் செய்தி தெரிந்ததும், நாம் இனிமேல் குற்றாலத்தில் உட்கார்ந்திருப்பது சரியல்லவென்று கிளம்பி விட்டேன்.


(1.10.1939, ஆனந்த விகடன்)

ஓட்டலில் கிடைக்கும் சுதந்திரப் போராட்ட வரலாறு!

பொதுவாக ஹோட்டல்களிலும், டீக் கடைகளிலும் சினிமா ஸ்டார்களின் படங்களைப் பார்க்கலாம். அல்லது பக்திப் பரவசத்துடன் தெய்வ சிந்தனையில் ஆழ்த்தும் மகாபாரத, ராமாயண ஓவியங்களை தரிசிக்கலாம். ஆனால் கோவை ஆர்ட்ஸ் காலேஜ் ரோட்டில் 'People's park'-க்கினுள் நுழைந்தால் நாம் எதிர்கொள்வது அன்னபூர்ணாவின் பல்வகை உணவுப் பதார்த்தங்களை விஞ்சும் அளவுக்கான சுதந்தரப் போராட்ட கால வரலாற்றுச் சித்திரங்களை.

பகத்சிங் வெள்ளையனுக்கெதிராக உரத்துக் கோஷமிட்ட காட்சி, சைமன் கமிஷனை எதிர்த்துக் கிளம்பிய புரட்சி, காந்தியடிகளின் தண்டி யாத்திரை, லாலா லஜபதிராயின் போர்ப் பிரகடனம், நேதாஜி உருவாக்கின தேசிய ராணுவப் படை... பாலகங்காதர திலகரின் கோஷம், சுதந்தரப் போரில் பெண்கள்... என வெள்ளொளி விளக்கு வெளிச்சத்தில் பதினாறுக்கும் மேற்பட்ட சித்திரங்கள்.

எப்படி வந்தது இந்த






• தாமோதரசாமி

ஐடியா? என்பதை விட இவ்வளவு பெரிய உணவு விடுதிக்குள் தேச விடுதலை ஓவியங் களைச் சித்திரிக் கப் பெரிய மனம் வேண் டுமே? என்று தான் கேட்க வேண்டும். அதையே அன்ன பூர்ணா சேர்மன் தாமோ தரசாமியிடம் கேட்டோம்:

"நானே சுதந்தரத்திற்காக ஜெயிலுக்குப் போய் வந்தவன்தான். இதுல என்ன அதிசயம்?" என்று பட்டென்று கேட் டவர், தொடர்ந்தார்...

"இன்னைக்கு நாம நிம்மதியா சாப் பிடறோம்னா, கல்லாவுல உட்கார்ந்து காசு வாங்கிப் போடறோம்னா 'அதெல் லாம் அந்தத் தியாகிகள் செஞ்ச தியா கம் - சிந்திய ரத்தம். ஒரு பகத்சிங் தூக்கு மேடையேறலைன்னா, காந்தி சத்தி யாக்கிரகம் பண்ணலைன்னா, நேதாஜி இளைஞர்களைத் திரட்டி நேரடித் தாக்குதல்ல ஈடுபடலைன்னா நாம இப்படி நிம்மதியாப் பேசிட்டுத்தான் இருக்க முடியுமா? நம்ம மக்கள், தேச விடு தலைக்கு உயிர் நீத்த செம்மல்களையும், இந்த தேச விடுதலை வரலாற்றையும் மறந்துட்டு வர்ற இந்த நேரத்துல, இங்கே சாப்பிட வர்றவங்களாவது இதைப் பார்த்து நினைக்கட்டும். ஒருவேளை அவங்க கண்டுக்காம விட்டுட்டாலும், அவர்களுடன் கூட வர்ற குழைந் தங்க 'அது என்ன; இது என்ன?'ன்னு கேட்காம விடாது. அவங்களுக்குச் சுதந்தரப் போராட்ட வரலாற்றைச் சொல்லியே ஆகணும். அதுக்காகத்தான் இதைச் செஞ்சிருக்கேன். நல்லதோ, கெட்டதோ இனி நீங்கதான் கருத்துச் சொல்லணும்!" என்றார் மிக அடக்க மாக.

சந்திப்பு, படங்கள்: **ரோகிணி**



ஒரு காதல் டைரி 15

வைக்கம் முகம்மது பஷீர்
தமிழில்: வைவலன்

"பெரிய படிப்பு ஒண்ணுமில்லே."

என் சகோதரியைப் பற்றிச் சொன்னேன்.

அது ஒரு பெரிய விஷயம் இல்லையென்பது போலச் சொன்னாள்.

"ஓ... என்ன படிப்பு!"

"ஓ... அதைப் பத்தி ஒண்ணும் சொல்லாதீங்க!" என்றாள் மீண்டும்.

தேவி தந்த பேனா என் கையில் இருப்பதைப் பார்த்தாள்.

"எப்படி இருக்கு? நல்லதா?"

"சுகமா எழுதறது! ஆரம்பத்திலே கொஞ்சம் கலாட்டாவெல்லாம் பண்ணியது. இப்போ சாந்தம்."

தேவி நினைத்து நினைத்துப் புன்னகை செய்தபடியே சொன்னாள்.

"நான் ஆர்டர் செய்திருக்கிற புதுப் பேனா வரட்டும்; அதையும் தர்றேன்."

"வேண்டாம். இது போதும்."

"ரெண்டும் இருக்கட்டும்."

ஒரு சின்னஞ் சிறுமியைப் போல, "அப்பா, ஹெட் மாஸ்டர் நான் கெட்டிக் காரின்'னு சொன்னார்."

அந்தச் சித்திரம் என் கற்பனையில் வந்தது.

தேவிக்கு இருபத்திரண்டரை வயசான போதிலும் பி.எஸ்ஸி பாஸாகி இருந்தாலும் பெரிய பேச்சாளி ஆகியிருந்தாலும் தேவி இப்போதும் ஒரு சின்னஞ் சிறுமிதான்.

அதை வாய்விட்டுச் சொன்னேன்.

"தேவி... யூ ஆர் ஒன்லி எ பட்(bud) ஸ்டில்."

தேவி முழுதும் நெகிழ்ந்து விட்டாள். "ஹோ...!" என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்தாள்... என்னைக் கட்டிப் பிடித்து முத்தம் வைக்கிற பாவத்தில்... கொஞ்சம் கழித்துச் சொன்னாள்.

"நான் ஒரு மொட்டு என்று யாரும் சொன்னதில்லை. இதுவரை!"

"துயரின் இனிமை கலந்த மோகன காவியம் என்றோ?"

"வேற யாரும் கூப்பிட்டதில்லே" தேவி என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

நான் தேவியின் காதல் கதையை நினைவு கூர்ந்தேன். அதை ஏன் இதுவரை சொல்லவில்லை?

"தேவி உன்னோட சுய சரிதையிலே ஒரு பகுதியை விட்டுட்டு இருக்கே! பாக்கி எல்லாம் சரி."

"விட்டுட்டது எந்தப் பகுதி?"

"காதல்...!"

"விட்டுட்டேன்னு தோணிச்சா?"

"ஆமாம்."

கொஞ்சநேரம் அவள் பேசவில்லை.

பிறகு "என்றால் இல்லை" என்று சொன்னாள்.

நிசப்தம். மீண்டும் தேவி.

"ஐயோ... நான் போகட்டுமா?"

நான் வெளியே பார்த்தேன். தவித்துப் போய் நிற்கிற சௌமினி... கூட நாலைந்து பெண்கள். நாட்டு வழக்கப்படி ஆடை உடுத்தியவர்கள்.

"தேவி... அசையாதே.. சௌமினி!" என்றேன்.

"ஓங்களைப் பாத்துட்டாளா?"

"இல்லே... அவங்க போகட்டும். அவர் பார்க்கிலே இருந்திருக்கணும்... போகட்டும்" பயப்படாதே!"

"ஈசுவரா... நான் என்னென்ன குழப்பங்கள்லே எல்லாம் போய் மாட்டிக்கிறேன்!"

"பரவால்லே... பயப்படாதே..."

"சௌமினி சரியான அழுத்தக்காரி. சந்தேகப்படறா."

"உலகம் முழுவதும் சந்தேகப்படட்டும்!"

"நீங்க சொல்லலாம். ஆண் இல்லையா?"

"ஓ."

தேவி உடனே புன்னகை செய்தாள்.

"நான் போகட்டுமா? இனி என்னிக்குப் பார்க்கறது?"

"எப்போதும்."

தேவி சிரித்துக்கொண்டே எழுந்து போகத் தொடங்கியபோது, அறிந்தோ அல்லது அறியாமலோ அந்தத் தங்கம் போன்ற புஜத்தில் பிளவுஸின் கையை அடுத்துத் திறந்திருந்த பகுதியில் என் வலது கைச் சுண்டுவிரலால் ஒருமுறை தொட்டேன். முன் யோசனை எதுவுமின்றி அப்படி நேர்ந்தது என்றவாறு.

சிறிது கழித்து நான் இறங்கி சாலைக்குப் போய் கிழக்கே பார்த்தேன். ஒரு வரிசையாகப் பெண்கள் போகின்றனர். நடுவே கறுத்த ஸாரியும் வெள்ளை பிளவுஸும். ஒரு கோடியில் சிவந்த ஸாரி அணிந்த சௌமினி. பாக்கி அனைவரும் வெள்ளை ஆடை.

நான் கறுத்த ஸாரியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கொஞ்சம் கழித்து அதுவும் மறைந்தது.

நான் நேரே பத்திரிகை அலுவலகத்துக்குப் போனேன். கே.எஸ். 'ஆர்ட்டிகிள்' கொடுக்கவில்லை. எனக்கு வந்த கடிதங்களை உடைத்து வாசிக்கவும் இல்லை. ஒரு இங்கிலீஷ் மலையாளம் அகராதி வாங்கிக்



கொண்டு இங்கே வந்தேன்.

'எண்டெர்டெய்ன்' என்ற வார்த்தைக்குச் சரியான அர்த்தம் என்னவென்று பார்த்தேன். தேவி சொன்னாள் அல்லவா? தேவி மதராஸில் தங்கப் போகும்போது நான் வர வேண்டும் என்றும் என்னை எண்டர்டெய்ன் செய்வதாகவும்! தேவி என்ன உத்தேசித்துச் சொன்னாள்?

நான் அகராதி பார்த்தேன்.

Entertain = பூஜிக்க, அர்ச்சிக்க, உபசரிக்க, ஆதிக்கம் செய்க, விநோதமூட்டுக, களிப்பிக்க.

இதில் எதைப் பெண்ணே, சரஸ்வதி தேவி, நீ செய்ய உத்தேசிப்பது?

அது என்னவென்று சூசகம் கிட்டியது அடுத்த நாள்தான்.

தேவியைப் பற்றி நினைத்தவாறு, தேவி தந்த பேனாவால் தேவிக்குக் காதல் கடிதம் எழுதிக்கொண்டு இருந்தேன். அனுப்புவதற்கு அல்ல. சும்மா எழுதிக்கொண்டிருந்தேன்.

மனசில் திக்குமுக்காடுவதை காகிதத்தில் பெயர்த்தேன். நான் அதையும் இழுத்துக் கிழித்து அறையில் எறிந்தேன். மீண்டும் எழுதலானேன்.

வெள்ளிக்கிழமை. மணி பன்னிரண்டரை ஆகி இருக்கலாம். நான் ஒருநாளும் இல்லாதவாறு அன்று குளிக்கவில்லை.

பொழுது வெளுத்ததும் எழுந்தேன்.

நல்ல குளிர். டீ குடித்துவிட்டுக் குளிக்கலாம் என்று கருதினேன். அப்படியே நேரம் போய் விட்டது.

ஷேவ் செய்யவும் இல்லை. சட்டை வேஷ்டி நன்றாய்க் கசங்கி விட்டிருந்தன.

சாப்பாடு கொண்டு வந்த பையன் சொன்னான். "ஸார், ஒங்களுக்கு ஒரு புக் போஸ்ட் வந்திருக்கு. நீங்க போய்க் கையெழுத்துப் போட்டு வாங்கணுமாம். மானேஜர் சொன்னார். அது பிரஸ்லே இருக்கு."

என்ன புக் போஸ்ட்?

சரஸ்வதி தேவி ஆக இருக்குமா?

ஒரு சிறிய மனத்தாங்கல்.

கோபக்காரி... நான் கொடுத்த புத்தகங்களை ஒருக்கால் திருப்பி அனுப்பி இருப்பாளோ?

நான் சாப்பிடாமல் கீழே இறங்கினேன்.

"நீ சாப்பிட்டுக்கோ" என்று பையனிடம் சொல்லிவிட்டு சாலையில் இறங்கி ஒரு வண்டி பிடித்து நேரே பத்திரிகை அலுவலகத்துக்குப் போனேன். கையெழுத்திட்டுப் பெற்ற பார்சலைத் திறந்தேன். ஆனந்த முற்றேன்.

புத்தகம். 'ஆசிரியக் குடிமகன்''

கோட்டயத்தில் இருந்து ஒரு நண்பன் (ஒரு புக்-ஸ்டால்காரன்) வேறு யாரிடம் இருந்தோ கடன் வாங்கி அனுப்பி இருந்தான். அது கிடைத்தால்தான் புதிய புத்தகம் வரும் என்று சொல்லி வைத்திருந்தேன்.

அந்தப் புத்தகம் பத்து வருஷத்துக்கு முன்பு அச்சானது. மார்க்கெட்டில் இல்லை.

தேவி அந்தப் புத்தகத்திற்காகப் பலரிடம் கேட்டதுபோல் என்னிடமும் கேட்டிருந்தாள்.

கே.எஸ்ஸிடம் சொல்லி வைத்திருந்தாள். என்னிடம் அதைப் பற்றி ஓரிரு முறை விசாரித்தும் இருந்தாள்.

எங்கேயாவது இருக்குமானால் நமக்குக் கிடைக்கும் என்று சொல்லி இருந்தேன்.

அதை எடுத்துக்கொண்டு நான் நேரே பி.டி. காலேஜுக்குப் போனேன்.

தேவி வகுப்பில் இருந்தாள். மாஸ்டர்களும் மாணவர்களும் என்னை அறிய



"என்ன தரகரே, மாப்பிள்ளை வீட்டுக்காரர் உங்க காதோடு என்ன சொன்னார்?"

"கிளம்பறப்ப மாப்பிள்ளையோட தம்பிக்கு திடீர்னு ஏதோ அவசர வேலை வந்து, அவரால பின்னோடு வர முடியலையாம். அவருக்குப் பார்சல் கட்டிக் கொடுக்க முடியுமான்னு கேட்கிறாங்க!"

— வி. மீனாட்சி

வில்லை. நான் வராந்தாவில் போட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன்.

''சரஸ்வதி தேவியைப் பார்க்கணும்'' என்று ஒரு மாஸ்டரிடம் நான் போனதுமே சொன்னேன்.

அப்போது அவர் பின்பக்கமாக ஒரு ஸ்க்ரீனுக்குப் பக்கத்தில் நின்ற, பல வண்ணச் சேலை அணிந்த ஒரு யுவதி எட்டிப் பார்த்தாள்.

"யாரடா, தேவியைத் தேடி வந்திருக்கிற இந்த மனிதன்'' என்ற பாவத்தில் ஒரு நோட்டம்.

பிறகு "ஓ..ஏதோ ஒரு.. என்ன சொல்றது?" என்ற ரீதியில் மறைந்தாள்.

அந்தத் திருமதி ஜன்னல் அருகே வந்தாள். மீண்டும் என்னைத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். மாணவர்களும் அங்கும் இங்கும் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

இப்படி இருக்கும்போது வேறு இரண்டு பெண்கள் என்னைப் பார்த்தனர். பார்க்க லட்சணமாய்த்தான் இருந்தார்கள்.

நான் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து கர்வத்தோடு புகை விடத் தொடங்கினாலும் ஆகக் கூடி ஒரு தொந்தரவு தோன்றியது.

அங்கே ஒரு சுதந்தரச் சூழல் இருந்தது.

விசாலமான மைதானம். மதில் சுவர்களுக்குள்ளே கட்டடங்கள். பூந்தோட்டம்... மரங்கள்... குளிர்ந்த காற்று... பசும் புல்வெளி.

வெளியே மிகவும் நேர்த்தியானதும் சிமெண்ட் போட்டதுமான யூரினல்ஸ் (அதற்குள்ளே நான் போகவில்லை. அதனால் உட்புற நிலை தெரியவில்லை) அந்தப் பக்கம் இரண்டு யுவதிகள் போவதைக் கண்டேன். அவர்களும் என்னை நோக்கினர்.

இரண்டு அழகிகள்.

'யாரடா அந்த வழுக்கை' என்ற பாவத்தில் பார்த்துவிட்டு இருவரும் தமக்குள் ஏதோ சொல்லிச் சிரித்துக் கொண்டு யூரினல்ஸுக்குள் போனார்கள்.

அவர்கள் திரும்பி வரும்போது என்னைப் பார்த்துக் குசுகுசுத்துக் கொண்டு "கிக் கிக்கி" என்ற, யுவதிகளுக்கே உரிய அர்த்தமில்லாத சாதாரணச் சிரிப்பு ஒன்றைச் சிரித்து விட்டுப் போனார்கள்.

நான் என் தேவியை எதிர்பார்த்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

எங்கேயோ ஒரு மணி அடித்தது.

தேவியின் வகுப்பு எதுவென்று எனக்கு அறிய முடியவில்லை. ஒரு கதவினூடே...

அப்போது அதோ தேவி!

சில பெண்களின் நடுவில்.

வெள்ளை ஸாரி. வெள்ளை ப்ளவுஸ்.

அந்த கறுத்த பிரேமுள்ள கண்ணாடியும் வட்டமான வெளுத்த முகத்திற்கு அந்தக் கண்ணாடி நல்ல அழகு என்று நினைக்கும்போது –

ஒரு சங்கதி!

தேவி பழையபடியே தலைமுடியை இழுத்து முறுக்கி அப்பம் போல கட்டி வைத்திருந்தாள்! சில சிவப்பு ரோஜாக்களும் சூடி இருந்தாள்.

நான் இருந்த பக்கமாக ஒருமுறை நோக்கினாள்.

கண்டாளோ என்னவோ?

. ஆகக்கூடி ஒரு மறுப்புதான். என்னிடமுள்ள பயங்கர எதிர்ப்பு தான் அந்தக் கட்டி வைத்திருக்கும் முடி!

இருக்கட்டும். வரட்டும். மெதுவாக அந்தப் பெண்கள் கூட்டத்தோடு ஒருமித்து தேவி நடந்து வந்தாள். இடையில் என்னைக் கண்டாள்.

இனிய புன்னகையோடு ஒரு பரபரப்பு. அதைத் தடுத்து, "ஓ, விசேஷம் ஒண்ணு மில்லே" என்ற ரீதியில் மெதுவாக வந்தாள்.



"பெரிய ஆளுப்பா நீ! எவ்வளவு தைரியம் இருந்தா பட்டப்பகல்ல பேங்க்கை கொள்ளை அடிச்சிருப்பே?"

"பாராட்டுக்கு ரொம்ப நன்றிங்க. இந்த மாதிரி திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்போதுதான் மேலும் மேலும் புதுமையா செய்ய தோணுது!"

— சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

கல்கியும் — குருசேவ்வும்!

அலைஓசை நாவலில் சூரியா என்னும் இளைஞன். தாஜ்மகாலை வியந்து பார்த்துக் கொண்டே இருக்கிறான் சீதா. வியப்பை விரிசல் படுத்துகிறான் சூரியா. ''இதில் ஒன்றும் அதிசயமில்லை சீதா. ஒரு அரசன் தன் சுயநலத்தின் அடையாளமாக ஆயிரக்கணக்கான அடிமைகளைக் கொண்டு கட்டி முடித்து எழுப்பப்பட்ட கட்டடமாகத் தான் இது எனக்குத் தெரிகிறது'' என்கிறான்.



• இரா. இராமமூர்த்தி

அலைஓசை நாவல் எழுதப்பட்ட காலம் 1948-50. இதன் பின்னர் பல ஆண்டுகள் கழித்து இந்தியாவிற்கு வருகை தருகிறார் ரஷ்ய அதிபர் குருசேவ்.

தாஜ்மகாலின் எதிரே நின்று கொண்டு குருசேவ் சொல்கிறார்:

''உங்கள் கண்களுக்கு இந்த வெள்ளைப் பளிங்கு மாளிகை மட்டும்தான் தெரிகிறது. எனது கண்களுக்கு – இந்தக் கட்டடத்தின் அடித்தளத்தில் எத்தனையெத்தனை தொழிலாளர்களின் வியர்வையும் – செந்நீரும் சிந்தப்பட்டிருக்குமோ என்கிற சிந்தனைதான் தெரிகிறது!

– திருவரங்கம், செண்பகத் தமிழ் அரங்கில் ''கல்கியின் சமூகப் புதினங்களில் பாத்திரப் படைப்பு'' என்னும் தலைப்பில் புலவர் இரா. இராமமூர்த்தி பேசியதிலிருந்து: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

''என்ன போகல்லியா?''

''இல்லே... அந்தப் புத்தகம் கெடைச்சுட்டுது. ஆசிரியக் குடிமகன்''

நான் அதைக் கொடுத்தேன்.

தேவிக்குச் சந்தோஷமாய் விட்டது.

அந்தப் புத்தகம் வந்த என் முகவரி உள்ள கவரையும் அவள் எடுத்துக்கொண்டாள்.

தேவியின் புத்தகங்களோடு கூட கறுத்த அட்டையுள்ள ''த நைட் ஈஸ் ஹெவி''யும் இருந்தது.

பல இளைஞர்களும் கிழவர்களும் சுற்றி இருந்தனர்.

''வைக்கம் முகம்மது பஷீர். தி பேமஸ் ரைட்டர்.''

''நாட் ஸோ வெரி ஃபேமஸ்'' என்று நானும் சொன்னேன்.

தேவி எதையோ எடுக்கக் குனிந்தபோது ஒரு பூ கீழே விழுந்தது. அது எனக்குக் கிடைத்தால்... என்று நான் ஆசைப் பட்டேன். கேட்கவில்லை.

மேலும் நிறையப் பெண்கள்... என்றால் யுவதிகள். மாஸ்டர்களும். நான் சொன்னேன்.

''இன்னிக்கு நான் குளிக்கலே. எழுதிட்டிருந்தேன். அப்போ இந்தப் புத்தகம் வந்தது.''

தேவி அவர்களுடைய இலக்கிய மன்றச் செயலாளரை அறிமுகப் படுத்தினாள். அழகிய ஒரு யுவதி. இனிய புன்னகையை உள்ளே பதுக்கிக்கொண்டு அவள் நின்றாள்.

''நாடகம் எழுதிக்கிட்டிருக்கேன். பதிலுக்கு என்ன தருவே?'' தேவி சொன்னது தகுதி வாய்ந்த ஒரு பிரதிபலன் தருவதாக.

''நான் ஒண்ணும் தர மாட்டேன்'' என்றாள் அந்தச் செயலாளர் யுவதி.

''சும்மா வேணுமா?''

''ஆமாம்.''

''நான் ஒரு எழுத்துத் தொழிலாளி ஆச்சே!'' என்றேன்.

அப்போது நீண்டு மெலிந்த இரு நிறமான ஒரு நாயர் யுவதி அங்கே வந்தாள். பெயர் சுமதி என்று தேவி அறிமுகப்படுத்தினாள். (அவள் நெருக்கமான சிநேகிதி என்று பிறகு தேவி சொன்னாள்) சுமதி முற்போக்கு இலக்கியம், கலையும் நல்வழிச் சிந்தனையும் என்ற விஷயங்களைப் பற்றிக் கேட்டாள்.

''எனக்கு ஒண்ணும் தெரியாது. பெரிய படிப்பு ஒண்ணுமில்லே...''

''இருந்தாலும்...''

(தொடரும்)



ESTD 1955 உ Phone: 0431-704312 & 706823

15 நாட்கள் கொண்ட

ஆடிமாத காசியாத்திரை

4.8.99 தேதி ஆடி 19ம் தேதி காலை 5.30 மணிக்கு சென்னையிலிருந்து ஒரு தனி 3 டயர் கேரேஜ் புறப்பட்டு, ஆக்ரா-மதுரா-டில்லி, அரித்வார், ரிஷிகேஷ் அலகாபாத், அயோத்யா, கயா, காசியாத்திரையை பூர்த்தி செய்தபின் சென்னைக்கு திரும்பிவந்து சேர்கிறது. நபருக்கு டிபன் காபி 2 வேளை போஜனம் நகர்சுற்றி பார்த்துவரும் பஸ்கட்டணம் முழு பார்த்துடன் கூடிய ரயில்கட்டணம் உட்பட **ரூ.6575** ரூ.2500 விதம் அட்வான்ஸ் அனுப்பி ரிசர்வ் செய்து கொள்ளவேண்டும் கடைசி நேரத்தில் எனக்கு கீழ்பர்த் அல்லது நடுபர்த் வேண்டும் என்றால் கிடைப்பது சிரமம்.

16 நாட்கள் கொண்ட தங்க அன்னபூரணி, தீபாவளி கங்கா ஸ்தான **காசியாத்திரை ஸ்பெஷல்**

28.10.99 ம் தேதி சென்னையிலிருந்து காலை 5,30 மணிக்கு புறப்பட்டு ஆக்ரா மதுரா டில்லி, ரிஷிகேஷ், அலகாபாத், அயோத்யா, காசி, கயா, காசி சென்னை வந்துசேரும் வரை ஒரே கேரேஜில் யாத்திரைக்குப்போய் திரும்புகிறது கட்டணம் **ரூ. 6575**

14 நாட்கள் கொண்ட தங்க அன்ன பூரணி, தீபாவளி கங்கா ஸ்தான காசி யாத்திரை ஸ்பெஷல் 30.10.99 ம் தேதி இரவு 10.30 மணிக்கு புறப்பட்டு குர்தாரோடு பூரி புவனேஸ்வர், கல்கத்தா, காசி, அயோத்யா, அலகாபாத் சென்னை வந்துசேரும் வரை ஒரே கேரேஜில் யாத்திரைக்குப் போய் திரும்புகிறது. கட்டணம் நபருக்கு **ரூ.6975**

16 டிக்கெட்டுக்கு ஒரு டிக்கட் துகை சலுகை உண்டு / முழுமையான விபரம் வேண்டின் 3ரூ ஸ்டாம்ப் அனுப்புதல் வேண்டும்

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ், (Regd.




34,A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி- 2.
Prop. K.E.நம்பிள்ளை, நிர்வாகம்: N.K.சேகர், D.சேகர், N.கங்கா

சிவராஜ் பித்த வாயு சூரணம்

அஜீரணம், வாயுக்கோளாறு, மலச்சிக்கல் ஆகியவற்றிலிருந்து நிவாரணம் பெற
100 கிராம் புட்டி ரூ 100 V.P.P. சார்ஜ் ரூ . 25 தனி

பித்த வாயு சூரணம்



Stockist

CHENNAI : PUSHPA TRADING CO.,
10, NAINAPPAN STREET, PARK TOWN.

THIRUTHAN : SRI VINAYAKA PHARMA,
373, M.P.S. SALAI.

KANCHEPURAM : TAMILNADU MEDICAL AGENCIES.
25, NELLUKARA STREET.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

SIVARAJ PHARMACY


C- 18, B-1, Rajaram Nagar, Salem - 636 007.

நடக்குமென்பார் நடக்காது!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

நீங்க கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயத்துல இருக்கீங்க. கோபம், பொறாமை, எரிச்சல் இதெல்லாம் இப்ப உதவாது. புத்தர் மாதிரி சாந்த சொரூபியா இருந்தாத்தான் உங்களுக்கு நல்லது. வீண் சண்டைகள்ல மாட்டிக்கா தீங்க. கணவன் மனைவி உறவுல பிணக்கு வரும் போது முதல்ல நீங்க விட்டுக் கொடுங்க. புது வியாபார ஒப்பந்தங்கள், வெளியூர்ப் பயணம், வீடு வாங்கறது, ஷேர் எதுவும் இப்ப வேணாம்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருக சிரிஷம் 2-ம் பாதம் வரை)*

கிரகங்கள் சாதகமாத்தான் இருக்குது. நினைச்ச காரியம் நடக்கும். சிலர் அவங்க துறைல சாதனை புரியற அளவுக்கு ஜொலிப்பீங்க. எதிரிகள் காணாம போயிடுவாங்க. வழக்குகள்ல வெற்றியே கிடைக்கும். வீட்டுல ஒரு நல்ல காரியம் நடக்கும். உறவினர்களால ஆதாயம் உண்டு. பணப் பிரச்னையும் இருக்காது.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் நீங்க நினைச்சிட்டிருக்கற முக்கியமான திட்டம் ஒண்ணு நல்லபடியா நடந்து முடியும். வெளி நாட்டுலேருந்து ஒரு நல்ல சேதி வரும். பணம் பல வழிகள்ல வரும். உறவினர்களால ஆதாயம் உண்டு. ஆனா, புதியவர்கள், வேற்று மொழிக்காரர்கள் கிட்ட எச்சரிக்கையா நடந்துக்கங்க. இரவுப் பயணம் வேண்டாம். நாய்க்கடி அபாயம் உண்டு, எச்சரிக்கை.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

அலைச்சல் நிறைய இருக்கும். ஆனா, காரியங்கள் அத்தனை சுலபமா நடக்காது. நண்பர்களால பிரச்னை ஏதும் வரலாம். வியாபாரத்துல ஏற்றத் தாழ்வுகள் வரும். கடல் வாணிபம் அத்தனை ஆதாயம் தராது. குடும்பத்துல சிறு குழப்பங்கள் வரலாம். அரசு ஊழியர்களுக்குப் பழைய பாக்கிகள் வந்து சேரும். விளையாட்டுத் துறையினருக்கு மட்டும் புகழ் கூடும் வாரம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

அந்தஸ்து கூடும் வாரம். எதிரிகள் ஓடிடுவாங்க. உங்களுக்கு எதிலும் வெற்றிதான். நிர்வாகத்துறையினருக்கு, தொழிலாளிகள் சப்போர்ட் கிடைக்கும். புதிய வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படும். கலைஞர்களுக்கும் வெற்றியே கிடைக்கும். வீட்டுல இருக்கற வயசானவங்க உடல் நலத்துல அக்கறை செலுத்துங்க. இப்ப உங்களுக்கு சிறு மருத்துவச் செலவுகள் மட்டும் அடிக்கடி வரலாம்.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

கஷ்டம் உண்டுன்னாலும் வெற்றி உங்க பக்கம்தான். போராடி ஜெயிக்கிறதும் ஒரு சுகம்தானே? இந்த வாரம் எழுத்தாளர்கள், ஆசிரியர்களுக்கு லாபகரமா இருக்கும். வழக்குகள் வெற்றிகரமா முடியும். அரசியல்வாதிகள் கொஞ்சம் நிதானமா நடந்துக்கணும். சிலருக்கு வயிற்று உபாதைகள் வரலாம். வெளியூர் பயணங்களைத்

தவிர்த்துடறது நல்லது.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*



நண்பர்களும் உறவினர்களும் ஆதரவா இருப்பாங்க. இதுவரை இருந்து வந்த பணக்கஷ்டம் நீங்கிடும். கணவன், மனைவி உறவு சுமுகமா இருக்கும். கூட்டுத் தொழில் செய்யறவங்களுக்கு ஆதாயமான கால கட்டம். மாணவர்களுக்கு இஷ்டப்பட்ட காலேஜ்ல சீட் கிடைக்கும். வீடு, மனை வாங்க, உகந்த நேரம். டூ வீலர் பயணம் மட்டும் வேணாம். சாலை விபத்துக்கு வாய்ப்பு இருக்கு. வெளிநாடு போற சான்ஸ் சிலருக்கு வரும்.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*




ஏற்ற இறக்கமான வாரம். பண விஷயத்துல ரொம்ப எச்சரிக்கையா இருங்க. கடன் குடுக்கறதோ, வாங்கறதோ வேணாம். எந்த முக்கியக் காரியமானாலும் நாலு பேர்கிட்ட கருத்து கேட்டுட்டு ஆரம்பிங்க. இஞ்சினியர்கள், கம்ப்யூட்டர் ஆசாமிங்களுக்கு இது ஆதாய மான வாரம். பெண்களுக்குப் புது புடைவை யோகம் இருக்கும். குழந்தைகள் விளையாட்டுல லேசா அடி பட்டுப்பாங்க.

மிதுன ராசிக்காரரான சின்னத்திரை நடிகை காயத்ரிக்கு வெளிநாட்டு லேர்ந்து நல்ல சேதி வருமாம். முக்கியமான திட்டம் நல்லபடியா நடக்குமாம்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*



வெற்றிகரமான வாரம்தான். துணிஞ்சி எதிலும் இறங்கலாம். சொத்து வாங்கறதோ, வேலை தேடறதோ, வெளிநாடு போறதோ - இந்த வாரம் செய்தா பலன் உறுதி. பெண்கள் செயற்கரிய காரியம் செய்து புகழடைவாங்க. அரசியல்வாதிகள் பேச்சுல கவனமா இல்லாட்டி, மேடைல அவமானப்பட நேரிடும். வயசானவங்களுக்கு, உல்லாசப் பயண யோகம் இருக்கும்.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*




உங்க காரியங்களுக்கு நிறைய குறுக்கீடுகள் வரும். நண்பர்களே எதிரி ஆவாங்க. நிறைய அலைச்சலும் உழைப்பும் இருக்கும். ஆனா, பலன் அவ்வளவா இருக்காது. காதல் அனுபவங்கள் கூட அவ்ளோ சுவாரசியமா இருக்காதுன்னா பார்த்துக்கங்க. வீட்டுல பெரியவர்களை அவமரியாதையா பேசாதீங்க. அக்கம் பக்க வம்புகள்ல தலையிடாம இருக்கறதும் நல்லது.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*



உங்க புத்தி சாலித்தனம் வெளிப்படறாப்பல சில காரியங்கள் செய்வீங்க. பொதுப் பணிகள்ல ஈடுபாடு உள்ளவங்களுக்குப் புகழ் கூடும். ஆசிரியர்கள், பெண்கள், குழந்தைகளுக்குப் பணவரவும் காரிய பலிதமும் கண்டிப்பா உண்டு. சிலருக்கு வெளியூர் மாறுதல் இருக்கும். உல்லாச அனுபவங்கள் கிடைக்கும். பயணத்துல எச்சரிக்கையா இருங்க. பர்ஸ் களவு போக வாய்ப்பிருக்கு.


மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*



சாதனை செய்யற வாரம். உங்க எதிரிகள் ஓடி ஒளிவாங்க. புகழ் கூடும். பணப் பிரச்னை இருக்காது. சிலருக்குத் திருமண ஏற்பாடு நடக்கும். மாணவர்கள் படிப்புல கவனம் செலுத்தாம ஜாலி பண்றது நல்லதில்லை. வீட்டுல சிறு குழப்பங்கள் எழும். சண்டை கூட வரலாம். எதிலும் விட்டுக் கொடுத்து நடந்துக்கங்க.

இந்தியத் திருநாட்டில் தற்போது பல துறைகளில் சீர்கேட்டைப் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு துறை மட்டும் தடம் புரளாமல் அசைக்க முடியாத தூணாக நின்று ஜனநாயகம் என்னும் மாபெரும் மாளிகையைத் தாங்கி நிற்கிறது. அந்தத் துறைதான் நீதித்துறை! இந்த நீதி திடீரென இன்று நேற்றுத் தோன்றியதன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்த நீதி எந்த அளவுக்குச் சிறந்திருந்தது என்பதனை இரு பெரும் பக்தி நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பண்டையோர் எப்படியெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து உண்மையைக் கண்டு நீதி வழங்கி யிருக்கிறார்கள் என்பதனைக் காண்போம்.

1. பெரியபுராணம்



சோழர் காலத்து நீதி : தடுத்தாட் கொண்ட புராணம் அனைவருக்கும் தெரியும். பண்டை நியதிப்படி மண்ணில் மானிடனாய்ப் பிறந்த நம்பியாரூரைச் சிவபெருமான் தடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சி ஏதோ புராணக் கதை அல்ல. ஆழ்ந்து நோக்கினால் பண்டைக் காலத்து நீதி முன்றை எப்படிச் சிறப்பாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது புலனாகும்.

திருமண மேடையில் மாப்பிள்ளையாக ஆரூரர் அமர்ந்திருந்த போது, சிவபெருமான் தொண்டு கிழவனார் வேடம் தாங்கி வந்து, "உனக்கும் எனக்கும் முன் காலத்திலிருந்து வரும் வழக்கைத் தீர்த்த பின்தான் நீ திருமணம் செய்து கொள்ள முடியும்" என்று கூறினார். இந்த மாநிலத் தில் இதற்கு முன் இப்படி ஒரு வழக்கு இல்லையே என்று அனைவரும் திகைத்தனர்.

அவையோர் அனைவரும் ஆரூரர்க் கே ஆதரவாகப் பேசினர். வந்த கிழவனா ரோ வழக்குக்குச் சான்றாக அடிமை

ஓலையைக் காட்டினார். ஆத்திரம் அடைந்த ஆரூரர் அதனைப் பற்றி இழுத்துக் கிழித்து வீசி எறிந்தார்.

வழக்குத் தொடுத்த கிழவனார், ஆரூரர் விருப்பப்படி வழக்கைப் புத்தூரி லிருந்து திருவெண்ணெய் நல்லூருக்கு மாற்ற ஒப்புக் கொள்கிறார். (இப்போதுகூட ஒரு நீதி மன்றத்திலிருந்து வழக்கை வேறொரு நீதி மன்றத்திற்கு மாற்றுவதைக் காண்கிறோம்) ஆட்சி (அனுபவ உரிமை) ஆவணம்(எழுத்து மூலமான ஆதாரம்) அயலார் சாட்சி (கண்ணால் கண்டவர் சாட்சி) 'ஆட்சியில் ஆவணத்தில் அயலார் சாட்சி என மூன்றில் ஒன்று காட்டுவாய்' என, இந்த மூன்றில் வேதியர் காட்டியது ஆவணம். (DOCUMENTARY EVIDENCE). இவன் புத்தூரில் ஆத்திரத்தில் கிழித் தெறிந்தது நகல் ஓலை; மூல ஓலை இதோ இருக்கிறது என்றார், அவையோர் முன் அந்தணர். (இதிலிருந்து என்ன தெரிகிறது? எதற்கும் நகலைத்தான் அனுப்ப வேண்டும்; மூலத்தை உரிய நேரத்தில்தான் தர வேண்டும் என்பது தெரிகிறதல்லா?)

வெண்ணெய் நல்லூரில் வேதபாரகர் முன்னிலையில் வழக்கு வருகிறது. அடிமை ஓலையாகிய ஆவணம் (ஆரூரரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை) வேதியர் அவைமுன் வைக்கப் பட்டது. அதிலுள்ள கையெழுத்து நம்பி ஆரூரரின் பாட்டனாருடையது தானா எனச் சரி பார்க்கப்பட்டது. இப்போதும் COMPARISON OF HAND WRITING AND SIGNATURE என்னும் முறை உள்ளதை நாம் அறிவோம். பண்டைக் காலத்தில் சாட்சிக் கையெழுத் தும் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்ப்புக் கூறப்பட்டது. தற்போதும் இந்த முறை பின்பற்றப்படுகிறது கவனிக்கத்தக்கது.

2. திருவிளையாடற்புராணம்



குலோத்துங்க பாண்டியன் ஆட்சிக் காலம். திருப்பத்தூரிலிருந்து மறையவன் ஒருவன் தன் மனைவியோடும் இளம் குழந்தையோடும் மதுரை நோக்கிக் காட்டு வழியில் சென்று கொண்டிருந்தான். மனைவிக்குத் தாகம் எடுத்தது. அவளை ஆலமரத்தடியில் இருக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் நீரைத் தேடிச் சென்றான்.

அவள் தன் குழந்தையுடன் அயர்ந்து படுத்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது வேடன் ஒருவன் அந்த ஆலமர நிழலில் ஒருபுறத்தில் இளைப்பாறியிருந்தான். அந்த ணன் மனைவி திடீரென அம்புபட்டு இறந்தாள். திரும்பி வந்த கணவன் திடுக் கிட்டான்; அழுது புலம்பினான். இவளைக் கொன்றவன் வேடனே என முடிவு செய்து அவனை இழுத்துக் கொண்டு, இறந்து போன மனைவியை முதுகில் இட்டுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு விரைந்து மன்னனது மாளிகையை அடைந்து முறையிட்டான். பாண்டியனை நோக்கி, "இவ்வேடன் என் மனைவியைக் கொன்று விட்டான். நீதி வழங்க வேண்டும்" என வேண்டினான். வேடனோ "நான் கொல்லவும் இல்லை; கொன்றவரையும் யான் அறியேன்" என்றான். எவ்வளவு தான் துன்புறுத்தி னாலும் சொன்னதையே திரும்பத் திரும்பக் கூறினான். பாண்டியனுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. சிறையிலிட்டு இன்னும் துன்புறுத்தினால் உண்மையை ஒப்புக் கொள்வான் என அமைச்சர் கூற, அப்படியே கடுமையாகத் துன்புறுத்தினர். ஆனாலும் வேடன் முன்னர் சொன்ன தையே தான் மீண்டும் சொன்னான்:

ஐயே யானும் கொன்றவன் அல்லேன்;
கொன்றாரைக் கண்டிலேன்
மெய்யே ஐயா யானறியேன் இவ்விளைவு
என்றான்

பாண்டியனின் மனக் குழப்பம் அதிகமானது. இரவு பகலாகச் சிந்தித்தான். சோமசுந்தரப் பெருமானிடம் சென்று முறை யிட்டான். "மன்றாடு மணியே! என் தாழ்வு கெட அருள்வாய்!" என்று பணிந்து வேண்டினான்.

"வணிகர் குலத் தெருவில் ஒரு வீட்டில் திருமணம் நடைபெறுகிறது. நீ மறையவனுடன் அங்கு வருக! உண்மை விளங்கும்!" என ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அவ்வாறே பாண்டியன் மாறு வேடம் பூண்டு யாரும் அறியா வண்ணம் அந்தணனுடன் அத்திருமண வீட்டில் ஒரு புறம் ஒதுங்கி நின்றான். அப்போது எமதூதர் இருவர் மணமகனின் உயிரைக் கவர வந்தனர். கோலாகலமான இந்த நேரத்தில் மணமகன் உயிரைக் கவர்வது எப்படி? என ஆராய்ந்தனர். ஒருவன் சொன்னான்: "அன்றொரு நாள் ஆலமரத் தடியில் இருந்த பார்ப்பனியின் உயிரை அம் மரக் கிளையின் உச்சியில் முன்னரே சிக்கிக் கிடந்த ஒரு கணையைக் காற்றினால் வீழ்த்தி எங்ஙனம் கவர்ந்தோமோ அவ்வாறே இப்போது ஒரு யுக்தி செய்வோம். அருகில் இருக்கும் பசுவைத் திருமண ஆரவாரத்தால் மிரளச் செய்து கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடச் செய்து மணமகனின் உயிரைக் கவர்வோம்" என்றான். சற்று நேரத்தில் அவ்வாறே நடந்தது. மணமகன் ஆவி பிரிந்தது.

வேந்தனும் வேதியனும் மனம் தெளிந்தனர். வேடன் விடுதலை செய்யப் பட்டான். இது கதை! இந்த வழக்கை மறையவன் உரைத்த விதமும் பாண்டியன் ஆராய்ந்த தன்மையும் இங்குக் கருதத் தக்கது. மறையவன் மாண்டவளைத் தன் முதுகில் சுமந்து வந்தான். கையும் களவு மாக வேடனையும் இழுத்து வந்தான்.

மாண்டவளைத் தன் வெந்நிடை யிட்டான்
மகவு ஒக்கல்
தாண்ட அணைத்தான்..... கூடடல்
அணைந்து முறையிட்டான்.

இவ்வளவு சான்றுகளுடன்- சாட்சி களுடன் முறையிட்ட போதும் உடனே பாண்டியன் நீதி வழங்கவில்லை. நீதி முறைப்படி நன்கு ஆராய்ந்தான். பல நாள் சிந்தித்தான். உண்மையைக் கண்டு உணர முடியவில்லை. பின் தெய்வ அருளை நாடி னான். உண்மை தெரிந்தது. மறையவனுக்கு நீதி கிடைத்தது. வேடன் விடுதலையும் பெரும் பொருளும் பெற்றுத் திரும்பினான்.

இத்தகைய நீதி முறைகளைப் புராணம் என்ற பெயரில் அமைந்த

பெரிய புராணத்திலும்
திருவிளையாடற் புராணத்திலும்

கண்டு மகிழலாம். அனைத்திற்கும் மேலாக அடியார்களின் சிறப்பைப் பெரிய புராணத் திலும் சிவபெருமான் மேன்மை யைத் திருவிளையாடற் புராணத்திலும் கண்டு இன்புறலாம்.

நீங்கள் கேட்டவை – தராசு



* தத்துவ தாகம்

* சறுக்கல்

● கே.வி. ராமன், சென்னை-73.

? பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் மகேஷ் பூபதி – லியாண்டர் ஜோடி வெற்றி குறித்து...?

! உலகக் கோப்பை கிரிக்கெட் சுவாரஸ்யத்தில் அநியாயத்துக்கு நம் கவனத்தைக் கவராமல் போன நிகழ்ச்சி. பாரத நாட்டுக்குப் பெரிய அளவில் பெருமை தேடித் தந்த இருவரையும் த்ரீ சியர்ஸ் சொல்லி வாழ்த்துவோம்.

● எம். அசோக்ராஜா, திருச்சி-15.

? விட்டலாச்சாரியாவின் மரணம்...?

! இதுவும் ஒரு மாயாஜாலமாக இருக்கக் கூடாதா என்று அவரது விசிறிகளை ஏங்க வைக்கும் நிகழ்ச்சி!

● வி.எஸ்.கே. மூர்த்தி, சென்னை – 17.

? வக்கீல்களுக்கு மனச்சாட்சி கிடையாதா?

! உண்டு. ஆனால் அடகு வைத்து விடுவார்கள்.

● ந. வந்தியக்குமாரன், சென்னை – 41.

? 'மற்றவர்கள் கோட்டை விட்டால்தான் உண்டு. டெண்டுல்கர் வெற்றி வாய்ப்பைத் தவற விட மாட்டார்' என்று நீங்கள் சொல்லி முடிக்கும் வேளையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பூஜ்யத்தைப் பரிசாகக் கொடுத்து அசத்தி விட்டாரே டெண்டுல்கர்?

! யானைக்கும் அடி சறுக்கும்.

● வி.பிரசன்ன கிருஷ்ணன், சென்னை -17.

? 'தராசு பதில்கள் பெரும்பாலும் சிந்திக்க வைப்பவை. ஆனால், தப்பித் தவறிக்கூட சிரிக்க வைப்பவையல்ல...' என்று தங்கள் நகைச்சுவை உணர்வு பற்றி என் நண்பர் விமர்சிக்கிறாரே?

! நமது நாட்டு அரசியலே நகைச்சுவையாக இருக்க, கேள்விகள் அதன் அடிப்படையில் அமைவதால் பதில்களாவது சிந்திக்க வைப்பவையாக இருக்கட்டுமே!

● வை. சண்முகவேல், விழுப்புரம்.

? அட! திராவிடத் தலைவர் கருணாநிதி பகவத்கீதை படிக்கச் சொல்கிறாரே?

! 'கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்கூட தத்துவ தாகம் இருந்தால் ஏற்கலாம்' என்று முக்கூரின் 'குறையொன்றுமில்லை' நூலை விமர்சித்து கணையாழியில் எழுதியிருக்கிறார் இந்திரா பார்த்தசாரதி. இது கீதைக்கா பொருந்தாது!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? இந்தியாவுடனான கட்டுப்பாடு எல்லையை மதித்து நடக்குமாறு பாகிஸ்தானை அமெரிக்க அதிபர் கிளிண்டன் எச்சரித்துள்ளாராமே?

! உலக நாடுகள் யாவுமே பாகிஸ்தானின் அத்துமீறலைக் கண்டனம் செய்திருப்பது நமக்குத் தெம்பூட்டும் விஷயம்.

● பி.பிரகாஷ், மதுரை-16.

? கார்கிலில் இந்திய ராணுவத்தை எதிர்த்துப் போரிடுபவர்கள் ஊடுருவல்காரர்களுமல்ல, தீவிரவாதிகளுமல்ல. அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் கூறியிருக்கிறாரே?

! அது அண்டப்புளுகு, ஆகாசப் புளுகு என்பதற்கும் பாக். ராணுவத்தின் நேரடியான பங்கேற்பு ஊடுருவலில் உள்ளது என்பதற்கும் நிறைய சான்றுகள் கிடைத்துள்ளனவே!

● சி. பூங்கோதை, சென்னை-78.

? முதலில் ராம் ஜெத்மலானி; பின் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ்; அடுத்து சரத்பவார். இவர்கள் வரிசையில் முன்னாள் நிதியமைச்சர் மன்மோகன் சிங்கும் போயஸ் கார்டன் வந்து செல்வது கண்ணியமாக



• ஆழ்ந்த அனுதாபங்கள்

• இருக்கிறார்!

உள்ளதுங்களா...?

! மற்றவர்களைக் காட்டிலும் அந்த தாடிக்கார நல்ல மனிதருக்காக அன்று நான் மிகவும் வருத்தப்பட்டேன். அரசியலில் நீடிக்க எப்படியெல்லாம் விலை கொடுக்க வேண்டியிருக்கிறது!

● ஆர். வேணுகோபால், பெரியகுளம் ☐

? மதவாதமும் வேண்டாம், ஊழலும் வேண்டாம் என்கிற நல்லெண்ணத்தில் நடுநிலை வகிக்கும் த.மா.காவை அனைத்துப் பத்திரிகைகளும் கேலியும் கிண்டலும் செய்வது முறைதானா...?

!'ஊழலோடு கைகோக்கிற சோனியா வேண்டாம்' என்று பளிச்சென சொல்ல முடியவில்லையே! அதுதான் கேலிக்குரியதாகிறது.

● வி.எஸ். கோவிந்தன், மதுரை – 1

? ஜெ எங்கேயோ சு. சுவாமியும் அங்கேதான்! கலைஞர் எங்கேயோ கல்கியும் அங்கேதான்! – பொருந்துமா?

! பொருந்தாது! 'சுயநலம் எங்கேயோ சு. சுவாமி அங்கேதான். தர்மம் எங்கேயோ கல்கி அங்கேதான்' என்பதே சரி.

• த்ரீ...

•... சியர்ஸ்!



● நா. ராஜேஷ், சென்னை – 88.

? நடிகை ரம்பா நன்றாக நடிக்கிறார் என்று நினைக்கிறீர்களா?

! நன்றாக இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

● ஜெ. மெர்சிலா, தூத்துக்குடி –2.

? இந்தியாவின் மீது அணு ஆயுதத்தைப் பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என்று பாகிஸ்தான் கூறுகிறதே?

! போக்ரன் பரிசோதனைகளின்போது, நம்மிடம் அணு ஆயுதம் இருந்தால் அண்டை நாடுகள் வாலாட்டாமல் இருக்கும் (deterrent factor) என்று நியாயப்படுத்தியது பி.ஜே.பி அரசு. அது எவ்வளவு முட்டாள்தனமான வாதம் என அப்போது சுட்டிக் காட்டினோம். இப்போது அது மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

● டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு

? வாழ்க்கையை வெறுத்து விட்டதாகச் சிலர் சொல்கிறார்களே... அப்படின்னா என்ன சார் அர்த்தம்?

! ஆந்திர ரயில் விபத்தில் மரணம் அடைந்த அமைச்சரின் மனைவி அவரைப் பின்தொடர்ந்தாரே அது ஒரு உதாரணம்.

● ஆர். ராம்மோகன், நெல்மேனி

? கழகத்தில் அன்று போர்வாள்; இன்று கழகக் கூட்டணியில் 'கத்திரிக்கோல்' – இது பரிணாம வளர்ச்சியா இல்லை பரிபூரண வீழ்ச்சியா?

! அதைத் தேர்தல் முடிவு உணர்த்தும்.

● சு. பூங்கொடி, சித்தோடு.

? கோவா தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வெற்றி எப்படி...?

! பி.ஜே.பி, முன் தடவையைப் போல் இரு மடங்கு இடங்களை வென்றுள்ளதைப் பார்க்க, காங்கிரஸின் வெற்றி கொஞ்சம் நோஞ்சானாகத் தெரிகிறது.

கீதை படிக்கச் சொல்கிறாரே கருணாநிதி?

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்

ஆர். வேணுகோபால், அமர்ஜோதி பேப்பர் ஸ்டோர், கடைவீதி, தென்கரை, பெரியகுளம் – 625 601

ஒரு தடவை, வகுப்பில் டெஸ்ட் நடத்தப்பட்டபோது, மாணவர்கள் அனைவருமே, கேள்வித்தாள் ரொம்பக் கடினமாக இருந்தது என்றும், வேண்டுமென்றே இப்படி கேள்வித் தாளைத் தயாரித்திருக்கிறார்கள் என்றும் புகார் சொன்னார்கள். அப்போதுதான் எனக்குள் ஒரு பொறி தட்டியது.

அடுத்த முறை டெஸ்ட் வருவதற்கு சில நாட்கள் முன்பு, மாணவர்களுக்கு இனிய ஆச்சரிய மூட்டும் அந்த அறிவிப்பை நான் செய்தேன். ஆமாம்! 'இந்தத் தடவை டெஸ்ட்டுக்கு, அந்தந்த பாடம் எடுக்கிற ஆசிரியைகள் கேள்வித்தாள் தயாரிக்கப் போவது இல்லை. அந்த வாய்ப்பை, மாணவர்களான உங்களுக்கே தரப் போகிறேன் என்றதும், மாணவர்களில் சிலர் முகத்தில் சந்தோஷம்! இன்னும் சிலர் முகத்தில் 'இதென்னடா புது முயற்சி?' என்பது போல இலேசான குழப்பம்.


நான் என் திட்டத்தை விளக்கினேன். "போன தடவை, வேண்டுமென்றே, ஆசிரியைகள் வெகு கடினமான கேள்விகளைக் கொண்ட கேள்வித்தாள் தயாரித்து விட்டதாகப் புகார் கூறினீர்கள் அல்லவா? இந்த முறை நீங்களே கேள்விகள் தயாரிக்கிற பணியில் ஈடுபடப் போகிறீர்கள். உங்கள் வகுப்பை ஐந்து குழுக்களாகப் பிரிப்பேன். இந்த டெஸ்ட்டுக்குரிய பாடங்களை நீங்களாகவே படித்துப் பார்த்து கேள்விகளைத் தயார் செய்ய வேண்டும். ஐந்து குழுக்களும், ஐந்து விதமான கேள்வித்தாள்களை செட் பண்ணுவீர்கள் அல்லவா? அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளைக் கொண்டு, உங்களுடைய டெஸ்ட் கேள்வித்தாளை உங்கள் டீச்சர் உருவாக்குவார். எப்படி இந்த ஐடியா?" என்றேன்.

மாணவர்கள் மத்தியில் சந்தோஷம் தெரிந்தது. புதிய முயற்சிக்குத் தயாரானார்கள். இரண்டு, மூன்று நாள் அவகாசம் எடுத்துக் கொண்டு, கேள்வித்தாளைத் தயாரித்துக் கொடுத்தனர். ஒரு குழு, தயாரிக்கும் கேள்வித்தாள் பற்றி, இன்னொரு குழுவுடன் பேசிக் கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையையும் சீரியஸாகக் கடைப் பிடித்தனர்.

ஐந்து விதமான கேள்வித்தாள்கள் ரெடி. அவற்றில் கேட்கப்பட்டிருந்த கேள்விகளிலிருந்து சிறப்பானவற்றைத் தேர்ந்தெடுத்து, டீச்சர் ஒரு கேள்வித்தாளை உருவாக்கினார். அந்த கேள்வித்தாள்தான் டெஸ்ட்டின் போது மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

டெஸ்ட் முடிந்ததும், "அனுபவம் எப்படி?" என்று கேட்டேன். "ஐயோ! போன டெஸ்ட் கேள்வித்தாளே தேவலை; இந்த டெஸ்ட் இன்னும் கஷ்டமாக இருந்தது" என்றார்கள் பெரும்பாலான மாணவர்கள்.

இது எப்படி நிகழ்ந்தது?



மாணவர்களையே கேள்விகளைத் தயார் செய்யச் சொன்னவுடன், ஒவ்வொரு குழுவைச் சேர்ந்தவர்களுக்குள்ளே போட்டா போட்டி. கேள்வித்தாள் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டவர்கள், ஒவ்வொரு குழுவிலும் இரண்டு மூன்று பேர் தான்! இவர்கள் ஆழமாய்ப் படித்து, கேள்விகளைத் தயார் பண்ணினார்கள். கேள்விகளை நேரிடையாகக் கேட்காமல், பாடத்தைப் படித்துப் புரிந்து கொண்டதன் அடிப்படையில் சிந்தித்து விடையளிக்கும்படியாக அவற்றை அமைத்தார்கள். மேலோட்டமாய்ப் படித்துக் கொண்டுபோய், நேரிடையான கேள்விகளை எதிர்பார்த்த மாணவர்கள் திணறிப் போனார்கள்.

பொதுவாகவே, நான் டீச்சர்களுக்குச் சொல்லுவதுண்டு. பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதுடன் நிறுத்திக் கொண்டு விடா

தீர்கள். அந்தப் பாடத்தில் படித்த விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை யோசிக்க வையுங்கள். கேள்வி கேளுங்கள். அவர்களாகவே பதில் கண்டு பிடிக் கட்டும். வீட்டுக்



குப் போய் பெற்றோர்களிடம் கேட்கட்டும்!

வெறுமனே பாடத்தைப் படித்த பின், அதன் பின்னால் கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கான பதில்களை போர்டில் எழுதிப் போடுவது அல்லது, புத்தகத்தில் குறித்துக் கொடுப்பது இவற்றைச் செய்யக் கூடாது என்பேன். இப்படிச் செய்தால், பதில்களை அப்படியே மனப்பாடம் செய்துக் கொண்டு, பரீட்சையில் இயந்திரத்தனமாக எழுதுவார்கள். இது ரொம்பத் தவறானது. இதுபோன்ற அணுகுமுறைக்கு நான் முதல் எதிரி.

பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் கே. வேங்கடசுப்ரமணியன் என்னிடம் இந்தக்கால பாடத்திட்டம், மாணவர்கள் பற்றி ஒரு முறை சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர் சொன்னார், "நம் ஊரில், இஞ்சினியரிங் காலேஜில், எலெக்ட்ரிகல் இஞ்சினியரிங் படித்துப் பாஸ் பண்ணியிருப்பான் ஒரு மாணவன். ஆனால், அவனுடைய வீட்டில், கரெண்ட் கட் ஆனால், ஒரு ஃபியூஸ் போட்டு, சரி பண்ணத் தெரியாது. அந்த அளவுக்கு, பிராக்டிகல் அறிவை வளர்க்காத, பாடத்திட்டம் நம்முடையது."

அதை மாற்றி அமைக்க நான் முயற்சி எடுத்து, வெற்றி கண்டிருப்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ், இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிப் பாடங்கள் தவிர, கணக்கு, அறிவியல் போன்ற பாடங்களில், மாணவர்களுக்கு இயல்பாகவே, ஓர் ஆர்வம் இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் இந்த சரித்திரம், பூகோளம் இரண்டும் இருக்கிறதே! பொதுவாக பத்தாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள் யாரைக் கேட்டாலும், 'ஐயோ! இத்துடன் ஒழிந்தது அந்த சனியன்! அது போன்ற ஒரு வறண்ட பாடம் வேறு எதுவும் இருக்க முடியாது' என்பார்கள். பத்தாம் வகுப்பு முடித்த ஒரு மாணவன் சரித்திரம், பூகோளத்தின் மீது தனக்கு இருந்த வெறுப்பின் உச்ச கட்டமாக, 'அந்த இரண்டு பாட புத்தகங்களையும் நான் நெருப்பில் போட்டு எரிக்கப் போகிறேன்' என்று சொன்னதாகக் கூட நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இதற்கு மாணவர்களை மட்டுமே குறை சொல்லக் கூடாது. சரித்திரத்தையும், பூகோளத்தையும் நாம் சுவாரசியம் ஏற்படும்படி சொல்லிக் கொடுப்பது கிடையாது. மைசூரில், பி.எட். படித்தபோது, வரலாறு, பூகோளப் பாடங்களை எப்படி சுவையாகச் சொல்லிக் கொடுப்பது என்று கற்றுக் கொடுத்தார்கள்.

வரலாறு என்பது என்ன? ஏற்கெனவே நடந்த சம்பவங்களின் பதிவுதானே? ஒரு குறிப்பிட்ட அரசர் என்னென்ன செய்தார்? அவர் அப்படிச் செய்ததற்கு என்ன பின்னணி? அவரது செயல்களின் பின் விளைவுகள் என்னென்ன? அவருக்கு ஏற்பட்ட முடிவு என்ன? என்பதையெல்லாம் கதை போலச் சொன்னால், சுவையாக இருக்குமில்லையா? கதையின் அடுத்த வடிவம் என்ன? நாடகம்தானே? அந்த சம்பவங்களையே நாடகமாக, மாணவர்கள் முன் நிறுத்தினால், அவர்கள் மனத்தில் சட்டென்று பதியுமில்லையா? படித்தது கூட

திருமதி ஒய்.ஜி.பி

நாளடைவில் மறந்து போய் விடக்கூடும். ஆனால் பார்த்தது அத்தனை சீக்கிரம் மறக்குமா?

சரித்திரப் புத்தகத்தில் உள்ள மொத்த பாடங்களையும் இதுபோல நாடகமாகச் செய்து காட்ட வேண்டும் என்பது அவசியமில்லை. அது சாத்தியமும் இல்லை. ஓரளவுக்கு இப்படியெல்லாம் செய்தாலே போதும், 'சரித்திரம் வறண்ட பாடம் இல்லை' என்கிற எண்ணம் மாணவர்களுக்கு ஏற்பட்டுப் போகும். அப்புறம் என்ன? ஆர்வம் தானாகவே ஏற்பட்டு விடுமல்லவா?

பூகோளத்தையும் இதே போல சுவாரசியமாக்க முடியும். வெறுமனே ஒரு குறிப்பிட்ட



''உங்க கதைதான் பிரசுரம் ஆயிடுச்சே! அப்புறம் ஏன் சோகமா இருக்கீங்க?''

''இந்தக் கதை இதுவரை எத்தனை பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது என்று சரியாகச் சொல்பவருக்குப் பரிசுன்னு போட்டி நடத்தப் பயன்படுத்திக்கிட்டாங்க!''

– பா. ஜெயக்குமார்

பகுதியில் என்னென்ன பயிர்கள் விளைகின்றன? என்னென்ன விதமான தொழில்கள் நடைபெறுகின்றன? என்றெல்லாம் பட்டியலிட்டுக் கொண்டே போனால், கேட்கிற மாணவர்களுக்குக் கொட்டாவிதான் வரும்.

உதாரணமாக, ஒன்று சொல்லுகிறேன். மனிதர்களுக்கு உடை எவ்வளவு முக்கியமானது என்று, மாணவர்களைக் கொண்டே சொல்ல வைக்கலாம். நீ போட்டுக் கொண்டிருக்கிறாயே, இந்தச் சட்டை, எங்கே தயாரானது தெரியுமா? அகமதாபாத் என்ற நகரில் என்று சொல்லி, இந்தியாவில் அகமதாபாத் எங்கே இருக்கிறது என்று மேப் மூலம் காட்டலாம். அடுத்து, அங்கே துணி உற்பத்தி செய்யும் மில்கள் அதிகம். அதற்குக் காரணம் அங்கே பருத்தி உற்பத்தி அதிகம். அது ஏன்? இந்தக் கேள்விக்கு, பருத்தி விளையத் தேவையான மண்வகையைப் பற்றியும், அது குஜராத் பகுதியில் இயற்கையாக அமைந்திருப்பது பற்றியும் விளக்கலாம். பருத்தி எப்படி நூலாகிறது; நூல் எப்படி துணியாகிறது? துணி எப்படி உடையாகிறது? அது எப்படி பல ஊர்களுக்கும் வந்து சேருகிறது– இப்படி விளக்கிக் கொண்டே போனால், மாணவர்கள் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள்.

இதில் கூட சரித்திரத்தை இணைக்கலாம். எப்படி? சுதந்தரம் அடைவதற்கு முன்பு, இந்திய பருத்தி, எப்படி இங்கிலாந்துக்குப் போய் துணியாகி, மறுபடியும் இந்தியருக்கே விற்பனை செய்யப்பட்டது. அந்நியத் துணிகளை பகிஷ்கரிக்க விடப்பட்ட அறைகூவல், அதற்கு மக்களிடம் கிடைத்த ஏகோபித்த வரவேற்பு, என்று பூகோளத்தைச் சொல்லித் தருகிறபோதே, இந்திய சுதந்தரப் போராட்ட சரித்திரத்தையும் மாணவர்களுக்குத் தொட்டுக் காட்டலாம்.

எதையும் சொல்லிக் கொடுக்கிற போதே, மாணவர்களுக்கு, நேரிடையாக அந்த கால கட்டத்துக்கோ, இடத்துக்கோ சென்று விட்டது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தி விட்டால் நமக்கு வெற்றிதான். டெலிவிஷனில் எத்தனையோ சானல்கள் இருந்தாலும், டிஸ்கவரி சேனல் ஏன் குழந்தைகளை மட்டுமின்றி பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது? பார்க்கிறவர்களை, அதனுடன் பயணம் செய்ய வைத்து விடுகிறது. ஒருவித ஆழமான ஈடுபாட்டை ஏற்படுத்தி விடுகிறது. நிகழ்ச்சி முடிந்த பின்னரும் கூட, குழந்தைகள் அந்த புதிய உலகிலிருந்து மீண்டு வருவதில்லை. கற்பனையில் தங்கள் பயணத்தைத் தொடருகிறார்கள். அறிவு பூர்வமான சிந்தனையைத் தூண்ட வேண்டியது ஒருபுறம் முக்கியம் என்றால், இன்னொரு பக்கம், குழந்தைகளை, கற்பனை உலகில் சஞ்சரிக்க விட வேண்டும். சிந்தனையும், கற்பனையும் சேர்ந்து வளர்ந்தால், குழந்தையின் அறிவு வளர்ச்சி அபாரமாக அமையும். அவர்களின் எதிர்காலம் மிகவும் பிரகாசமாக அமையும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

சமீப காலமாக, நல்ல ஆசிரியர்கள் கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. எங்கள் பள்ளிக் கூடத்திலேயே

இந்தப் பிரச்னை இருந்தது. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தோம். இந்தப் பள்ளிக் கூடத்தின் மீது, பள்ளிக் கூடத்தில் படிக்கிற குழந்தைகள் மீது யாருக்கு மிக அதிகமான அக்கறை இருக்கும்? இங்கு படிக்கிற மாணவர்களுடைய பெற்றோர் களுக்குத்தானே? அந்தப் பெற்றோர்களில், வேலைக்குப் போகாத குடும்பத்தலைவிகளும் கணிசமாக இருப்பார்கள். வேலைக்குப் போகாத, லேடீஸ் கிளப் நடத்திக் கொண் டிருந்த நாங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆரம்பித்ததுதானே இந்தப் பள்ளிக் கூடம்? அது போல, இப்போது வேலைக்குப் போகாமல், வீட்டில் இருக்கக் கூடிய படித்த பெண்மணிகளில் ஆர்வம் இருக்கிற, ஒரு சிலருக்காவது இந்தப் பள்ளிக் கூடத்தில் ஆசிரியையாகப் பணிபுரிகிற வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது?

இந்த எண்ணத்தைச் செயல்படுத்துவதற் கான பணிகளில் இறங்கினோம். பள்ளிக்கூட ஆசிரியையாகப் பணிபுரிய வேண்டுமானால் பி.எட். படித்திருக்க வேண்டும் என்பது கட் டாயம் என்றாலும், நர்சரி வகுப்புகள் எடுக் கிற டீச்சர்களுக்கு இந்த விதி பொருந்தாது. எனவே, நர்சரி வகுப்புகள் எடுக்க மட்டும் வேலைக்குப் போகாத குடும்பப் பெண் மணிகளைப் பயன்படுத்திக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கென்று ஒரு பயிற்சி மையம் ஆரம் பிக்கப்பட்டது. அதில், நர்சரி வகுப்புகள் எடுப்பதற்கு, அம்மாக்களுக்குப் பயிற்சி தரப் பட்டது. ஆரம்ப காலத்தில், அம்மாக்களுக்கு மாதம் இவ்வளவு என்று ஸ்டைபண்டு கொடுத்து வந்தோம். ஒரு கட்டத்தில், இதை நிறுத்திவிட்டோம். இந்தப் பயிற்சித் திட்டத் துக்கு அம்மாக்களிடையே ரொம்ப நல்ல ரெஸ்பான்ஸ். அதுவும் நர்சரி வகுப்புகள், பகல் பன்னிரண்டு அல்லது ஒரு மணியுடன் முடிந்து விடும். காலையில் குழந்தைகளையும் கணவரையும் அனுப்பிவிட்டபின், ஃப்ரீயாக இருந்த அம்மாக்கள், இந்த புதிய ஏற் பாட்டை மிக விரும்பினார்கள்.

இப்போது, வேலைக்குப் போகிற மத்திய தரக் குடும்பப் பெண்கள் அதிகரித்து விட்ட தால், பாரா டீச்சர்ஸ் என்கிற இத்தகைய நர்சரி பயிற்சி பெற ஆர்வம் காட்டும் அம்மாக்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

(அடுத்த வாரம் சொல்கிறேன்)



''எனக்குக் கல்யாணம்னு சொன்னதுக்கு நீ ஏன் ரொம்ப கவலைப்படற...''

''அடுத்தவனுக்கு ஒரு துன்பம்னா என்னால எப்போதும் தாங்கிக் கொள்ள முடியாது!''

''இன்னிக்கு சாதம் ஏதும் மிஞ்ச லைப்பா...''

''நான் அதுக்காக வரலை தாயி... வட்டிப் பணம் வசூலிக்க வந்தேன். உங்க புருஷ னைக் கொஞ்சம் வெளியே வரச் சொல் லுங்க...!''



''உலகம் உருண்டைன்னு சொல்றது ரொம்ப சரியாத்தான் போச்சு.''

''பல கட்சிகளுக்கு மாறி.. மாறி... ஆரம் பத்தில எந்தக் கட்சியில இருந்தீங்களோ அதே கட்சிக்குத் திரும்பி வந்திட்டீங்களே, அதைத் தானே சொல்ல வர்றீங்க?''

– வெ. நாகராஜ்



இருபதாவது

சே! எல்லாம் அந்தக் கடிதத்தால் வந்த வினை!

காலையில் வாக்கிங் செல்லும் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு நாற்பது ஆண்டுகளாகப் போகின்றன. இந்த நாற்பது ஆண்டுகளில் ஒருநாள் கூட ரங்கராஜன் இல்லாமல் தனியாய்க் கிளம்பியதில்லை.

பள்ளிப் படிப்பிலிருந்தே சிநேகிதர்களாயிருந்தவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது அதனை வளர்த்துக்கொண்டு, மணமான பின்னும் நண்பர்களாகவே இருந்து வேலையிலிருந்து ஓய்வு பெறும் பொழுது காய் பழுத்துக் கனியானது போல முதிர்ந்த நண்பர்களாக, நண்பர்களெல்லாம் ரங்கராஜனும் சுந்தரேசனும் போலல்லவா இருக்க வேண்டும் என காண்போர் மெச்சும் ஆப்த சிநேகிதர்களாக அல்லவா பழகி வந்தார்கள்!

புலம்பிக்கொண்டே உலாவலை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தபொழுது ஆறு நாட்களுக்கு முன் கதவிடுக்கின் வழியாக உள்ளே போடப்பட்டிருந்த அந்த கடிதத்தின் நினைவு வந்தது சுந்தரேசனுக்கு. பாழாய்ப் போன கடிதம்!

'ஓம் நமோ வேங்கடேசாய' – என்று ஆரம்பித்தது அந்தக் கடிதம்!

'இக் கடிதம் இறைவனின் உத்தரவுப்படி உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. முன்னொரு முறை திருமலைக்கு வந்த ஏழுமலையானின் பரமபக்தர் ஒருவருக்கு ஏழுமலையான் நாக வடிவில் காட்சி தந்து இச்செய்தியை இருபது பக்தர்களுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்குமாறு கூறி அருள் பாலித்தார். அவருக்கு ஏரானமான செல்வத்தையும் வழங்கினார். அதுமட்டுமல்லாது அந்தக் கடிதத்தைப் பெறும் ஒவ்வொரு பக்தரும் இருபது நகல்களை மற்ற நபர்களுக்கு அனுப்பி வைத்தால் அவர்கள் பெரும் சம்பத்தையடைவார்கள் என்றும், மாறாக இக்கடிதத்தை அலட்சியப்படுத்துபவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பெரும் நஷ்டம் அடைவார்கள் எனவும் கூறி மறைந்தார். இக்கடிதம் கிடைத்த இருபத்து நான்கு மணி நேரங்களுக்குள் இக்கடிதமும் அதன் நகல்களும் உங்களை விட்டு வெளியேற வேண்டும். இல்லையேல் கடும் விளைவுகள் ஏற்படும். இக்கடிதம் கண்டதும் இருபது பிரதிகள் அனுப்பிய பக்தர் ஒருவருக்கு லாட்டரியில் பத்து லட்ச ரூபாய் பரிசு விழுந்தது. அலட்சியப்படுத்திய நபர் ஒருவர் தன் மனைவி மக்களோடு மறுநாளே ஒரு லாரி விபத்தில் காலமானார்' – என்று முடிக்கப்பட்டிருந்த அந்த கடிதத்தைப் படித்ததும் லேசாய் கோபம் பிறந்தது சுந்தரேசனுக்குள்.

பணங்கொடுத்து ஆள் சேர்க்கும் அரசியல்வாதிகள் போல இறைவன் கடிதம் மூலம் புகழ் சேர்க்க நினைப்பாரா என்ன? எந்த முட்டாள் இப்படியொரு கடிதத்தை உருவாக்கியது?!

சம்பந்தா சம்பந்தமில்லாமல் இரண்டு நாட்களுக்கு முன்பு வந்திருந்த அவருடைய இளைய மகளின் கடிதத்திலிருந்து சில வரிகள் ஞாபகத்திற்கு வந்தன.

'இது ஒன்பதாவது மாசம்ப்பா... டாக்டர் இது கொஞ்சம் காம்ப்ளிகேடட் கேஸ்னு தான் சொல்றா... சிசேரியன் பண்ணித்தான் எடுக்க வேண்டியிருக்குமாம். எனக்கு ரொம்ப பயமாயிருக்குப்பா. என் பக்கத்திலே இருந்து பார்த்துக்க அம்மா உயிரோட இல்லையேன்னு, அம்மாவை ரொம்ப மிஸ் பண்றேன். அந்த ஏழுமலையான் கிருபையிலே எல்லாம் நல்லபடியா முடியணும்னு வேண்டிகிட்டிருக்கேன். அக்காகிட்டேர்ந்தும் லெட்டர் வந்திருந்தது. மாமாவோட ஆபீஸ்லே அகௌண்ட்ஸ்லே நிறைய பிராப்ளமாம். கம்யூட்டர்லே ஃபீட் பண்ண அமௌண்ட்டுக்கும் கையிருப்புக்கும் நிறைய வித்தியாசம் வருதாம். இது எப்படி நடந்துச்சின்னே ஆபீஸ்லே யாருக்கும் புரியலையாம். செக்கிங் ஏதாவது வந்தா அத்தனை பேரு வேலைக்கும் உலை வெச்சிடுவாங்களாம். எந்த தொந்தரவும் இல்லாம அந்த பண விவகாரம் தீர்ந்தா இந்தியாவுக்கு வந்து மாமாவுக்கு திருப்பதியிலே மொட்டை போடறதா வேண்டிக்கிட்டிருக்காளாம் அக்கா.'

'இக் கடிதத்தை அலட்சியப்படுத்துபவர்களும் அவர்களின் குடும்பத்தினரும்



நகல்

பெரும் நஷ்டம் அடைவார்கள்'

திடீரென சுந்தரேசனை ஒரு பெருங் குழப்பம் சூழ்ந்தது. ஒருவேளை இந்த கடிதத்தை நகலெழுதி அனுப்பாவிட்டால் நிஜமாகவே ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்து விடுமோ?

கிருஷ்ணகிரி வசந்தன்

வீட்டைப் பூட்டிக் கொண்டு தபால் அலுவலகத்திற்குச் சென்று தபால் தலைகளும் ஸ்டேஷனரி மார்ட்டில் காகிதத் தாள்களும் கடித உறைகளும் வாங்கி வந்தார் சுந்தரேசன். கதவை உட்புறம் தாழிட்டு ஹாலில் உட்கார்ந்துகொண்டு அந்தக் கடிதத்தை நகலெடுக்க ஆரம்பித்தார். யார் யாருக்குக் கடித நகல்களை அனுப்புவது என்ற கேள்வி பிறந்ததும் முதலில் நினைவுக்கு வந்தது ரங்கராஜன்தான். சுந்தரேசனுக்கு எல்லாமே ரங்கராஜன்தானே! ஆனால் ரங்கராஜனுக்கா இப்படியொரு கடிதத்தை அனுப்புவது என்று அவர் மனது அவரையே எதிர்க் கேள்வி கேட்டது.

ஒருவேளை ரங்கராஜனுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியது தான்தான் என்பது தெரிந்து விட்டால்!

ரங்கராஜனை மனதிலிருந்து விலக்கி, தனக்குத் தெரிந்த மற்ற நபர்களின் விலாசங்களை யோசித்த பொழுது, அடித்து விரட்டினாலும் தாயையே சுற்றி வரும் சிறு குழந்தையின் வாத்ஸல்யம் போல ரங்கராஜனின் முகவரியே மீண்டும் மீண்டும் மனதில் வந்து நிற்கும் அதிசயம் கண்டு வியந்தார் சுந்தரேசன். வேறு வழியின்றி ரங்கராஜனுக்கும் ஒரு கடிதம் அனுப்புவது என்று முடிவு செய்தார்.

ரங்கராஜன் தன் கையெழுத்தைக் கண்டு பிடித்து விட்டால் என்ன செய்வது? தனக்கு வந்தக் கடிதத்தையே ரங்கராஜனுக்கு அனுப்பி விடுவது என்று முடிவு செய்தார். அதிலிருப்பது தன்னுடைய கையெழுத்தல்லவே!

நீண்ட நேரம் யோசித்து ரங்கராஜன் உட்பட இருபது பேரின் விலாசப் பட்டியலை தயார் செய்தார் சுந்தரேசன். அந்த விலாசங்களை யோசிப்பதற்குள் அவர் பட்ட பாட்டை சொல்லி மாளாது. அவர் உலாவச் செல்லும்போது தினமும் பார்க்கும் சில பிரசித்தி பெற்ற



"வெளியே நிற்கிற பிச்சைக்காரன் வாழ்ந்து கெட்டவன் போலங்க!"

"எப்படி சொல்றே கமலா?"

"லைட் டிபன் ஏதாச்சும் இருக்கா தாயீ'னு கேட்கிறானே!"

– சீத்தா தம்பி

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

கடைகள், அவர் வழக்கமாகச் செல்லும் முடிதிருத்தும் இடம், உணவு விடுதி என அப்படி இப்படிப் புரட்டி இருபது விலாசங்களைத் தயார் செய்து, கடித உறைகளின் மேல் எழுதி பத்தொன்பது நகல்களும் இருபதாவது நகலாக தனக்கு வந்த கடிதத்தையும் சேர்த்து இருபது கடிதங்களை தபால் பெட்டியில் போட்டு விட்டு வந்தார் சுந்தரேசன்.

'அந்த' காரியத்தை முடித்துவிட்டு வீடு திரும்பிய சுந்தரேசன் தன்னுடைய பெண்களுக்கு இனி ஏதாவது நேர்ந்தால்கூட அதற்கு தான் காரணமாக இருக்கப் போவதில்லை என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார். தன்னுடைய பெண்களுக்கு எதுவும் தீங்கு நேரக் கூடாது என்பதைவிட அப்படித் தீங்கு நேர்ந்தாலும் அதற்கு தான் காரணமாயிருந்து விடக் கூடாது என்ற தப்பித்துக்கொள்ளும் உணர்ச்சிதானே அவர் அந்தக் கடிதங்களை அனுப்பியதற்கே காரணம்!

அன்று இரவு முழுவதும் தூக்கம் வராமல் தவித்தார் சுந்தரேசன். மறுநாள் எழுந்து ரங்கராஜனைக் காணச் சென்றபொழுது அவரைக் காண முடியவில்லை. அன்று முதல் இன்றுவரை, 'அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் யாரையும் பார்க்க விரும்பவில்லை' என்ற செய்தியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார். தன்னுடைய இனிய நட்புக்கு யமனாய் வந்து சேர்ந்திருப்பது அந்தக் கடிதமாயிருக்குமோ என்று அன்றே அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

'டேய்... பிரபஞ்சத்தைப் பத்தியும் அதை இயக்கற ஈடு இணை இல்லாத ஆற்றலைப் பற்றியும் நாம எவ்ளோ பேசியிருப்போம்? ஒரு மொட்டைக் கடிதாசியைப் போட்டு அந்த கருணை வடிவோட பெருமையைக் கெடுத்துட்டியேடா... கடவுள்னா உலகைக் காக்கும் பரம்பொருள்னு அர்த்தம்டா. எந்தக் கடவுள்டா நீ இருவது லெட்டர் எழுதிப் போடலைன்னா உன்னை நாசமாக்கிடுவேன்னு மிரட்டும்? ச்சீ... முட்டாளே... நீயெல்லாம் ஒரு மனுஷனா...' என்று ரங்கராஜன் திட்டுவதுபோல சுந்தரேசனுக்குக் கனவுகூட வந்து விட்டது.

ஒரு வாரமாய்த் தவித்துக் கொண்டிருந்த சுந்தரேசன் கடைசியாய் ஒரு முடிவுக்கு வந்தார். தன்னுடைய நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதி அந்தக் கடிதம் மூலம் 'பழைய' கடிதத்துக்கு மன்னிப்பு கேட்பதுதான் அந்த முடிவு. மன்னிப்புக் கேட்பதன் மூலம் நண்பனின் கோபம் தணிந்து விடும் என்று நம்பினார் சுந்தரேசன். கடிதத்தில் எழுத வேண்டிய வரிகளை சில நிமிஷங்கள் யோசித்து விட்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து எழுத ஆரம்பித்தார்.

'நண்பா, உன்னுடைய கோபத்திற்கு எனக்குக் காரணம் தெரியும். உனக்கு அப்படியொரு கடிதத்தை அனுப்பியது பெரும் தவறுதான். என்னை மன்னித்த விடு...' என்று துவங்கிய சுந்தரேசனின் கடிதம் மேலும் வளர்ந்து கொண்டிருந்த அதேவேளையில், அவருடைய நண்பர் ரங்கராஜனும் அவருடைய வீட்டில் உட்கார்ந்துகொண்டு யோசித்து யோசித்து ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

'அன்பு நண்பன் சுந்தரேசனுக்கு...' என்று ஆரம்பித்தது அந்தக் கடிதம்.

'நான்தான் அந்தக் கடிதத்தை உனக்கு அனுப்பியவன் என்பதை நீ தெரிந்து கொண்டு விட்டாய் என்று நான் எழுதிய கடிதத்தை நீ எனக்கே திருப்பி அனுப்பியதிலிருந்து நான் புரிந்துக்கொண்டேன். இறைவன் குறுகிய மனப்பான்மை கொண்டவன் என்று பிரசாரம் செய்வது போலவும் படிப்பவரை பீதியடையச் செய்வதாகவும் அமைந்திருக்கும் அப்படிப்பட்ட கடிதத்தை நான் அனுப்பியதே தவறுதான். அதனால்தான் நீ என்னைத் தேடி வரும் பொழுது என்ன கேள்வி கேட்பாயோ என்று பயந்து உன்னைக் காண்பதையே தவிர்த்துக் கொண்டிருந்தேன்...' ⬤

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வது படகு திசைமாறிப் போய்விடும். காப்பாற்ற வரும் கப்பலால் கூட காப்பாற்ற முடியாத அபாயம் ஏற்பட்டு விடலாம். அதனால் அங்கேயே சுற்றிச் சுற்றி வர வேண்டியிருந்தது.

அங்கிருந்து பார்க்கும்போது எரியும் கப்பலை மூழ்கடிக்கும் முயற்சியில் கப்பல் ஊழியர்கள் தெரிந்தனர். 'வெடித்துச் சிதறினால் போச்சே!' அதற்காகத் தனியாக ஒரு 'டக் போட்.' அதில் பிரத்யேகமாக பிரும்மாண்ட 'பம்பிங்' ஸிஸ்டம். கடல் நீரை கப்பலுக்குள் ஏற்றும் முயற்சியில் அவர்கள்.

என் மனைவிக்கு அடிக்கடி மயக்கம் தெளிவிக்க வேண்டியிருந்தது. அழுகையைக் குறைத்தாலும் மகன் அனீஸின் வெளிறிப் போன முகத்துக்கும் ஆறுதல் அளிக்க வேண்டியிருந்தது. படகில் ஒரே ஒரு 'மினரல் வாட்டர்' கேன். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆங்கிலேயர் ஒருவர் கையோடு எடுத்து வந்திருந்தார். மற்றவர்களின் உடைமைகள் எல்லாமே கப்பலோடு. 'அந்த மினரல் வாட்டர் தீருவதற்குள் ஏதாவது கப்பல் வர வேண்டுமே. காப்பாற்ற வேண்டுமே!' இதுவே படகில் இருந்த முப்பத்தியெட்டுப் பேரின் பிரார்த்தனையாயிருந்தது.

ஒரு வழியாக இரவு பன்னிரண்டு முப்பதுக்கு மேல்தான் உறுதியான வெளிச்சம் கிடைத்தது. ஒயர்லெஸ்ஸில் கேப்டன் தகவல் கொடுத்ததன் பேரில் வருகை புரிந்த ரோமானிய சரக்குக் கப்பல் என்.வி.வீனஸ். அதைப் பார்த்ததும் நாங்கள் அடைந்த மகிழ்ச்சி! ஒவ்வொரு படகும் அக்கப்பலை நெருங்கி, ஒட்டு மொத்த பயணிகளும் ஏறிய போது, அக்கப்பல் கேப்டனின் கையைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு பயணியும் ஆனந்தக் கண்ணீர் உகுத்த காட்சி... அழுத அழுகை... கட்டிப் பிடித்துக் கொண்டு சொரிந்த ஆனந்தம்.... அப்பப்பா! சொல்லி மாளாது.

''தலைவரே நீங்க தான் எப்படியாவது சிபாரிசு பண்ணி எம்மகனுக்கு எல்.கே.ஜி.சீட் வாங்கித்தரணும்.''

''அதெல்லாம் ரொம்ப கஷ்டம். வேணுமுன்னா வர்ற எலெக்ஷன்ல உனக்கு ஒரு எம்.பி. சீட் தர்றேன்!''

— பூனாம்பாளையம் ஆர்.பி.ஜெயச்சந்திரன்



அதே சமயம் நாங்கள் பயணம் செய்து வந்த 'சன்விஸ்டா' கப்பல் தூரத்தில் எரிந்து முழுகிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்தபோது, உள்ளூர ஏற்பட்ட சோகத்தையும் சொல்லி முடியாது. டைடானிக்கிற்கும், சன் விஸ்டாவிற்கும் ஒரே வித்தியாசம். இதில் அனைவருமே காப்பாற்றப் பட்டு விட்டனர்!

கலகலப்புடன் ஏராள லக்கேஜ்களையும், சூட்கேஸ்களையும் சுமந்து சென்ற நாங்கள் 'உயிர் காக்கும்' ஒரே உடுப்புடன் 'பினாங்கு' துறைமுகத்தில் காலை ஆறு மணிக்கு வந்து இறங்கியபோது, 'சன்விஸ்டா' கப்பல் நிறுவனமே அணி திரண்டு வந்து "சாரி" சொன்னது. கைச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் 800 சிங்கப்பூர் டாலர்கள் கொடுத்தனர். பல்வேறு நாட்டு தூதரக அதிகாரிகளும் தங்கள் நாட்டுப் பயணிகளைப் பார்த்து ஆறுதல் சொல்லவும் உதவி செய்யவும் துறைமுகத்திற்கே வந்து விட்டனர். ஆனால் இந்தியர்களை ஆறுதல்படுத்த மட்டும் எந்த ஓர் இந்தியத் தூதரக அதிகாரியும் வரவில்லை!

— கா. சு. வேலாயுதன்

''என்னங்க நீங்க போட்டுட்டு இருக்கற சட்டையை சட்டுன்னு கழட்டிக் கொடுங்களேன்!''

''ஏன்? எதுக்காம்?''

''பாத்திரக்காரனிடம் துணிமணி போட்டு ஒரு குடம் வாங்க ஒரே ஒரு சட்டைதான் குறையுது.''

— பாக



KALKI SHOPPING PAGE

விஐபி ப்ளானெட்

ஆசியாவின் நெ 1, லக்கேஜ் தயாரிப்பு நிறுவனமான VIP புதிதாக ''ப்ளானெட்'' என்ற சூட்கேஸை அறிமுகப் படுத்துகிறது. உங்களுக்குத் தேவையான எல்லா பாதுகாப்பு அம்சங்களும் இதில் அமைந்துள்ளன. பூட்டை எளிதாக உடைக்கும் திருடர்களிடமிருந்து பாதுகாப்பு தருகிறது. உயர்ந்த உடைகள் அழுக்கு ஆகாமல் இருக்கவும், அதிகப் பொருள்களை வைப்பதற்கும் வசதியாக உள்ளது. பர்ஸனாலிட்டிக்கு ஏற்ற ஸ்டைலில் நேர்த்தியான அமைப்புடன் தயாரிக்கப்படுகிறது.



VIP ப்ளானெட்டின் சிறப்பம்சம் வெள்ளி போன்ற நிறத்தில் பளபளக்கும் பூட்டுகள். இவை இதனுடைய தோற்றத்தை மேன்மையாக்குகின்றன. சென்டர் பூட்டு கூடுதலான பாதுகாப்பைத் தருகிறது. மேலும் சரியான லைட் மேல் பக்கம் இருந்தால் மட்டுமே திறக்க முடியும். இதை சுலபமாக தூக்கிச் செல்வதற்கு ஒரு வசதியான

தமிழகத்தில் பாசுமதி அரிசி

கோதுமை விளைச்சலில் முதல் இடத்தில் இருக்கும் பஞ்சாப் மாநிலத்தில் 1976-ஆம் ஆண்டு Satnam Overseas நிறுவனம் Late, Shri Tirath Ram Aroraவால் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் Kohinoor Basmati Rice உற்பத்தியில் இந்தியாவில் முதல் இடத்தைப் பெறுகிறது. பஞ்சாப், ஹரியானா, டில்லி போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் உள்ளன. இந் நிறுவனம் தயாரிக்கும் அரிசி சுமார் 7.3mm நீளம் உடையதாகவும் கூர்மையாகவும் இருக்கும். இந்த அரிசியின் சிறப்பம்சம் என்னவென்றால் உற்பத்தி செய்த நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு பாதுகாக்கப்பட்டு பழம் அரிசியாக விற்பனையாகிறது. இது குறைந்த கொழுப்புச் சத்தைக் கொண்டதாகவும், அதே நேரத்தில் மிக எளிதாக செரிக்கக்கூடியதாகவும், உயர்ந்த நறுமணத்துடன் விளங்குகிறது. இதன் விலை ஒரு கிலோ ரூ. 75/– மட்டுமே!

இந்தியாவில் வசிக்கும் நடுத்தர மக்களுக்காக தற்போது "Trophy Brand" என்ற பாசுமதி அரிசியை உற்பத்தி செய்கிறது. இந்த அரிசியின் விலை ஒரு கிலோ ரூ. 45/– இந் நிறுவனத்தின் குறிக்கோள் ''உயர்ரக அரிசி நியாய விலையில்''

கைப்பிடி பொறுத்தப்பட்டுள்ளது.

இதில் மற்றுமொரு சிறப்பம்சம் என்னவென்றால் வசதியுடன் பாக் செய்ய ஃப்ளெக்ஸிபிள் டிவைடர் ஃப்ளாப் பொருத்தப்பட்டுள்ளது. இதில் எந்தப் பொருட்களை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். ஈரமுள்ள துணிகள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் போன்றவை உடைகளில் பட்டு சேதம் விளைவிப்பதைத் தடுக்க துவாரங்கள் இல்லாத 'டிவைடர் ப்ளாப்பில் பாக்கெட்' பொருத்தப்பட்டுள்ளது.

இந்தப் பெட்டி மூன்று வகை வண்ணங்களில் மிகவும் கவர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்குக் கொடுக்கும் பணம் நமது பொருள்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம்.

இதன் விலை : சைஸ் *500*க்கு ரூ. *1215/-* சைஸ் *600*க்கு ரூ. *1395/-* மதிப்புமிக்க நம் பொருட்களின் பாதுகாப்புக்கு இம் முதலீடு மிகக் குறைவே.

VIP INDUSTRIES LTD
DGP HOUSE, 88C OLD
PRABHADEVI ROAD,
PRABHADEVI,
MUMBAI - 400 025

என்பதாகும். இதனை குஜராத், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் தன்னுடைய விற்பனையில் உறுதி செய்திருக்கிறது. இந் நிறுவனம் இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் விற்பனையை சிறப்பாகச் செய்கிறது.



இந்திய அரசாங்கத்தின் வர்த்தக இலாகாவால் வழங்கப்படும் Apeda Award ஐ. (Agricultural & Processed Food Export Development) இந் நிறுவனம் தொடர்ந்து எட்டு முறை பெற்றுள்ளது. இந் நிறுவனம் ISO 9002 சான்றிதழையும் பெற்றுள்ளது. தரம் என்பதற்கு இன்னொரு பெயர் சொல்ல வேண்டுமென்றால் தயங்காமல் இப்படிச் சொல்லலாம் : கோஹினூர், ட்ராபி.

SATNAM OVERSEAS LIMITED
201, Vipps Centre,
2, Community Complex,
Masjid Moth Greater Kailash - II,
New Delhi - 110 048.

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கிருஷ்ணனை அழைக்காமல் துரியோதனாதிகள் யக்ஞம் நடத்தினார்கள் என்று சொன்னேன். யக்ஞமெல்லாம் முடிந்து அளவளாவி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு பேசிக் கொண்டிருக்கிறபோது கிருஷ்ணனுடைய பிரஸ்தாபம் வந்தது. அழகாக நிர்மாணம் பண்ணியிருக்கிறான் துவாரகா நகரத்தை. அந்த சமுத்திரத்தின் மத்தியிலே அந்த ஊர் இருக்கிற அழகைச் சொல்லி முடியாது. அந்த இடத்திலே வாசுதேவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அரிய பெரிய காரியங்களெல்லாம் பண்ணிக் கொண்டிருக்கிறான். அவனுடைய அனுக்கிரஹத்தைப் பெற வேண்டும் என்று எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருமாகத் திர்மானம் பண்ணி, கிருஷ்ணனைப் போய்ப் பார்த்து அவனுடைய அனுக்கிரஹத்தைப் பெற்று வருவோம் என்று போகிறார்கள்– துரியோதனாதிகள், அந்த யக்ஞத்துக்கு வந்தவர்கள், எல்லோருமே ஒரு பர்வதம்–அந்தப் பர்வத தாழ்வறையிலே வந்து இருந்து கொண்டு, ஒரு தூதுவனை அனுப்பி, 'அங்கு போய் கிருஷ்ணன் வாசு தேவனை நாங்களெல்லாம் பார்க்க விரும்புகிறோம் என்று சொல்லிவா' என்றார்கள்.

அங்கேயிருந்து தூதுவன் போனான். வாசுதேவனிடத்திலே சொன்னபொழுது, பகவானும் மூத்த நம்பி என்று சொல்லக் கூடிய பலராமனையும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு அந்த பர்வதத்துக் கிட்டே வந்தான். எல்லோருமே வாசுதேவனுடன் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

நாரத மகரிஷி; மகா ஞானி! வாக் படைத்தவர்களுக்குள்ளேயே சிறந்தவர் அவர்...

நாரத சப்தத்துக்கே என்ன பொருள் என்றால் பிரும்ம ஞானம் என்று பொருள். பிரும்ம ஞானத்தை எல்லோருக்கும் வாரிக் கொடுப்பவர்–அல்ப விஷயமே அவருடைய வாக்கிலே வராது. த்ரிலோக சஞ்சாரி. அவர் பண்ணுகிற கலகமெல்லாம் சுபமாக முடியும். பகவான் அப்படி அவரை உபயோகப் படுத்திக் கொண்டார் தன்னுடைய லீலைக்கு.

அந்த நாரத மஹரிஷி அங்கே வந்தார். வந்த வாசுதேவனைப் பார்த்து – எல்லோருக்கும் நடுவிலே உட்கார்ந்திருந்தான்– அவனைப் பார்த்து ஸ்தோத்திரம் பண்ணுகிறார்.

"ஹே அச்சுதா! வாசுதேவா! விஷ்ணு! உன்னைக் காட்டிலும் ஆச்சர்யமான விஷயம் ஒன்றிருக்கிறதா....? உன்னைக் காட்டிலும் தர்மாத்மா உண்டா...? உன்னைக் காட்டிலும் தன்யாத்மா வேறொருத்தர் இல்லை; ஹே விஷ்ணு!" என்று எதிரேயிருக்கிற கிருஷ்ணனை அழைக்கிறார்.

ரிஷியல்லவா நாரதர்...? அதனால் விஷ்ணுவாக எங்கும் வியாபித்திருக்கும்படியான அவனை பரமாத்மாவாகப் பார்க்கிறார். எதிரேயிருக்கிற கிருஷ்ணனை 'ஹே விஷ்ணு!' என்று அழைக்கிறார்.

"இந்த இடத்திலே ஒரு வடிவோடு எல்லோருடைய திருஷ்டி சித்தத்தையும் அபகரிக்கும்படியான திவ்ய மங்கள ரூபத்திலே உன்னை நான் சேவிக்கிறேனே" என்று சேவிக்கிறார்.

"நீயல்லவோ ஆச்சர்யமானவன்;

21

நீயல்லவோ தன்யாத்மா!"

அங்கு பரமாத்மா பதில் சொல்கிறான்:

"நான் தனி ஆச்சர்யம் அல்ல; நான் தனியாக தன்யாத்மா அல்ல; தக்ஷிணையுடன் கூடியவன்" என்கிறான்!

தக்ஷிணையுடன் என்றவுடனே எல்லோருக்கும் ஒரே புதிர் போல இருக்கிறது.

ஆனால் நாரதருக்கு ரொம்ப சந்தோஷம் ஏற்பட்டுப் போயிற்று.

"என் சந்தேகம் நீங்கிற்று. நான் சந்திருப்தி அடைந்தேன் நீ சொன்ன பதிலிலே... இப்போதே போகிறேன். விடையும் கொண் டேன்" என்று கிளம்பிவிட்டார்!

'பவிஷ்யாமி யதாகதம்' என்று எப்படி வந்தேனோ அப்படித் திரும்பிப் போகிறேன்' என்று பகவானை விழுந்து சேவித்துவிட்டு அந்த கோஷ்டியிலிருந்தே கிளம்பிவிட்டார் நாரதர்.

அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் ஒன்றுமே புரியவில்லை!

அவர் என்ன கேட்டார்? இவர் என்ன சொன்னார்? 'தக்ஷி ணையுடன்' என்றால் என்ன... அவர் அப்படிச் சொன்னதும் நாரதர் திரும்பிப் போகிறாரே...?'

பகவானைக் கேட்டால் "அவரையே (நாரதரையே) கேளுங் கள். அவரே நன்றாகச் சொல்லுவார். சொல்வதிலே என் னைவிட நல்ல கெட்டிக்காரர்" என்றான் பகவான்.

பாருங்கள், பகவானுக்கு எவ்வளவு விசாலமான இதயம்? இந்த நாரதரைக் கொண்டாடுகிறான்!

பகவானைக் காட்டிலும் அழகாகப் பேசக்கூடியவர் ஒருத்தர் இருக்கிறாரா? இருந்தாலும் நாரதரைக் கொண்டாடுகிறான். 'அவர் நல்ல வாக்மி. அவர் வாக்கிலே வந்தால் அழகாயிருக்கும்; அவர் சொன்னால் நன்றாயிருக்கும் அவரிடம் கேளுங்கள். அவர் சொல்லுவார்...' என்கிறான்.

இவர்களும் நாரதரிடம் கேட்டார்கள். உடனே நாரதர் அந்த இடத்திலே பகவானை தியானம் பண்ணிக் கொண்டு தான் சந்திருப்தி அடைந்த விஷயத்தை அங்கே எடுத்துச் சொன்னார்:

ஒரு சமயம் இவர் கங்கையிலே ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்தார். ஒரு பெரிய ஆமை–பிரும்மாண்டமான ஆமை அவ ரெதிரிலே வந்தது.

'பகவத் கீதையிலே ஒரு பதத்தைத் தெரிந்து கொண்டாலும் போதும் அது நமக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும்;





கங்கையிலே ஒரு ஆசமனம் பண்ணினாலும் போதும். அது நமக்குச் சுத்தியை உண்டு பண்ணும்' என்கிறார் ஆதி சங்கர பகவத் பாதாள்.

கங்கா என்று அந்த சப்தத்தை உச்சரித்தாலே க்ஷேமத்தை உண்டு பண்ணுமாம். நாம் கிருஹத்திலே குளிக்கிறோம். ஒரு பக்கெட் ஜலத்திலே நித்யம் குளித்துக் கொண்டிருக்கிறோம்- மட்டபள்ளிக்குப் போனால் நன்றாகக் குளிக்கலாம். ஆனந்தமாக கிருஷ்ணா நதி பிரவாகம்! படிந்து குடைந்து நீராடலாம், பகவானை சேவிப்பதற்கு முன்னே!

அந்த மாதிரி ஓடுகிற நதியிலே ஸ்நானம் பண்ணினால் விசேஷம் என்கிறது சாஸ்திரம். அதற்கு நமக்கு வசதியில்லை. ஆனால் ஜலத்தை எடுத்து வைத்துக் கொண்டு குளித்தாலும் நீ மனத்தால் நினைத்துக் கொள்ளேன்–

கங்கேச யமுனே சைவ
கோதாவரி சரஸ்வதி
நர்மதே சிந்து காவேரி
ஜலேஸ்மின் சன்னிதிம் குரு.

– இந்த ஜலத்திலே இப்பேர்ப்பட்ட புண்ணிய நதிகளெல்லாம் வந்து இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டால் என்ன தோஷம்?

ஜலத்தினிடத்திலே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பரிகாசம் பண்ணக் கூடாது. வாய் கொப்பளித்து ஜலத்திலேயே உமிழக் கூடாது. ஜலத்தை எடுத்து வாயிலே சேர்த்துக் கொண்டு வெளியிலே உமிழ வேண்டுமேயொழிய ஜலத்திலே உமிழக் கூடாது.

காரி கோழையெல்லாம் ஜலத்திலே உமிழக் கூடாது; அசுத்தங்கள் செய்யக் கூடாது. அப்படியெல்லாம் யார் செய்கிறார்களோ அவர் அடுத்த ஜன்மத்திலே பட்டுப் போன மரமாகப் பிறப்பார்கள் என்று சாஸ்திரமானது விதிக்கிறது!

அதே மாதிரி அர்த்தஜாமத்திலே வந்து தாம்புக் கயிறைப் போட்டு, தோண்டியைக் கட்டி கிணற்றிலேயிருந்து தடதடவென்று ஜலத்தைத் தூக்கக் கூடாது.

ஏனென்றால் அந்த ராத்திரியிலே ஜல தேவதைகளெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அகாலத்திலே போய் ஜல தேவதைகளை எழுப்பக் கூடாது.

அப்படி எழுப்ப வேண்டுமானால், ரொம்ப அவசரமானால் ஒரு மந்திரமிருக்கிறது – அதை ஜபித்து ஜலத்தை சேந்த வேண்டும். இல்லையானால் வாயை மூடிக் கொண்டு படுத்து விட வேண்டும்.

கால் அலம்ப வேண்டுமானால் கூட ஜலத்தை எடுத்து காலிலே நேராகக் கொட்டிக் கொள்ளக் கூடாது. ஒரு காலோடு இன்னொரு காலை வைத்துப் பரபரவென்று தேய்க்கக் கூடாது.

அப்படித் தேய்த்தால் அந்த வீட்டை விட்டு லக்ஷ்மி புறப்பட்டுப் போய்விடுவாள். அவளுக்குப் பிடிக்காத காரியம் அது. ஆகையினாலே காலுடன் காலைத் தேய்க்கக் கூடாது. ரொம்ப அனாசாரம்.

ஜலத்தை காலிலே நேராய்க் கொட்டுவது இன்னும் தப்பு. ஏனென்றால் ஜல தேவதை வருணன். அவனை நேரே காலில் சேர்த்துக் கொள்ளக் கூடாது. கையிலே ஜலத்தை வாங்கி கையாலேதான் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல் வஸ்திரமில்லாமல் ஸ்நானம் பண்ணக் கூடாது...


இப்படியெல்லாம் நித்யம் நாம் பண்ணக் கூடிய ஆசார அனுஷ்டானங்கள் ரொம்ப முக்கியமானவை.

ஐந்துவிதமாக ஒரு நாளைப் பிரித்துக் கொண்டு அனுஷ்டானம் பண்ண வேண்டும். அனுஷ்டானமில்லாமல் ஞானம்

அருள்வாக்கு

"இதைத் தா, அதைத் தா" என்று நாம் பிரார்த்திக்க வேண்டியதே இல்லைதான். நம் யோக்கியதைக்கு என்ன தர வேண்டும் என்று அம்பாளுக்கே தெரியும். இருந்தாலும் நடைமுறையில் இப்படி விவேகத்தோடு இருக்க முடிய மாட்டேன் என்கிறது. "இது வேண்டும், அது வேண்டும்" என்பதற்காகத்தான் பிரார்த்தனை செய்கிறோம்.

யோசித்துப் பார்த்தால் இதை அடியோடு தப்பு என்று சொல்ல முடியவில்லை. கீதையில் பகவான் பக்தர்களை நாலு தினுசாகப் பிரித்துச் சொல்கிறார். அதிலே மோக்ஷத்தை விரும்பி உபாசிக்கிற சாதகன், அந்த மோக்ஷ லட்சியத்தையே பிடித்து விட்ட ஞானி ஆகிற இரு சாராரைச் சொன்னதோடு பகவான் நின்றுவிடவில்லை. நோய் நொடி முதலான துன்பங்கள் நீங்குவதற்காகப் பிரார்த்திக்கிறவன், பொருளை வேண்டிப் பிரார்த்தனை பண்ணுகிறவன் ஆகிய இரு சாராரைக் கூடச்



சேர்த்துக் கொள்கிறார். இம் மாதிரி லௌகிக சௌக்கியத்துக்காக வழிபடுகிறவர்கள் கூடத் தன்னை பஜிப்பதாக பகவான் ஒப்புக் கொள்கிறார். பகவானே ஒப்புக் கொண்ட விஷயத்தை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை.

ஆனால் கீதா சாஸ்திரம் முதலிய எந்த ஞான நூலாகட்டும், சமய கிரந்தமாகட்டும், இக லோக சௌக்கியங்களைத் தள்ளிவிட்டு சாசுவதமான பேரின்பத்தைத்தான் நாட வேண்டும் என்பதை லட்சியமாக வலியுறுத்துகின்றன. அப்படியானால் பகவானே முரண்படப் பேசுகிறாரா? அப்படி அர்த்தமில்லை. லௌகிக காரியங்களை எடுத்த எடுப்பில் யாராலும் விட்டுவிட முடிகிறதில்லை. ஆனாலும் இந்த நிலையில் இருக்கிறபோது கூட, 'எல்லாம் நம்மாலேயே முடியும், நாம் நினைத்தை எல்லாம் நாமே ராஜாவாக நடத்திக் கொள்ள முடியும்' என்று நினைத்து விடாமல், 'நமக்கு மேலே ஒரு மகா சக்தி இருக்கிறது. அதற்குச் சக்தி இருப்பதோடு கருணையும் இருக்கிறது: நாம் தழைந்து வேண்டினால் அது அனுக்கிரகம் பண்ணும்' என்கிற நம்பிக்கை இருந்தால் அது விசேஷம்தானே? பணம் வேண்டும், வீடு வேண்டும், பதவி வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்கிறபோதுகூட இப்படி ஒரு மகா சக்தியிடம் நம்பிக்கை வைத்து, அதனிடம் நம் அகங்காரத்தையெல்லாம் தாழ்த்திக் கொண்டு நிற்கிறோம் அல்லவா? அந்த மட்டில் இது நாஸ்திகத்தைவிட எத்தனையோ சிலாக்கியம் தானே? முதலில் ஏதேதோ வஸ்துக்களுக்காகப் பகவானிடம் போகிறோம்; பூஜை, ஆலய தரிசனம், ஸ்தோத்திரம், ஜபம் என்று செய்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக இதுகளில் பிடிப்பு உண்டாக உண்டாக மற்ற வஸ்துக்களில் பிடிப்புக் குறைகிறது. கடைசியில் பகவானுக்காகவே பகவானைப் பக்தி பண்ண வேண்டும் என்கிற ருசி பிறக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

இருந்து பிரயோஜனமில்லை.

அனுஷ்டானம் பண்ணக்கூடிய பலர் இருந்தால்தான் பிறர் அவர்களைப் பார்த்துத் திருந்த வாய்ப்பு உண்டு. ஞானம் எல்லோரும் சம்பாதிக்கலாம்; ஆனால் அனுஷ்டானங்களைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள முடியும்.

திரும்பவும் கங்கா நதிக்கு வருவோம். சுவாமி தேசிகன் அழகாகச் சொல்கிறார்: 'ஒருத்தர் கங்கையிலே ஸ்நானம் பண்ணுகிறார். அவர் உடம்பெல்லாம் வேலை செய்து வேலை செய்து வியர்த்து அலுத்துப் போயிருக்கிறது. அவர் போய் கங்கையிலே ஸ்நானம் பண்ண, புத்துணர்ச்சி ஏற்பட்டது. சந்தோஷமாக எழுந்து வந்தார். பொலிவோடு அவர் நிற்கிறார். அழுக்கு போய் விட்டது என்று நினைக்கிறார். இந்த அழுக்கு மாத்திரமா போயிற்று...? அவரை அறியாமல் இன்னொரு அழுக்கும் போயிற்று- பாபமும் போயிற்று!

பகவானுடைய திருவடியிலே ஒரு கணம் பட்ட தீர்த்தத்துக்கு இவ்வளவு மகிமை.

ஒரு க்ஷணம் பிரும்மா தன் கமண்டலத்திலேயிருந்து தீர்த்தத்தை சேர்த்தார்- பலி சக்கரவர்த்தி தானம் பண்ணியபோது. பிரும்மா சேர்த்த தீர்த்தம் பலி சக்ரவர்த்தி சேர்த்த தீர்த்தம் எல்லாமே ஒரே தாரையாய் விழுந்தது. அதுவே கங்கை! பகவானுடைய பாத தீர்த்தம்!

அப்படிப்பட்ட கங்கையிலே நாரதர் ஸ்நானம் பண்ணிக் கொண்டிருக்கிறபோது, பெரிய ஆமை அவருக்குஎதிரில் நதியில் வருகிறது.

அதைப் பார்த்தவுடனே நாரதருக்கு ஆச்சர்யமாய்ப் போய்விடுகிறது. பெரிய ஓடுடன் கண்களை மூடி மூடித் திறக்கிறது ஆமை!

வாசுதேவனைப் பார்த்துச் சொன்ன மாதிரி- 'நீதான் ஆச்சர்யம்; நீதான் தர்மாத்மா' என்று சொன்ன மாதிரி, ஆமையிடம், "நீ எப்போது பார்த்தாலும் கங்கையிலேயே இருக்கிறாயே. நாங்கள் எப்போதாவது வந்து ஸ்நானம் பண்ணி விட்டுப் போகிறோம். உன்னை மாதிரி ஆச்சர்யம் உண்டா? தன்யாத்மா யார்? மனிதனாய்ப் பிறந்து, மஹரிஷி என்று பெயர் பெற்று பிரயோஜனமில்லை. நீ எப்போதுமே கங்கையிலே இருக்கிறாய் நீயல்லவோ ஆச்சர்யம்" என்றார்.

உடனே ஆமை மனிதனைப் போல பேசியது நாரதரிடம்.

(தொடரும்)



ஆட்டி வைத்த

சேவகனா? கேசவனா?

புதுக் கட்சியை நிறுவிய கையோடு மும்பை திரும்பிய ஷரத்பவாருக்கு, ஏர்போர்ட்டில் சிவப்புக் கம்பள (நீல, மஞ்சள் கம்பளமாயுமிருந்திருக்கலாம்; கலரே தெரியாத வண்ணம், சிஷ்ய கோடிகளின் ஆக்கிரமிப்பு!) வரவேற்பு; வழியெல்லாம் கொடி ஏந்திய தொண்டர்கள். பழைய பெப்ஸி விளம்பரத்தில், சாவியைத் தொலைத்த ஷாருக்கான், காரின் இண்டு இடுக்கெல்லாம் புகுந்து வெளிப்படுவாரே.. அதே போல், ஷரத் பவாரும், டயோடாவின் 'டாப்'பைத் திறந்து கொண்டு, ஹீரோ ஸ்டைலில் வெளிப்பட்டார். (பக்கவாட்டு என்ட்ரிக்கு உருவம் ஒத்துழைக்க வேண்டாமா?) திலக் பவனைத் தலைமையகமாகக் கொண்டு தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார். 77ல், 45 எம்.எல்.ஏக்கள் இவர் காலில் விழுந்து விட்டார்கள். சர்க்கரை கூட்டுறவு ஆலைகளை ஆளும் தொழில் முதலைகளும், ஒவ்வொருவராக பவார் ஜெபம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இவரால் காலை வாரி விடப்பட்ட வசந்த் தாதா பாடீல் அண்ட் கோ கூட பவார் பஜனை பண்ணுகிறதென்றால், இந்த பாராமதிக்காரரின் பராக்ரமத்தை என்னென்பது? பேசாமல் டில்லி ஆசையைத் துறந்துவிட்டு, மஹாராஷ்டிரத்திலேயே டேரா போட்டு விடலாம். அரண்மனையில் சேவகனாக இருப்பதைக் காட்டிலும், கோயிலில் (மஹாராஷ்ட்ரத்தை குடிசை என்றால் உதைக்க மாட்டார்களா?) கேசவனாக கோலோச்சுவது எவ்வளவோ மேல் இல்லையா?

ஆட்டியா 'பாட்டியா'!

மஹாராஷ்ட்ரத்தில் 'ஆட்டியா பாட்டியா' விளையாட்டு பிரசித்தம். பாண்டி போல் கோடுகள் போட்டிருக்கும்; ஒவ்வொரு கோடாகத் தாண்டி மலை ஏற வேண்டும். ஒவ்வொரு கோட்டிலும் எதிரிகள் நின்று, தாண்டவிடாமல் தடுப்பார்கள். இவர்கள் இங்கேயுமிருக்க முடியாமல், அங்கேயும் போக முடியாமல் அல்லாடுவார்கள். அருண் பாட்டியா நிலைமை இப்போது "டிட்டோ".

பழைய சீஃப்செகரட்டரி சுப்ரமண்யத்துடனான தகராறில் ஜெயித்து, பொதுமக்கள் துணையோடு, இழந்த புனே முனிசிபல் கமிஷனர் பதவியைத் திரும்பப் பெற்று ஒரு மாதமாகவில்லை, அதற்குள் புதிய சீஃப்செக்ரட்டரி போங்கிர்வாருடன் தகராறு ஆரம்பித்து விட்டது. போங்கிர்வார் முன்னாள் புனே கமிஷனராக இருந்தபோது, 25 லட்ச ரூபாய் ரோடு காண்ட்ராக்டை, 2 கோடிக்கு, தனக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்து ஊழல் செய்த விஷயத்தைக் கிளறியிருக்கிறார். ஷரத் பவாரின் மருமகனையும் விட்டு வைக்கவில்லை. அவருக்கு சொந்தமான மூன்று கம்பெனிகள், புனே நகராட்சிக்குச் சொந்தமான குளத்திலிருந்து சட்டவிரோதமாகத் தண்ணீரை எடுத்து உபயோகிக்கின்றனவாம். இது ஒருபுறமிருக்க, "இவருக்குக் கீழே வேலை செய்ய முடியாது; மஹா திமிரும் ராங்கியும் பிடித்த ஆள்" என்று முனிசிபல் ஆபீசர்களெல்லாம் ஸ்டிரைக் பண்ணுகிறார்கள்.

இவரை எதிர்த்து லீவில் போனவர்களை பாட்டியா 'சஸ்பெண்ட்' செய்து விட்டார். 124ல், 110 கார்ப்பொரேட்டர்கள் இவரை ஒழித்துக்கட்ட கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்கள். பொதுமக்கள் மீண்டுமொரு கிளர்ச்சிக்குத் தயாராகிவிட்டனர். வெல்லப் போவது பாட்டியாவா? அவரை ஆட்டி வைப்பவர்களா?

சட்டம் செய்யப்படாத சட்டங்கள்

போலீசார் காட்டில் திடீர் மழை; தாரேபோர்வாலா அக்வேரியம் அருகில், போலீசாரின் பொழுது போக்குக்கென்று 'ஜிம்' எல்லாம் திறந்து, 10 லட்சம் டொனேஷனும் கொடுத்திருக்கிறார் ராணே! போலீசாருக்கு டார்மெட்டரி கட்டவும், அவர்கள்

தலேர் மெஹந்தி!

மும்பை மசாலா

குடும்பத்தாருக்கு உதவித் தொகை அளிக்கவும், தாணாவில் தலேர் மெஹந்தி நிகழ்ச்சி எல்லாம் நடத்தி, ஒன்றரைக் கோடி வசூல் செய்திருக்கிறன்றனர். இதுவரை சரிதான்; ஆனால், 'பாப்' நிகழ்ச்சிகளின் போது இளைஞர் இளைஞிகள் தங்களை மறந்து ஆடவெல்லாம் கூடாது என ஆர்டர் போட்டுவிட்டு, தலேர் மெஹந்தி நிகழ்ச்சியில் காவல் துறை பெருந்தலைகளுக்கு முன்னிலையிலேயே, அவர் குழுவினர், ஆடியன்சை "எழுந்திருங்கள்... ஆடுங்கள்" என ஆட்டி வைத்ததை எப்படிப் பொறுத்துக் கொண்டிருந்தார்கள்? பூர்வி என்ற வி.ஜே. 'இவ்வளவு passive ஆன ஆடியன்சை பார்த்ததேயில்லை' என்று கொசுறாக இடிக்கிறார். 'உட்கார்ந்தவாறே கையைக் காலை ஆட்டுங்களேன் என 'டிப்ஸ்' வேறு கொடுக்கிறார். பாவம், வேறு வழியில்லாமல் சிலர், உட்கார்ந்தபடியே கையை ஆட்டி பாங்க்ரா ஆடித் தொலைத்தார்கள். (தலேர் மெஹந்திக்கு அப்போதுதான் மூடு வருமாம்!) கண்ணியமாக நடந்து கொண்டால் passive; கன்னா பின்னாவென்று நடந்து கொண்டால் active ஆ?

ரீல்–டு–ரியல்

சாதாரணமாக, உண்மைக் கதைகளைத் தான் திரைப்படமாக்குவதாக சினிமாக்காரர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். 'ஸர்ஃப்ரோஷ்' விஷயத்தில் 'உல்டா' ஆகிவிட்டதே? அமீர்கான் நடித்த இந்தப் படத்தில், பாக். ISI ஏஜெண்டுகள் துப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் இந்திய எல்லைக்குள் கடத்தி வந்து, சட்டவிரோத சக்திகளைத் தூண்டுவதாகக் கதை; படம் வெளிவந்து முதல் ரவுண்டு முடிவதற்குள், நம் எல்லைத் தகராறுகளும், கார்கில் கண்ணீர்க் கதைகளும் வெளிவர ஆரம்பித்து விட்டனவே? இந்தச் சூழலில் இப்போது படம் அதிகமாக சூடு பிடித்திருக்கிறது! ஒரு முறை பார்த்தவர்கள் கூட, விழுந்தடித்துக் கொண்டு மறுபடியும் டிக்கெட் வாங்கி, உண்மைச் சம்பவங்களையும் திரைப்படச் சம்பவங்களையும் பொருத்திப் பார்த்து, அதிகமாக ரசித்து மகிழ்கிறார்களாம்! மணிரத்தினத்தின் 'பம்பா'யும், J.P. தத்தாவின் 'பார்டரு'ம் கூட ரியல் – டு – ரீல் வெற்றிகள்தான். ரீல் – டு – ரியல் வெற்றி இதுவே முதல் முறை; இந்த ஜான் மாத்தன், படத் தொழிலுக்கு வருவதற்கு முன் ஜோசியராக இருந்திருப்பாரோ?

மண்படாத மீசைகள்

வருடா வருடம் ஆருடம் சொல்வது போல், MRF காரர்கள் இம்முறையும், ஜூன் 4 ஐ, MRF ரெயின்டே எனப் பிரமாதமாக விளம்பரப்படுத்தினார்கள். ஆனால் மே இறுதியிலேயே மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. அது வெறும் கோடை மழை என ஒதுக்கிவிட்டு, "மறுபடியும் சொல்கிறோம்; ஜூன் 4 தான் MRF ரெயின்டே" எனப் பெரிசாக தினசரிகளில் விளம்பரம் செய்தார்கள். சோதனையாக, ஜூன் 4 அன்று பளிச்சென்று வெயிலடித்தது! ஒரு தூறல் கூட இல்லை; (போதாக்குறைக்கு MRF ஹீரோ டெண்டுல்கரும் அன்றைய இந்தியா - ஆஸ்திரேலியா மாட்சில் ஊத்திக்கிட்டார்!) இன்றுவரை மழை தன் முகத்தைக் கூட காட்டவில்லை; MRF எப்படி விளம்பரப்படுத்தப் போகிறது?

— ஜெயஸ்ரீ ராஜ்

சாய இளநீர் குடிச்சிருக்கீங்களா?

ஒரு தம்ளர் தண்ணி குடிக்க நினைச்சி, குடத்திலேருந்து எடுக்கறீங்க. லேசா தூசி மிதக்குது. பிரமாதமா அதிர்ச்சி ஒண்ணும் இருக்காது. விசிறிக் கொட்டிட்டு வேற தண்ணி எடுத்துக் குடிக்கறீங்க.

கடைக்குப் போறீங்க. ஒரு கோக் வாங்கி ஸிப் பண்றீங்க. பாட்டில்ல சட்டுனு ஒரு துண்டு பிளேடு தெரியுது. கலப்படக்காரங் களையோ, கம்பெனிகாரங்களையோ ஆசை தீர நாலு திட்டு திட்டிட்டுப் போயிடறீங்க. இங்க கோவம்தான் வருதே தவிர 'ஷாக்' பிரமாதமா இருக்கறதில்லை.

ஒரு பேச்சுக்கு இப்படி வெச்சுப்போம். ரொம்ப தாகமா இருக்கு. ரோடு ஓரத்துல ஒருத்தன் இளநீர் வித்துட்டிருக்கான். எட்டு ரூபா குடுத்து, ஒரு இளநீர் (பெருசா எடுப்பா.) வாங்கி, சாப்பிடத் தொடங்கினதும் புதுக புதுசான வாசனையோட இளநீர் இருந்தா எப்படி இருக்கும்? 'அதிர்ச் சியில் பேச்சு மூச்சற்றுப் போனான்'னு ஆரம்ப எழுத்தாளர்கள் எழுதிடுவாங்க.

But, இது 'ஒரு பேச்சுக்கு' வெச்சுக்கற விஷயம் இல்லை. திருப்பூர்ல இளநீர் குடிச்சா இந்த கதிதானாம்.

சாயப் பட்டறைகள் நிறைய உள்ள இடம் திருப்பூர். சாயக் கழிவுகள் அங்க வற் றாத ஜீவக் கால்வாய்களா ஓடிட்டே இருக் கறதால மண் கெட்டு, பயிர்கள் கெட்டு, மரம் கெட்டு, மனுஷனும் கெட்டுப் போற அபாயத்தை முதல் முதலா, மிகத் திறமையா ஒரு நாவல்ல ரிஜிஸ்டர் பண்ணியிருக்கார் சுப்ரபாரதிமணியன் ('சாயத்திரை', காவ்யா வெளியீடு, பெங்களூர்.)

இந்த இளநீர் சமாசாரத்தைப் படிக்கறப்ப பகீர்ங்குது! இன்னும் எத்தனையோ விஷ யங்கள். மனுஷங்களெல்லாம் பணத்தைத் துரத்த ஆரம்பிச்சாச்சுன்னா, சுற்றுச் சூழ லாச்சு, மண்ணாங்கட்டியாச்சுன்னு மனசு எப்படி அப்படி மரத்துப் போயிட முடி யும்?

Infact, இதை ஒரு நாவல்னு நினைச்சுப் படிக்கவே முடியலை. திருப்பூர் ஏரியாவை வருஷக் கணக்கா ஸ்டடி பண்ணி, சுற்றுச் சூழல் பத்தி படு அக்கறையா ஒரு ஆய் வறிக்கை சப்மிட் பண்ணியிருக்காப்பல இருக்கு. சுப்ரபாரதி மணியன் அங்கேயே வாழறவர். டாலர் புரள்ற ஊர்ல 'காலன்' குடியிருக்க குவாட்டர்ஸ் கட்டிக் குடுத்திருக் கற சாயப்பட்டறை கச்சடாக்களை நேர்ல பார்த்து மனசு கொதிச்சிப் போய் இதை எழுதியிருக்கார்.

கவர்மெண்ட் உடனடியா கவனிக்க வேண்டிய விஷயம் இது. திருப்பூர் நில வரத்தை மட்டுமில்லை. இந்த நாவலையும். (லைப்ரரி ஆர்டர் வந்திடுச்சுங்களா?)

• • •

உங்கள் உயிரோடு கலந்த சுமிக்கு லாஸ்ட் வீக் ஒருநாள் உடம்பு சரி யில்லாமப் போயி வீட்டுல ரெஸ்ட்ல இருந் ததால கொஞ்ச நேரம் டீவி பார்க்க டைம் கிடைச்சுது.

ராகம் சங்கீதம் (ராஜ்) நிகழ்ச்சில கலந் துக்கிட்ட ஒரு மாமியோட, மோகன் வைத்யா, 'சங்கீதபூர்வமா' நடத்தின ஒரு சின்ன உரையாடல்:

மோகன்: நீங்க என்ன பண்ணிட் டிருக்கீங்க?

மாமி: ஹவுஸ் ஒய்ஃபா இருக்கேன்.

மோகன்: சமையலெல்லாம் நல்லா பண்ணுவீங்களா?

மாமி: புளியோதரை நல்லா பண்ணு வேன்.

மோகன்: ஓ, அய்யங்காரா நீங்க.

மாமி (பெருமிதமுடன்) : ஆமா, ஆமா!

மோகன் (உடன் நிகழ்ச்சி நடத்தும் பெண்ணிடம் திரும்பி) : ஒரு நாள் போய்,



நாம சாப்டுட்டு வருவோமா?

வாழ்க ராகம்! வாழ்க சங்கீதம்! மோகன், நிகழ்ச்சியை இயல்பா நடத்த விரும்பினா நமக்கு ஆட்சேபனை இல்லை. ஃபர்ஸ்ட், அவர் இயல்பா ட்ரெஸ் பண்ணிட்டு வரட்டும். ராமராஜன் கணக்கா ஃப்ளோரஸன்ட் கலர்ல ஜிப்பா, அதுக்கு மேல ஒரு செயின், அதுக்கு மேல ஒரு நெளியல், குழையல் etc., etc., லாரி, சகிக்கலை.

மாமிகள் புளியோதரை மகாத்மியம் பேச 'சமைக்க வாங்க', 'சாப்பிட வாங்க'ன்னு நூறு ப்ரோகிராம்ஸ் வருது. சங்கீத மேடைன்னு பேர் வெச்சுக்கிட்டு சாப்பாட்டு சமாசாரம் பத்தி லெக்சர் அடிக்கறது அவ்வளவா நல்லா இல்லைன்னு நினைக்கறேன்.

• • •

கி. ராஜநாராயணனோட ஒரு face to face – ஆனந்த் தியேட்டர் காம்பளக்ஸ் ஆடிடோரியத்துல.

"அந்தப் பக்கம் காமா, இந்தப் பக்கம் கி.ரா.வா"ன்னு ஜோக் அடிச்சார் வந்திருந்த ஒரு இலக்கியவாதி.

ஒரு 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' எழுதிட்டதால கி.ராவை அப்படி முத்திரை குத்தறது தப்புன்னு நினைக்கறேன். அவரோட 'கோபல்லகிராமம்', 'கிடை'யெல்லாம் மறக்கவே முடியாத சமாசாரங்கள்.

பாண்டிச்சேரி யூனிவர்சிடில அவரை நாட்டுப்புறவியல் பிரிவுல கௌரவப் பேராசிரியரா அப்பாயின்ட் பண்ணப்ப, கவர்ன்மென்ட் வீடு கிடைக்க (தங்கறதுக்கு) பட்ட கஷ்டத்தைப் பற்றி தமாஷா சொன்னார்.

"வீடெல்லாம் கிடையாது"ன்னு ரைட் ராயலா சொல்லிட்டாராம் கவர்னர் சென்னாரெட்டி.

("என் ஒய்ஃப் தெலுங்குலல்லாம் மாட்லாடிப் பார்த்தா. மனுஷன் மசியணுமே?" – கி.ரா) அப்புறம் அவரோட 'கரிசல் காட்டுக் கடுதாசி' இந்தில ட்ரான்ஸ்லேட் ஆகி வர, அந்த காப்பி ஒண்ணைப் படிக்கக் கொடுத்து, அது மூலமா இவர் அருமை தெரிஞ்சதும்தான் வீடு அலாட் ஆச்சாம்.

கிராமம், கிராமமா போயி மக்கள்கிட்ட கதை கேட்ட அனுபவத்தைச் சொன்னார் கி.ரா. பெரும்பாலான கதைகள் மரம் வெட்டறவங்களைப் பத்தியே இருந்ததாம்.

"ஒரு காலத்துல அந்தப் பகுதி பெரிய காடா இருந்திருக்கணும். அப்பத்தானே மரம் வெட்டறவங்க நிறைய இருந்திருக்க முடியும்? இந்த ஆங்கிள்ல யோசிச்சிட்டே போனா, நம்ம முன்னோர்கள் என்னவா இருந்தாங்க, – ஊர் எப்படி இருந்தது, என்ன தொழில்கள் நடந்தது, எப்படி வளர்ந்தாங்க, வாழ்ந்தாங்கன்றதைக் கதைகள் மூலமாவே புரிஞ்சிக்க முடியும்''னு சொன்னார் கி.ரா.


அவர் பேச்சு ஒரு சுவாரஸ்யம்னா, கூட்டத்தை ஏற்பாடு பண்ணின உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் ராமர் இளங்கோ, லாஸ்ட் ரோல ஒரு தனி சேர்ல ஹாயா கால் நீட்டி, சொர்க்கமா தூங்கிட்டிருந்தது பார்க்க வேற விதமான சுவாரஸ்யம்!

கி.ரா.வோட, கதைகள் மட்டும் இல்லை, அவர் பேச்சும் தாலாட்டும்!

சுமி

கூட்டணிக் காட்சிகள்

த.மா.கா. தலைவர் மூப்பனார் நடத்திவரும் ஆலோசனைகள், அவர் சோனியாவின் கட்டளையை ஏற்றுக் கொண்டு காங்கிரஸ் – அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் சேர இறுதியில் முடிவெடுத்து விடுவாரோ என்று பயப்பட வைக்கின்றன. அப்படியொரு தர்மசங்கட நிலை ஏற்பட்டு, ஜெ.வைச் சந்திக்க அவர் போயஸ் தோட்டம் போனால்? –



சசிகலா : வெளியே மூப்பனார் கதவைத் தட்டுறார். திறக்கச் சொல்லவா?

ஜெ. : வந்து அரை மணியாத்தானே தட்டுறார்? இன்னம் ஒரு மணி நேரம் கூடத் தட்டட்டுமே? அப்புறமா திறக்கலாம்.

சசிகலா : ஒண்ணு பண்ணுவோம். முதல்ல வெராந்தாவுல நிக்க வச்சு தினகரன்ட்ட பேசச் சொல்லுவோம். அப்புறமா உள்ள கூப்பிட்டு நீங்க பேசலாம். சரியா?

ஜெ. : நீ சொன்னாச் சரியாத்தான் இருக்கும். அரை மணி பொறுத்து அவரை உள்ளே விடச் சொல்லு.

மூப்பனார் : தட்டித் தட்டிக் கை எல்லாம் வலிக்குதுங்க. அங்க சோனியாட்ட பேசிப் பேசி வாய் வலி வந்திட்டுது. (காவலாளியைப் பார்த்து) உள்ளே வரலாமான்னு போன்ல கேட்டுட்டு எங்களை உடக் கூடாதா?

காவலாளி : தில்லிலேர்ந்து வர்றவங்களை மட்டும்தான் உடனே உடணும்னு அம்மா உத்தரவுங்க. ராயப்பேட்டை, சைதாப்பேட்டைலேர்ந்து வர்றவங்களைக் கொஞ்சம் சாவகாசமா, அம்மாவும் சின்னம்மாவும் ஃப்ரீயா இருக்கையிலதான் அனுப்பச் சொன்னாங்க.

பீட்டர் அல்போன்ஸ் : அம்மா, தாயேன்னு நான் வேணாக் குரல் கொடுக்கட்டுமா?

(ஓரமாகப் படுத்திருந்த திண்டிவனம் ராமமூர்த்தி எழுந்து வந்து –)

திண்டிவனம் : நான் வந்தே ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆச்சு. தட்டித் தட்டிக் கை வலி எடுத்து ஓரமாப் போய்ப் படுத்திட்டேன். தில்லிலேருந்து யாராணும் வருவாங்கன்னு பார்த்தா அவங்களையும் காணோம்! எதுக்கும் நீங்களும் வேணும்னா ஓரமாப் படுத்துட்டிருங்க. புரட்சித் தலைவி கூப்பிட்டாங்கன்னா நான் முதல்ல போய்ப் பேசிட்டு வந்திடறேன்.

மூப்பனார் : எல்லாம் என் தலையெழுத்து... இப்படிக் காலங் கார்த்தாலயே கால் கடுக்க நின்னு, கண்டவங்க பேசறதை எல்லாம் கேட்டிட்டிருக்க வேண்டியிருக்கு!

காவலாளி : ஒங்களை அம்மா கூப்பிடறாங்க.

மூப்பனார் : வாங்க பீட்டர். அம்மா கூப்புடறாங்களாம்.

காவலாளி : ஒங்களை இல்லீங்க. திண்டிவனம் ராமமூர்த்தியாமே? இங்க ராத்திரியிலேருந்து ஓரமாப் படுத்திருந்தாரே அவர் தானே?

திண்டிவனம் : (முண்டியடித்துக் கொண்டு வந்து) பார்த்தீங்களா, அப்பவே சொன்னேன். அம்மா என்னைத்தான் முதல்ல கூப்பிடுவாங்க!

மூப்பனார் : கோபாலபுரத்துக்குப் போயிருந்தம்னா கீழே வந்து வரவேத்து மேலே கூட்டிட்டுப் போய்ப் பேசியிருப்பார் கலைஞர். இங்க நமக்கு வந்த கதியப் பாத்தீங்களா?

பீட்டர் : விதிங்க, நம்ம விதி!

(திண்டிவனம் போன வேகத்தில் திரும்பி வருகிறார்)

மூப்பனார் : என்ன ஆச்சு? அதுக்குள்ளயுமா தொகுதிப் பங்கீடு பண்ணிட்டு வந்துட்டீங்க?

திண்டிவனம் : அய்யோ, அதை ஏன் கேக்கறீங்க? சோனியாம்மா அனுப்பற தில்லித் தலைவர்கள்ட்டத்தான் பேசுவாங்களாம்! போய்ட்டு வாங்கன்னுட்டாங்க.

பீட்டர் : யாரு, புரட்சித்தலைவியா சொன்னாங்க?

திண்டிவனம் : அவங்களை யாரு பார்க்க உட்டாங்க? சின்னம்மாதான்!

(மூப்பனாரும் பீட்டர் அல்ஃபோன்சும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, சி.பி.எம். தலைவர் சங்கரய்யா மெல்லப் பதுங்கிப் பதுங்கி வருகிறார்.)

சங்கரய்யா : இங்கியா இருக்கீங்க நீங்க? சத்யமூர்த்தி பவன் போய்ட்டு நேரா இங்க வர்றேன்!

மூப்பனார் : தொகுதிப் பங்கீடு முடியற வரை சத்தியமூர்த்தி பவன் பக்கமே போக முடியாது. ஓங்க நிலைமை என்ன?

சங்கரய்யா : எங்க தலைவர் சுர்ஜித் என்னை காலைலேருந்து ராத்திரி பத்து மணி வரை இங்கியே நிக்கச் சொல்லியிருக்காரு. வேற கட்சித் தலைவர்கள் யாரானும் வந்தாங்களா?

பீட்டர் : இல்லீங்க. திண்டிவனத்தார் தலைக்குத் துண்டை வச்சுப் பழையபடி படுக்கப் போய்ட்டார். ஃபார்வர்டு பிளாக் ஆளுங்க முன்னயே வந்துட்டுப் போயிட்டாங்க. நல்லகண்ணு இனிமேத்தான் இங்க வருவார் போல.

சங்கரய்யா : ஐயோ, என்னமா ஆயிடிச்சு நம்ம கட்சிப் பொழப்பு! ஆமா, உண்மையாச் சொல்லுங்க. இந்தக் குழப்பத்துல நம்ப கட்சி எது, கட்சித் தலைவர் யாரு-ன்னு எல்லாம் ஏதாவது ஞாபகம் இருக்குதா?

(வலது கம்யூனிஸ்ட் தலைவர் நல்ல கண்ணு வருகிறார்.)

நல்லகண்ணு : ஐயோ, இந்த வெயில்ல நிக்கறீங்களே!

பீட்டர் : ஆமாங்க. உள்ள போனா ரொம்ப குளிருதுன்னு வெளியவே நின்னுட்டோம்.

நல்லகண்ணு : உங்க முடிவைப் பார்த்துத்தான் எங்க மூணாவது அணி உருவாக்கற முடிவைச் சொல்லணும்னு காத்திட்டிருக்கோம். நீங்க என்னடான்னா வெயில் - மழை பாக்காம வெளியே நின்னுட்டிருக்கீங்க இங்க!

பீட்டர் : வெயில் மட்டும்தாங்க. மழை-கிழை எதுவுமில்லே.

மூப்பனார் : நான் எங்க முடிவைச் சொல்லி அனுப்பறேன். நீங்க வீடு போய்ச் சேருங்க. போயி, உங்க தில்லி தலைவர் ஏ.பி. பர்தன் இருந்தார்னா அவரை வரச் சொல்லி ஒரு போன் போடுங்க. உங்ககிட்ட பேச மாட்டேன்னு அம்மா சொல்லிட்டா, காத்துக்கிட்டிருந்தது வேஸ்ட்டாப் போகும்!



(உள்ளே ஜெ. பயங்கரமாகத் தும்மும் சத்தம் போயஸ் தோட்டத்தை உலுக்கிறது.)

மூப்பனார் : என்னங்க, எர்த்க்வேக்கா?

பீட்டர் : இல்லேங்க. அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். இன்னிக்குத் தனி நீதி மன்றம் போகிற வேலையிருக்கில்லே!

(உள்ளே -)

சசிகலா : எல்லாதும்



''எதுக்கு வீட்டுச் சுவரிலெல்லாம் 'சுகம்' 'சுகம்'னு கொட்டை எழுத்தில் எழுதி வைச்சிருக்கீங்க?''

''என் மனைவி அடிக்கடி என்ன சுகத்தைக் கண்டேன்'னு அலுத்துக் கொள்ளுறா. அவ வாயை அடைக்கத்தான்!''

– எஸ். மோகன்

மலையும் இங்கியே தும்மி வேஸ்ட் பண்ணிடாதிங்க. கோர்ட்டுக்குப் போய், ஜட்ஜ் முன்னாடி தும்ம வேணாம்?

ஜெ. : இல்லே, நிஜமாவே வந்துடுச்சு இந்தத் தும்மல்! கோர்ட்டுல வேணா ரெண்டு மூணு இருமல் இருமறேன். பயப்படாதே... ஆமா, வெளியில கூட்டம் எப்படி இருக்கு? யாரெல்லாம் காத்துக்கிட்டிருக்காங்க? அப்துல் லத்தீஃப் வந்திட்டாரா? வந்தா காக்க வைக்காம உடனே உள்ளே அனுப்பச் சொல்லு.

(அப்துல் லத்தீஃப் அரக்கப் பரக்க வருகிறார். வெளியே)

லத்தீஃப் : அம்மா கூப்புட்டாங்களா?

காவலாளி : இப்பத்தான் உள்ளயிருந்து மெஸெஜ் வந்துது. நீங்கதான் அப்துல் லத்தீஃபா? உள்ள போங்க. சீக்கிரமாப் போங்க!

மூப்பனார் : நாங்க கால் கடுக்கக் காத்துக்கிட்டிருக்கோம் காலைலேருந்து! இப்ப வந்த உங்களை உடனே கூப்புட்டுட்டாங்களே! போங்க, போய்ட்டு வாங்க!

நல்லகண்ணு : அப்ப, நான் போய்ட்டு வரேங்க. என்ன முடிவு எடுத்தாலும் சொல்லி அனுப்புங்க.

மூப்பனார் : செப்டம்பர்லதானே தேர்தல்? ஜூலை கூட ஆகலியே இன்னும்? போயஸ் அம்மா, ஜன்பத் அம்மா எல்லாரையும் கலந்து• ஆலோசனை பண்ணிட்டு மெதுவா சொல்றேன்.

நல்லகண்ணு : அதுக்குன்னு செப்டம்பர் வரை இழுத்தடிச்சிடாதிங்க. வரேங்க!

பீட்டர் : ஏங்க, எத்தனை நேரம் – சாரி, எத்தனை நாள் இப்படி வெளியே நிக்கணும்?

மூப்பனார் : ஷ்... அவசரப்படக் கூடாது. உள்ளே அப்துல் லத்தீஃப் கூட, மதச்சார்பற்ற கூட்டணி பத்தி அம்மா பேசி முடிச்ச உடனே நம்மைத்தான் கூப்புடுவாங்க. பொறுமையா இருக்கணும்!

பீட்டர் : ஐயோ, அதப் பாருங்க. த.மு.மு. தலைவர் ஜவாஹிருல்லாவும் மகமது கௌகம் வராங்க! நாம்ப துண்டை விரிச்சு சங்கரய்யா மாதிரி ஓரமாப் படுத்திருப்பம். அம்மா மனசு வெச்சு, கூப்புடறபோது போவோம்!

மூப்பனார் : நீங்க சொல்றதுதான் சரின்னு தோணுது. பாருங்க, அதோ வந்துட்டிருக்காரு பண்ருட்டியார்.

காவலாளி : யாருங்க த.மு.மு. கழகத் தலைவர்கள்? அம்மா உடனே வரச் சொல்றாங்க! போங்க, போங்க.

பீட்டர் : பாத்தீங்களா, நான் என்ன சொன்னேன்?

மூப்பனார் : பொறுமையா இருக்கணும் பீட்டர். அவசரப்பட்டு சத்யமூர்த்தி பவனுக்குத் திரும்பிட்டா, சோனியாம்மாகிட்ட இருந்து டெலிபோன் வந்தா என்ன பதில் சொல்லுவீங்க? பொறுமையா இருங்க. அம்மா நம்பளையும் கூப்புடுவாங்க.

பீட்டர் : அய்யோ, அதப் பாருங்க. வீரமணி வேகமா வர்றார். கொஞ்சம் ஒதுங்கியே இருங்க. இடிச்சுடப் போறாரு.

மூப்பனார் : நல்லா இருக்கீங்களா?

வீரமணி : ஏன், என்னப் பார்த்தா நல்லா இருக்கற மாதிரி தெரியலியா?

பீட்டர் : அவர்ட்ட ஏன் பேச்சுக் குடுக்கறீங்க?

காவலாளி : வீரமணி ஐயா இருக்காரா இங்க? நீங்கதானா? போங்க உள்ளே. அம்மா கூப்புடுறாங்க.

மூப்பனார் : வாங்க பீட்டர். போற போக்கைப் பார்த்தா, நம்பளக் கூப்புடுவாங்கன்னே எனக்குத் தோணல்லே. போவம், வாங்க!

பீட்டர் : பொறுமை, பொறுமை! சோனியாம்மா போன் பண்ணினா நீங்கதானே பதில் சொல்லணும்? போய் ஓரமா குந்துவோம், வாங்க.

பி.கு. : இந்தக் கற்பனையைப் படித்த மூப்பனார் மீண்டும் த.மா.கா. அரசியல் நிர்வாகக் குழுவைக் கூட்டி ஆலோசனை நடத்தி வருவதாகச் செய்தி!

கற்பனை : **சாருகேசி**

மாநகராட்சி மௌனம் சாதிப்பதேன்?





போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சென்னையில் ஆங்காங்கே மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இது குறித்து, Citizen, Consumer And Civil Action Group (CAG) எனப்படும் தொண்டு நிறுவனம், சென்னை மாநகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறது.

'போக்குவரத்து சுலபமாக நடைபெற எத்தனையோ எளிதான, அதிகச் செலவு இல்லாத, தொல்லை இல்லாத வழிமுறைகள் இருக்க, இப்படி 23 இடங்களில், சென்னை நகர் முழுக்க, ஒரே சமயத்தில் மேம்பாலங்கள் கட்ட என்ன அவசியம் வந்தது? பொதுமக்களிடம் ஏதாவது கருத்துக் கேட்டீர்களா? 120 பேரிடம் ஒரு கேள்விப் படிவத்தைக் கொடுத்துப் பதில்கள் பெற்றீர்கள். அத்தோடு சரி. இத்தனை கோடி ரூபாய்கள் செலவழித்து இவற்றைக் கட்டத்தான் வேண்டுமா? போக்குவரத்தைச் சீராக்க இது ஒன்றுதான் வழியா? இத்தனை பிரும்மாண்டமான சாலைச் சீரமைப்பு ஏன் நமது நகர மாஸ்டர் பிளானில் இடம் பெறவில்லை? சென்னை மாநகராட்சியிடம் அத்தனை நிதி வசதி இருந்தால், ஏன் அதை இப்போதிருக்கிற சாலைகள் மேம்பாட்டுக்கும், தெருவிளக்குகளுக்கும், சாலை ஓரப் பாதைகளான 'பேவ்மென்ட்' வசதிகளுக்கும் செலவிடவில்லை?

'எத்தனை மரங்களை வெட்டிச் சாய்த்திருக்கிறீர்கள்? இவை அத்தனையும் வெட்டப்பட வேண்டியவைதானா?'

– என்று அக் கடிதத்தில் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது சி.ஏ.ஜி இதுவரை ஆணையர் பதில் எதுவும் எழுதாமல் மௌனம் சாதிப்பது வியப்பளிக்கிறது என்கிறது சி.ஏ.ஜி.

தகவல் பெறும் உரிமை பொதுமக்களுக்கு இருக்கிறது என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பு- ஆட்சியிலிருப்பவர்களும் – அதிகாரத்திலிருப்பவர்களும் பொதுமக்கள் கேள்வி கேட்பதை விரும்புவதில்லை என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டு!

— எஸ்.வி.என்.



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 950/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

